
KALKI 11.3.2001
ரூ. 5.00
கல்கி
அன்பளிப்பு:
ரீ லக்ஷ்மி ஹயவதன
பெருமாள்
வண்ணப்படம்
சினிமா ஃபார்முலா:
சப்பைக்கட்டு...?



இப்போது 100 கிராம் அதிக ஸெரிலாக்.
ஆனால் விலை அதிகம் இல்லை*.



இப்போது ஸெரிலாக் வீட் மற்றும் ஸெரிலாக் வீட்-ஆப்பிளின் ஒவ்வொரு 400 கிராம் ரீஃபில் பேக்குடன் உங்களுக்கு கிடைக்கிறது 100 கிராம் ஸெரிலாக் அதிகமாக—அதாவது சமச்சீர் போஷாக்கு. அதனால் உங்கள் குழந்தை ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் இருப்பான் எப்போதும்.

* ஆஃபர் ஸ்டாக் தீரும்வரை மட்டுமே. இந்த ஆஃபர் இன்றியும் பேக்குகள் கிடைக்கின்றன.

உங்கள் குழந்தைக்கு ஸெரிலாக் அனுகூலத்தை அளியுங்கள்.

IMPORTANT NOTICE : MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY. INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.

महत्वपूर्ण सूचनाः माँ का दूध आपके बच्चे के लिए सर्वोत्तम है। ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करें।

Mudra : NES : 2296 Tam

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

வாடகைத்தாய் கட்டுரையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை!



அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

18.2.2001 கல்கியில் டாக்டர் கமலா செல்வராஜ் அவர்களுடைய பேட்டியைப் படித்தேன்.

மனிதன் இன்று அறிவியலின் துணையோடு பிரும்மாவாக ஆகிக்கொண்டிருக்கிறான். இந்த முயற்சியில் பெரிய வெற்றி பெற்றிருக்கும் கமலா செல்வராஜுக்கு மருத்துவத் துறையில் இருக்கும் நான் தலை வணங்குகிறேன். அவர் முயற்சி உன்னதமானதுதான். ஆனால் வாடகைத்தாய் பற்றிய கட்டுரையை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

தங்களுடைய மரபணுக்கள் (genes) கொண்ட குழந்தைதான் வேண்டும் என்ற

காரணத்தினாலும் தங்களிடம் லட்சக் கணக்கில் செலவு செய்யும் சக்தி இருப்பதாலும் பல குழந்தையில்லாத தம்பதியர் இந்த முயற்சிக்குத் தயாராகிறார்கள். முயற்சி வெற்றி பெறும் பொழுது அவர்கள் அடையும் ஆனந்தம் அளவே இல்லாதது என்றாலும் வாடகைத் தாயாக இருக்க மனித நேயத்தோடு சம்மதிக்கும் அந்தப் பெண்ணைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

ஒரு பிரசவத்தின் பொழுது ஏற்படும் அந்த மன உளைச்சலும் உடல் அயர்ச்சியும் எந்த மாத்திரை மருந்துகளாலும் சரி செய்ய முடியாது. ஒரு பெண் அதைத் தாங்கிக் கொள்கிறாள் என்றால் பிறக்கப் போகும் அந்தப் பிஞ்சு முகத்தைக் காணத்தான். ஆனால் வாடகைத்தாய்க்கு இந்த சந்தோஷம் கூட கிடைக்கப்போவதில்லை. வறுமையின் கொடுமையால், அவள் இன்று சம்மதித்தாலும், பின்னால் இதைப் பற்றி நினைத்துப் பார்க்கும்பொழுது நிச்சயம் வருந்துவாள்.


"நீ வாடகைத் தாய் பெற்றெடுத்த குழந்தை!" என்று பிற்காலத்தில் தன் குழந்தைகளிடம் சொல்லும் அளவிற்குத் தெளிவும், மற்றொரு பெண்ணை தன் சகோதரியாக பாவித்து பணிவிடை செய்யும் அளவிற்கு அன்பும் படைத்த சாந்தி நிச்சயம் பாராட்டுக்குரியவர் தான். இவ்வளவு பெரிய மனது படைத்த அவர் ஏன் ஒரு அனாதைக் குழந்தையைத் தத்தெடுத்துக் கொண்டிருக்கக் கூடாது?

நூற்றுக்கணக்கான அனாதை ஆசிரமங்களும் ஆயிரக்கணக்கான அனாதைக் குழந்தைகளும் நம் நாட்டில் பொழுதொரு வண்ணமாகத் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒரு குழந்தையைத் தத்தெடுத்துக் கொண்டு, சிகிச்சைக்காக செலவழித்த பணத்தை அந்தக் குழந்தையின் வளர்ப்பில் செலவழித்திருக்கலாம். அல்லது அந்தக் குழந்தையைத் தந்த ஆசிரமத்துக்குக் கொடுத்திருக்கலாம்! அப்படிச் செய்திருந்தால் அவருடைய பெருந்தன்மை இன்னும் உன்னதமாக வெளிப்பட்டிருக்கும்.

டாக்டர் கமலா செல்வராஜ் போன்றவர்கள், தான் எடுத்துக் கொள்ளும் ஒவ்வொரு முயற்சியிலும் மனித நேயத்தைக் காட்டுகிறார்கள். வாடகைத் தாயை அவர் தேர்ந்தெடுக்கும் முறையே இதற்கு சாட்சி. அனாதை ஆசிரமங்களில் உள்ள குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்ளும்படி சிகிச்சைக்காகத் தன்னிடம் வரும் தம்பதிகளிடம் எடுத்துச் சொல்ல அந்த மனிதநேயத்தைப் பயன்படுத்தக் கூடாதா?

அவர் சொல்ல வேண்டிய விதத்தில் சொன்னால் மக்கள் நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள்!

இப்படிக்கு,
டாக்டர் நர்மதா அசோக்
M.B.B.S., DNB
சென்னை- 4



தேர்வுகளில் வெற்றி நிச்சயம்!

தேர்வுகளை எழுதப்போகும் மாணவர்களே! தினம் ஒரு தடவையாவது இந்த ஸ்லோகத்தைச் சொல்லி ஹயக்ரீவரைப் பிரார்த்தியுங்கள்- வெற்றி நிச்சயம்!

ஞாநாநந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம்!
ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவமுபாஸ்மஹே!!

அன்பளிப்பு:
இந்த இதழுடன்
ஸ்ரீ லக்ஷ்மி ஹயவதன பெருமாள்
வண்ணப்படம்.

அடுத்த இதழுடன்
சிருங்கேரி சாரதா தேவி
வண்ணப்படம்.

லாலுவுக்குப் புது வீடு!



பினாமி...



உள்துறை அமைச்சர் அத்வானி தான், தனியாக அமைக்கப்பட்டிருக்கும் காஷ்மீர் விவகாரத் துறைக்கும் தலைவர். ஆனால் காஷ்மீர் விவகாரங்களில் பிரதமர் அலுவலகத்தின் சில குறிப்பிட்ட அதிகாரிகளும், வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கும்தான் முடிவுகள் எடுக்கிறார்களாம். எடுத்த முடிவுகளை அத்வானிக்கு வெறுமனே தெரிவிப்பதோடு சரியாம். முடிவுகள் எடுக்கப்படுமுன் அவரைக் கலந்து ஆலோசிப்பதே இல்லையாம்.


'க்ளாஸ்மேட்'டின் கதி!



மத்திய அரசு, சி.பி.ஐ. இயக்குனராக தமிழ்நாட்டுக்காரரான ஆர்.கே. ராகவனை நியமித்தது செல்லாது என்று கர்நாடக மாநிலத்து மத்திய நிர்வாக ஆணையம் கூறியது. இந்த வழக்கைப் போட்ட சக ஐ.பி.எஸ். அதிகாரியான தினகர், ராகவனின் பேட்ச்காரர் (1963). சென்னை விவேகானந்தா கல்லூரியிலும், பின்னர் மாநிலக் கல்லூரியிலும் ஒன்றாகப் படித்தவர்கள்.

தனி ரூல்!

குஜராத் பூகம்பச் சாவுகள் காரணமாக, அரசு முறையிலான விருந்துகள் ரத்தானதும், பிரதமரின் மலேசியா, ஜப்பான் விஜயம் ரத்தானதும் ஜனாதிபதியின் ஜெய்ப்பூர் விடுமுறை நிகழ்ச்சிகள் ரத்தானதும் தெரிந்த விஷயம். ஆனால், ராஷ்டிரபதி பவனில், ஒரு விருந்து நடந்ததாம். ஜனாதிபதி கே.ஆர்.நாராயணனின் மகள் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்ததற்காக அது தரப்பட்டதாம். சுமார் நூறு பிரமுகர்கள் இந்த விருந்தில் கலந்து கொண்டதாகச் செய்தி!



பீகார் முன்னாள் முதல்வர் லாலுபிரசாத் யாதவ் புது வீட்டுக்குக் குடி போகிறார். இதுவரை, முதல்வர் ராப்ரி தேவியுடன் நெ.1, ஆனி ரோடில் குடியிருந்தார். தற்போது, இந்த வீட்டுக்குப் பின்னால் இருக்கிற பங்களாவைப் புதுப்பித்து விட்டார்கள். நடுவே இருக்கும் மதில் சுவரைக் கொஞ்சம் இடித்துவிட்டு, ஒரு 'கேட்'டும் வைத்துவிட்டார்கள். லாலு எப்போது வேண்டுமானாலும், முதல்வரும் மனைவியுமான ராப்ரி தேவியைப் போய்ப் பார்க்கத்தான் இந்த ஏற்பாடு. லாலுவுக்குப் பிடித்தமான மாட்டுக் கொட்டிலும் தயாராகிவிட்டது. முதல்வர் இல்லத்தில் இருப்பதுபோல மீன் பிடிக்கிற குளம் தேவை என்று லாலு விரும்பினார். உடனே அதற்கும் ஏற்பாடு செய்துவிட்டார்கள். மாட்டுத் தீவன ஊழல் வழக்கு விசாரணைக்காக இனி ஒவ்வொரு தடவையும் முதல்வரின் வீட்டுக்குள் நுழைந்து லாலுவைச் சந்திக்கும் சங்கடமான பணிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்ட சந்தோஷம் சிபிஐக்கு! லாலுவின் செல்ல நாய் ஜிம்மி இனி இந்தப் புதிய பங்களாவில்தான் லாலுவுடன் இருக்கும். பெரிய பங்களா இருக்கிறது போதாது என்று ஒரு சின்ன ஆசிரம குடிசையும் தயாராகி வருகிறது. "கபீர்தாஸின் பாட்டுக்களைப் பாடிக்கொண்டு இருக்கப் போகிறேன் இங்கே!" என்கிறார் லாலுஜி!

தொகுப்பு : **சித்தார்த், மௌலி**



ஜெயலலிதாவிடம்

பிரசார மேடை

திருப்பூர்
எம்.ஏ. சத்தார்
பொதுச் செயலாளர்
தமிழ் மாநில தேசிய லீக்

“கலைஞர் பா.ஜ.கவுடன் சேர்ந்து கூட்டணி அமைத்திருப்பதால் தமிழகத்தில் மதவாதம் தலைதூக்கி விட்டது; எனவே தி.மு.க-பா.ஜ.க. அணியை வரும் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும்'' என்று ஜெயலலிதாவுடன் இணைந்திருக்கும் எம்.ஏ. லத்தீப் சில வாரங்களுக்கு முன்னர் இப்பகுதியில் எழுதியிருந்ததைப் படித்தவுடன் எனக்கு காலத்தின் கோலத்தை எண்ணி சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. சிறுபான்மை மக்களுக்கு, குறிப்பாக, முஸ்லிம்களுக்கு நினைவாற்றல் மிகவும் குறைவு என்று கணித்து தனது அரசியல் சித்து விளையாட்டைச் செயல்படுத்தப் பார்க்கிறார் லத்தீப். இவரிடம் மட்டுமல்ல; இவரது சமீபத்திய எஜமானியம்மா ஜெயலலிதாவிடமும் முஸ்லிம் மக்கள் ஏமாறமாட்டார்கள். அவர்களுக்கு வரும் தேர்தலில் சரியான நெத்தியடி கொடுக்கப் போகிறார்கள்.

யார் இந்த லத்தீப்? இவர் என்ன ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரதிநிதியா? இவர் சொன்னால் ஜெ.வுக்கு மக்கள் வோட்டுப் போட்டு விடுவார்களா? கடந்த முப்பது ஆண்டுகளாக முஸ்லிம் சமுதாயத்துக்கு நான்தான் தலைவர் என்று சொல்லிக் கொண்டு கலைஞரிடம் பதவிகளைப் பெற்றுக் கொண்டு சுய லாபங்களுக்காக அவற்றைப் பயன்படுத்தியவர்தான் இவர். 1989ல் வக்ப் வாரியத் தலைவர் பதவியில் இவரை அமர்த்தினார் கலைஞர். பின்னர் 1996ல் பதவிக்கு மீண்டும் வந்தபோதும் வக்ப் வாரியத் தலைவராக இவருக்குப் பொறுப்பு கொடுத்தார் கலைஞர். பெற்ற பொறுப்பை வைத்துக் கொண்டு ஏதாவது நல்லது செய்திருக்கிறாரா? ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமாக இவர் மேல் ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. கலைஞர் அரசு

ஏமாற மாட்டோம்!

தோழமைக் கட்சித் தலைவர் என்றும் பாராது விசாரணை வைத்த போதுதான், இவரது சந்தர்ப்பவாதம் வெளிப்பட்டது. 1999 பாராளுமன்றத் தேர்தலில் கலைஞர், பா.ஜ.கவுடன் கூட்டு சேர்ந்ததைக் காரணமாகச் சொல்லி அம்மாவிடம் அடைக்கலமாகி 'தேசிய லீக்' கட்சியைப் பிளந்து விட்டார். இதே லத்தீப்தான் அதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் பா.ஜ.க. ஆட்சியில் மதவாதம் இல்லை என்று சர்டிஃபிக்கேட் கொடுத்தார். ஊழல், ஊழலுடன் கைகோத்தது.

பா.ஜ.கவைக் காரணம் காட்டி கலைஞருக்கு எதிராக முஸ்லிம் வோட்டுகளைத் திரட்டி விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார் ஜெயலலிதா. அது ஒரு போதும் நடக்காது.

1972ல் காலமானார் காயிதேமில்லத். ஆனால் 1980ல் அரசியலுக்கு வந்த ஜெயலலிதா, 19 ஆண்டு காலம் கழித்து, தேர்தல் ஆதாயத்தை மட்டும் மனத்தில் வைத்து காயிதே மில்லத் சமாதிக்கு மலர் போர்வைப் போர்த்த வந்தது எங்களுக்குத் தெரியாதா? 1992ல் தேசிய ஒருமைப்பாடு கூட்டத்தில் கரசேவைக்கு ஆதரவாகப் பேசியது மட்டுமல்லாமல், மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் ஆட்களைத் திரட்டி பாபர் மசூதியை இடிக்க ஆட்களை அனுப்பியவர்தான் ஜெயலலிதா. இதுவும் எங்கள் சமுதாயத்துக்கு நன்றாகத் தெரியும். அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள், சிறுபான்மையோர் கல்வி வசதிக்காக சில சலுகைகளைச் செய்து வைத்திருப்பதை எதிர்த்துப் பேசியதும் இவர்தான் என்பதையும் மறக்க முடியுமா? பொது சிவில் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று கூறி எங்களைப் புண்படுத்தியவரும் இவர்தான். இப்படி முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகப் பேசியவர்தான் இன்று சமுதாயத்தை ஏமாற்றப் பார்க்கிறார். இவர்தான், பா.ஜ.க. தமிழகத்தில் கால்கோள் வைக்க மலர் பாதை போட்டார் என்பதும் எங்களுக்கு மறக்காது.

தி.மு.கவுக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள உறவு என்பது காலங்காலமாக உரமிட்டு வளர்ந்த உறவு. சமுதாய மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டது. காயிதே மில்லத் அண்ணாவிடமும், கலைஞரிடமும் நெருக்கமாகப் பழகியவர். சிறுபான்மையோரின் காவல் தெய்வம் கலைஞர்தான் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். உலமாக்களுக்கு ஓய்வு ஊதியம், உருது மொழி வளர்ச்சிக்கு உருது அகதமி, காயிதே மில்லத்துக்கு மணிமண்டபம், உருது மொழி பேசும் முஸ்லிம்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தது என்று இஸ்லாமியர்களுக்கு கலைஞர் செய்துள்ள சாதனைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். கலைஞர் கூட்டணியில் இருப்பதால்தான் அடக்கி வாசிக்கிறது பா.ஜ.க. பிரதமரே கூட "பாபர் மசூதி விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்புப்படிதான் நடப்போம்" என்று சொல்லியிருக்கிறார். பா.ஜ.கவால் சிறுபான்மையோருக்கு ஏதேனும் ஆபத்து வருமானால் முதலில் கூட்டணியை விட்டு வெளியே வருபவர் கலைஞராகத்தான் இருக்கும்.

பல நல்ல திட்டங்களால் தமிழகம் வளர்ச்சிப் பாதையில் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பணிகள் தொடரவும், மீண்டும் தமிழகம் ஜெயலலிதாவின் வேட்டைக் காடாக மாறாதிருக்கவும் உதயசூரியனுக்கே வாக்களிப்போம்!



படம்: ராஜன்

அழைக்கிறது அமெரிக்கா!

கல்கி - டயானா வொர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்

‘உய்ங்’னு ப்ளேன்ல போலாமா?



குவிஸ் கூப்பன் — 18

1) அவ்வை சண்முகி திரைப்படத்தில் பெண்ணாக வேடமிட்ட கதாநாயகன் யார்?

2) ஷேக்ஸ்பியர் எழுதிய 'மர்ச்சண்ட் ஆஃப் வெனிஸ்' என்ற நாடகத்தில் ஆண் வழக்கறிஞராக வேடமிட்டு வாதாடி ஷைலக்கை வென்றவள் யார்?

3) 'பார்த்திபன் கனவு' என்ற சரித்திரப் புதினத்தில் சிவனடியாராக வேடமிட்டு வந்த கதாபாத்திரம் யார்?

4) பிட்டுக்காக மண்சுமக்கத் தயாரான தொழிலாளியாக வேடம் புனைந்தது யார்?

5) எந்த வேடத்தில் மாரீசன் தோன்றி சீதையை ராவணன் அபகரிக்க உதவினான்?

6) நவராத்திரி திரைப்படம் இந்தியில் உருவானபோது அதில் ஒன்பது வேடங்களைத் தாங்கிய நடிகர் யார்?

விடைகள்:

1) ....

2) ....

3) ....

4) ....

5) ....

6) ....

குவிஸ் போட்டி — 18

இந்த வார குவிஸ் "மாறுவேஷ ஸ்பெஷல்." யோசித்து கூப்பனில் பூர்த்தி செய்து முந்தைய வாரங்களில் செய்ததைப் போலவே மற்ற கூப்பன்களோடு பூட்டி வையுங்கள். இருபத்தி ஆறு வார இறுதியில் எல்லா கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். இதில் மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதும் ஒரு நபருக்கு

அமெரிக்கப் பயணம் பரிசு!

ஐரோப்பா பயணம் இரண்டாவது பரிசு!

மலேஷியா — சிங்கப்பூர் பயணம் மூன்றாவது பரிசு!

இந்த மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் சரியான பதிலை எழுதியிருந்தால் இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை! பயணப் பரிசு பெறாதவர்களுக்கு அமரர் கல்கியின் நூல்கள் உண்டு.

ஆசிரியர் தீர்ப்புதான் இறுதி!

TDFC முதலீடு இருக்கவே இருக்கு!

எதிர் காலத்தை பற்றிய கவலை எதற்கு?

36 மாதம் அதற்கு மேல்.

11.61%

11.50% மாதாந்திர வட்டி உண்டு.
12 மாதம் 10.08% மற்றும்
24 மாதங்கள் 10.59%
காலாண்டிற்கு

60 மாதங்களுக்கு.

15.44%

வருட வட்டி
11.50% மாதந்தோறும் கூட்டு வட்டி முறையில் கணக்கிடப்படும்.

● Registered with RBI as NBFC vide Regn. No.:07.00403

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் லிமிடெட்.

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பதிவு அலுவலகம் : 99, கிரீம்ஸ் சாலை,
எம்.என். அலுவலக வளாகம், சென்னை-6.
தொலைபேசி : 8292059, 8292917, 8293351,
பேக்ஸ் : (044)8293651 தந்தி :TAFCON. P.B.No.719.
E-mail:tdfc@giasmd01.vsnl.net.in

கிளைகள் :

★ அரசு விரைவு பேருந்து நிலையம், காந்திபுரம், கோயம்புத்தூர்-641 044.
தொலைபேசி : (0422) 497102

★ அரசு விரைவு பேருந்து நிலைய வளாகம், திருச்சி-620 001.
தொலைபேசி:(0431) 464188

★ ராணி மங்கம்மாள் சத்திரம், மதுரை-625 001. தொலைபேசி: (0452) 741686

★ நகராட்சி அலுவலக வளாகம், காமராஜர் சாலை, ஈரோடு-638 001.
தொலைபேசி : (0424) 258204

- **உள்ளூர் காசோலைகள் மற்றும் சென்னை வரைவோலைகள் மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும்.**
- **காசோலைகளும், வரைவோலைகளும், சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் சென்னை அலுவலகத்தில் ஏற்கப்படும்**

இந்த விளம்பரம் கம்பெனியால் 29.9.2000 தினமலரில் வெளியிடப்பட்ட சட்ட பூர்வ விளம்பரத்தின் தொடர்ச்சியாகும்.

செ.ம.தொ.இ/224/வரைகலை/2001

Visit us at :www.tn.gov.in/www.chennaionline.com/www.aaraamthinai.com/www.southindia.com/www.webulagam.com/www.thegovt.com

கிச்சன் கிளினிக் கிச்சன் கிளினிக் கிச்சன் கிளினிக் கிச்சன் கிளினிக்

உப்பில்லாப்

மூலிகைமணி
டாக்டர் க. வேங்கடேசன்

"உப்பமைந் தற்றாற் புலவி அது சிறிது
மிக்கற்றால் நீள விடல்"

– இது ஒரு திருக்குறள். இதன் பொருள் என்ன தெரியுமா?


கணவன், மனைவிக்கு இடையில் ஏற்படும் ஊடல், உணவில் சேர்த்துக் கொள்ளுகிற உப்பைப் போன்றது. உணவிலே, உப்பு அதிகமாகிவிட்டால், உணவு ருசிக்காது. அது போல, ஊடலையும், அளவு கடந்து நீட்டித்தால் வாழ்க்கை ருசிக்காது.

உப்பு, சுவைக்கு மட்டும்தான் என்று இல்லை.

நம் உடலில் ஏராளமான திசுக்கள் இருக்கின்றன. இந்தத் திசுக்களின் வளர்ச்சிக்குத் தாது உப்புகள், வைட்டமின்கள், இதர உலோகச் சத்துக்கள் எல்லாம் அவசியம். உடலின் பல்வேறு பாகங்களிலும் உள்ள இந்தத் திசுக்களுக்கெல்லாம் இந்தச் சத்துக்களைச் சுமந்து எடுத்துக் கொண்டு போகிற பணியை உடலில் உள்ள உப்புதான் செய்கிறது.

அந்தக் காலத்தில், உப்பளங்களில் கடல் நீர் வடிந்து, ஆவியான சமயத்தில், உப்பு, சூரிய வெப்பத்திலிருந்து, சூரிய சக்தியைக் கிரகித்துக்கொண்டது. இதைக் கல் உப்பு என்பார்கள்.

இந்தக் கல் உப்பை அப்படியே சமையலுக்குப் பயன்படுத்தும் வழக்கம் அந்தக் காலத்தில் கிடையாது. உப்பை, வாணலியில் போட்டு இலேசாக வறுத்து எடுத்துக் கொண்டு, பின் அதைத் தண்ணீரில் கரைப்பார்கள். அந்த உப்புக் கரைசலை, நன்கு வடிகட்டி, சுத்தப்படுத்தியபின், சமையலுக்குப் பயன்படுத்துவார்கள். இந்தக் காலத்தில், இரும்புச் சத்து சேர்க்கப்பட்ட உப்பு, அயோடின் சேர்க்கப்பட்ட உப்பு, இரண்டும் கொண்ட உப்பு என்று தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது.





ஒவ்வொரு மனிதனின் உடல்வாகு, உழைப்பு, உணவு முறை, பழக்க வழக்கம் இவை அனைத்தும் மாறுபடுவதால், எல்லோரது உடம்பிலும் இந்த அளவு உப்புதான் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு விட முடியாது.

கடுமையான உடல் உழைப்பில் ஈடுபடுகிறவர்களுக்கு, உப்பின் தேவை சற்று கூடுதலாக இருக்கும். அதேசமயம், உடலுழைப்பு இல்லாமல் மின்விசிறி அல்லது ஏ.சி.யில் உட்கார்ந்தபடி வெள்ளைக்காலர் உத்தியோகம் பார்க்கிறவர்களுக்கு, உப்புத் தேவை மிக மிகக் குறைச்சல்.

அது போலவே, உப்பின் தேவை சீசனுக்கு ஏற்பவும் வேறுபடும். வெயில் காலத்தில், வியர்வையின் மூலமாக உடம்பிலுள்ள உப்பு வெளியேறுவதன் காரணத்தால், உப்பு சற்று அதிக அளவில் உடலுக்குத் தேவை. குளிர்காலத்தில், குறைந்த அளவில் எடுத்துக்கொண்டாலே போதும்.

உப்பின் அளவை நிர்ணயிக்கும் அளவுகோல் நம்முடைய நாக்குதான். உணவில் உப்பு, தேவையான, சரியான அளவில் நாக்கில் பட்டால், மிதமான அளவில் உமிழ் நீர் சுரக்கும். அதிகமாகி விட்டாலோ, நாக்கு உப்புக் கரிப்பை உணரும். உமிழ்நீரும் அதிக அளவில் சுரப்பதைக் காண முடியும்.

இன்று நூற்றுக்கு இருபது பேருக்கு வரும் பிரச்னை தைராய்டு. அதுவும் ஆண்களை விட, பெண்களுக்குத்தான் தைராய்டு பாதிப்பு அதிகமாக வருகிறது. இதற்கு உடம்பில் உப்புச்சத்து குறைபாடுதான் காரணம். தைராய்டு பாதிப்பு ஏற்பட்டால், உடம்பு பெருத்துவிடும். மாதவிலக்கு மாதக் கணக்கில் தள்ளிப் போகும். எனவே, அளவான முறையில் உப்பை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

அதே சமயம், உப்பு அதிகமானாலும்

பண்டம் குப்பையிலே; உப்புள்ள பண்டம் தொப்பையிலே!



பிரச்னைதான்!

ஒரு தடவை, தன் கணவரை அழைத்து வந்தார், என்னிடம் வழக்கமாகச் சிகிச்சைக்கு வரும் ஒரு பெண்மணி. அவர் குறிப்பிட்ட பிரச்னை உங்களுக்கெல்லாம் சற்று விசித்திரமாக இருக்கக்கூடும். "இவர் சமீபகாலமாக உப்பு அதிகம் சாப்பிடுகிறார்; வழக்கமான அளவு உப்பு போட்டு சமைத்தால், 'உப்பு போதவில்லை' என்று சொல்லுகிறார்" என்று கணவனைப் பற்றி முறையிட்டார்.

ஆனால், அவரது கணவரோ, தமது மனைவியின் வாதத்தை ஏற்கத் தயாராக இல்லை. "உணவு உப்பு கரித்தால் எப்படி சார் மனிதன் சாப்பிட முடியும்? எனக்குத் தேவையான, என் நாக்கு ஏற்கக்கூடிய அளவுக்குத்தான் நான் உப்பு சேர்த்துக் கொள்ளுகிறேன்" என்றார் அவர்.

நான் நினைத்தது சரிதான். அவரது கல்லீரலும் சிறுநீரகமும் பாதிக்கப்பட்டிருப்பது ஸ்கேனில் தெரிய வந்தது. உப்பு அதிகமானாலும் இந்த பாதிப்பு இருக்கும்; இந்தப் பாதிப்பினால், உப்பை அதிகமாகச் சாப்பிட வேண்டும் என்றும் தோன்றும். அனைவரும், குறிப்பாக, சிறுநீரகப் பிரச்னை உள்ளவர்கள் இதனை மனத்தில் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நகர்ப்புறங்களில், நடைமுறையில் இல்லாத ஒன்று, நீராகாரம் சாப்பிடுவது. ஆனால், நீராகாரம் உடம்புக்கு மிகவும் நல்ல உணவு. குறிப்பாக கோடைக்காலத்தில், உடலின் உஷ்ணம் தணிய நீராகாரத்துக்கு இணை வேறு எதுவுமில்லை. இந்த நீராகாரம் சாப்பிடுகிறபோது, அதில் தவறாமல் உப்பு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இதனால், கோடையில் உடம்பில் ஏற்படும் அதிகப்படியான நீர் இழப்பு சமன் செய்யப்படும்; களைப்பு இல்லாமல் சுறுசுறுப்பாய் இருக்க உதவும். கோடையில் உஷ்ணம் அதிகரித்து, ஏற்படும் உடல் உபாதைகள் வராமல் இருக்கும்.

சிலருக்கு திடீரென்று வயிற்றுப்போக்கு ஏற்படும். உப்புக் கரைசலையும், சர்க்கரை கலந்த நீரையும் சம அளவு கலந்து, அவர்களுக்குக் கொடுத்தால் வயிற்றுப் போக்கு நிற்கும். அதனால் ஏற்படும் அசதி, சோர்வு நீங்கும்.

உடம்பில் உப்பின் அளவு அதிகமாகிவிட்டது என்பதை உணர்த்தும் 'மீட்டர்' நம் கண்கள். கண்ணுக்கும், உப்புக்கும் என்ன சம்பந்தம்...? அடுத்த வாரம்!

டாக்டர்
க.வே. அபிராமி

'நில் கவனி வெற்றிகொள்' கட்டுரைகள் அருமை. பெரியார்தாசன் கைதட்டச் சொன்ன இடங்களிலெல்லாம் வீட்டிலேயே கைதட்டினேன். என்னைப் போன்ற வீட்டுப் பறவைகளாக உள்ள குடும்பத் தலைவிகளுக்கு இந்தக் கட்டுரை பரந்த உலகைப் பார்க்கும் சாளரம்.

சென்னை - 17. சுந்தரி,

25.2.2001 தேதியிட்ட கல்கியில் தலையங்கம் கண்டேன். அமரர் கல்கி இருந்தால் நீதித் துறையைப் பற்றி எப்படி தெளிவாகவும் துணிச்சலுடனும் எழுதியிருப்பாரோ அதேபோல் எழுதியுள்ளீர்கள்!

சென்னை-21, ச. ஆறுமுகம்.

அக்னிசர்மா பலன்கள் 100/100 பலிக்கின்றன!

கல்கியிடம் அபவ் ஆவரேஜ் வாங்கியதே படத்தின் வெற்றிக்குச் சான்று. ஆனால், 'மின்னலே..' விமர்சனத்தில் இயக்குனர் பாடல்கள் எழுதிய கவிஞர்கள் தாமரையையும் வாலியையும் விட்டு விட்டீர்களே?

திருச்சி-15, எஸ். சாமிநாதன்.

ராமேஸ்வரம் கும்பாபிஷேகம் அன்று நாங்களும் அங்கிருந்தோம். எதிர்பார்த்ததைவிட மக்கள் குறைவாகவே வந்திருந்தார்கள் என்பது வருத்தமாகத்தான் இருந்தது!

சென்னை - 91, ஸ்ரீநிவாசன்.

ஆலம்பாக்கம் விஜயகுமாரி போல் உலகில் இன்னும் சிலர் வாழ்ந்து கொண்டிருப்பதால்தான் ஓரளவு மனித நேயம் தவழுகிறது!

மேட்டுப்பாளையம், பி.ஏ.வதூத்.

வட்ட மேஜை

ஜெயலலிதா எப்படி எல்லாம் அரசியல் சதுரங்கக் காய்களை நகர்த்துகிறார் என்று அலசி ஆராய்ந்திருந்தீர்கள், 'மேடம் மேக்யவெல்லி...' கட்டுரையில். வெல்டன்! மேக்யவெல்லியின் 'பிரின்ஸ்' நூலை ஜெயலலிதா படித்திருக்கும் பட்சத்தில் அதைக் கருணாநிதியும் படித்திருக்கலாமல்லவா?

மொரட்டுப்பாளையம், க.நா. இராஜேஸ்வரன்.

இந்த வார கல்கியுடன் ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகை படத்தையும் அதனுடன் கூடிய ஸ்லோகத்தையும் தந்ததில் எங்களுக்கு இரட்டிப்புச் சந்தோஷம்!

திருச்சி - 18, அம்மனூர் என். சாம்பமூர்த்தி.

'அறுபது நிமிடக்ளோனிங்' கட்டுரை படித்தேன். சங்கரின் படங்கள் மனத்தைக் கொள்ளை கொண்டன. அதிலும் எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் படம் வெகு தத்ரூபம்!

சென்னை - 44, எஸ். காமாட்சி.

இதழ்தோறும் அக்னிசர்மா கணித்துக் கூறுகின்ற பலன்கள் நூற்றுக்கு நூறு பலிக்கின்றன!

இனாம் மணியாச்சி, ச.ஆ. கேசவன்.

பூகம்பம் திடீரென்று ஏற்படுகிறது... அது மட்டுமில்லை; சங்க மரணமும் கூடவே ஏற்படுகிறது. நூறு பேர்- இருநூறு பேர்-ஆயிரக்கணக்கான பேர் இறந்து போவது என்பது நிகழ்கிறது. இது ரொம்ப கொடிய விஷயம்.

இது குறித்து வியாசர் என்ன சொல்கிறார்...? நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள்.

'சங்க மரணம் என்பது தகாது. உலகத்தில் அதுபோன்ற மரணத்தை உண்டாக்கக் கூடாது. அதனால் கர்மானுஷ்டானங்களில் பற்றுடையவர்களாக நாம் இருக்க வேண்டும்; எல்லோரும் இருக்க வேண்டும் என்கிறார் வியாசர்.

நித்ய கர்மானுஷ்டானங்களை விடாமல் பண்ண வேண்டும் என்று வலியுறுத்துகிறது அருணம்.

ஆனால் கீதையிலே பரமாத்மா என்ன சொல்கிறான்- "எல்லா தர்மத்தையும் விட்டு என்னைப் பற்று!" என்கிறான்.

இப்படி அவன் சொல்வதனாலே நித்ய கர்மானுஷ்டானங்களை விட்டு விட வேண்டும் என்பது கிடையாது. இதே கீதையில்தான் இன்னொரு இடத்திலே பார்த்தால் பகவான் சொல்கிறான் 'கர்மா பண்ணுவதற்குத்தான் நீ அதிகாரி; பலனை நான் கொடுக்கிறேன்- ஆனால் கர்மாவைப் பண்ணியாக வேண்டும்; பண்ணு!' என்கிறான்.

கீதார்த்தசங்க்ரஹம் என்கிற உரையிலே ஆளவந்தார் என்கிற ஆசார்யர் சொல்வதை நன்றாக கவனியுங்கள்:

நாராயணனாகிற பரபிரும்மத்தினுடைய பெருமை கீதா சாஸ்த்திரத்தில் நன்கு சொல்லப்பட்டிருக்கிறது. கீதா சாஸ்திரத்தில் முதலில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் **சுவதரம்!**

ராமானுஜர் வாழ்ந்த காலத்தில், ஒரு ஊரில் தங்கி பதினெட்டு நாள் கீதை சொன்னார். அவரே அவர் திருவாக்கினாலே பதினெட்டு நாட்கள் உபதேசம் பண்ணினார். எத்தனையோ பேர் உட்கார்ந்து கொண்டு கேட்டார்கள்... பதினெட்டாவது நாள் பல ஸ்ருதியைச் சொல்லி, ஊருக்குக் கிளம்பினார்- யாத்திரையாக.

அப்போது, நிறைய சந்தானம், வீடு, மனைவி எல்லாம் இருக்கக் கூடிய ஒரு கிருஹஸ்தர் நித்யம் வந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

அவர் என்ன பண்ணினார்... ராமானுஜருடைய திருவடியைப் பிடித்துக் கொண்டு, "சுவாமி! என்னையும் உங்களுடனேயே அழைத்துக் கொண்டு போய்விடுங்கள்..." என்றார். அவ்வளவுக்கு அவர் மனத்தில் அந்த கீதை பதிந்து போயிற்று!

உடனே பகவத்பாஷ்யகாரர் ராமானுஜர் அவரைப் பார்த்துச் சொன்ன வார்த்தை: "பதினெட்டும் சொல்லித் திருத்த வேண்டியதாயிற்றே!" என்பது தான்.

'பதினெட்டு நாள் நான் கீதை சொல்லியும் பிரயோஜனமில்லாமல் போய்விட்டதே. மறுபடியும் இவரைத் திருத்த வேண்டியதாகப் போய் விட்டதே! நானானால் சன்னியாசி. எங்கே வேண்டுமானாலும் போகலாம். எனக்குப் பந்தமில்லை. உமக்கு மனைவி இருக்கிறாள். மக்கள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் நீ சம்ரக்ஷிக்க வேண்டாமா? கீதை என்ன சொல்கிறது?... அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட தர்மத்தை முறையாகப் பண்ண வேண்டும். அப்படிப் பண்ணாமல் திடீரென்று காட்டுக்குப் போய் வைராக்கியமாக உட்கார்ந்திருக்கிறேன் என்று உட்காரக் கூடாது. எது விதிக்கப்பட்டதோ அதைப் பண்ண வேண்டும். நீ திடீரென்று கிளம்பி என்னோடு வருகிறேன் என்றால் உன் குடும்பத்துடைய கதி என்ன...? எல்லாவற்றையும் பகவான் பார்த்துக் கொள்வான். ஆனால், அதற்கு நிமித்த காரணமாக-பர்த்தாவாக-உன்னை இந்த கிருஹத்திலே போட்டிருக்கிறான். அதை ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பு உனக்கு இருக்கிறது. இதை



2

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

அருள்வாக்கு

'மங்களம்' என்றால் மங்களந்தான்! ஆனந்தமாக அதிலேயே ஒரு கம்பீரத்தோடு தூய்மையோடு ஆனந்தமாக இருந்து கொண்டிருப்பதுதான் மங்களம். எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்து கொண்டோ, மூக்கைச் சிந்திப் போட்டுக் கொண்டோ இல்லாமல் 'ஆஹா' என்று எப்போதும் ஸந்தோஷமாக இருக்க வேண்டும். இதுதான் லோகத்துக்கு நாம் செய்கிற பெரிய ஒத்தாசை, பெரிய தொண்டு. பணத்தை வாரிக் கொடுப்பதைவிட, வேறு

விட்டுவிட்டு நீர் என்னுடன் வருகிறேன் என்று சொல்வது பொருந்துமா..?' என்று மறுபடியும் ராமானுஜர் அவருக்கு உபதேசம் பண்ணி அவரை நிறுத்தினார்.

ஆகையினாலே பாருங்கள்... திடீரென்று வைராக்கியம் எப்படி வரும் என்று சொல்ல முடியாது. வராத வரையில் படாத பாடு படுத்தும்; வந்துவிட்டாலோ... ஆஹா! இப்படி மாறிப்போய்விட்டாரே என்று கேட்கத் தோன்றும். பகவான் அப்படியொரு வைராக்கியத்தையும் நமக்குக் கொடுப்பார்.

இந்தக் கதையை ஆளவந்தார் ஸ்தோத்ர சங்கிரஹத்திலே எடுத்துக் கையாண்டிருக்கிறார்.

ஆகையினால், 'சர்வதர்மங்களையும் விட்டு என்னைப் பற்று' என்று பகவான் சொன்னது சுவதர்மங்களை இல்லை. உன்னால் பண்ண முடியாத தர்மங்களை விட்டு விடு என்றுதான் அதற்கு அர்த்தம். பண்ண வேண்டிய தர்மங்களைக் கடைசி வரை பண்ணிக் கொண்டே இருக்க வேண்டும்.

வருஷத்திலே 96 சிரார்த்தம் பண்ணு! என்கிறது சாஸ்திரம். ஒன்று பண்ணுவதற்கே சிரமமாயிருக்கிறது. 96ஐயும் எங்கேயிருந்து பண்ணுவது? அதற்குப் பதில் மட்டப்பள்ளியில் போய் பிரதக்ஷிணமே பண்ணிவிடலாம் போலிருக்கிறது. 96 பிரதக்ஷிணம். 32-32-32 என்று மூன்று முறை பண்ணினால் ஒவ்வொரு சிரார்த்தத்துக்கும் பதில் ஒரு பிரதக்ஷிணம். பகவான் இதை அங்கீகரிக்கிறான்! சிரார்த்தம் பண்ணாவிட்டால் போகட்டும் பிரதக்ஷிணமாவது பண்ணட்டுமே என்கிறான்.

ஆனால் அந்தப் பிரதக்ஷிணத்தையும் அவனுடைய ஆக்ஞை, அவனுடைய வாக்கு என்று ஆனந்தப்பட்டுச் செய்ய வேண்டும்.

'மூன்று வேளையும் பிரதக்ஷிணமா? நித்யம் மூன்று வேளை ஸ்நானம் பண்ண வேண்டுமா?' என்று கேட்டால் பகவான் என்ன நினைப்பான்!

நிர்ப்பந்தமாக நீ பண்ண வேண்டாம். 'என்றைக்கு வரவேண்டும் என்று உனக்குத் தோன்றுகிறதோ, அன்றைக்கு வா' என்று சொல்லி விடுவான்.

ஆகையினாலே, எம்பெருமான் விஷயத்தில் நிர்ப்பந்தம் கூடாது.

எத்தனையோ விதமாக அவனை நினைத்துக் கொண்டாட நமக்கு வழி வகை செய்திருக்கிறான்.

இப்படி அவனைப் பற்றிப் பேசுவதே வாக் யக்ஞம். அவன் பகவத் குணத்தைச் சொல்லுவது கீர்த்தன யக்ஞம். எல்லோரும் கூடி உட்கார்ந்து கேட்பது சிரவண யக்ஞம்.

இந்த மாதிரி பகவானுடைய குணத்தைச் சொல்லி ஆனந்தப் பட்டுக் கொண்டிருந்தால் நாம் வேறு எங்கே போக வேண்டும்? இங்கேயே இருக்கலாம்.

அவனை நினைக்கவல்லார்க்கு வைகுண்டமாகும் நம்மூரெல்லாம்.

அப்படி அவன் நினைவோடே வாழ்பவர்கள்- பூலோகத்திலே உழன்று அவனையே நினைத்துக் கொண்டிருந்தால் அவனே வந்து கைபிடித்து அழைத்துச் சென்றுவிடுவான்.

அவன் நினைவோடேயே இந்த உலகிலே இருந்தோமானால், ஒரு நாள் நமக்கு நினைவு மங்குமல்லவா...? அப்படிப்பட்ட சமயத்திலே, நினைவு நம்மிடம் இராது போய் விடும். அந்த சமயத்தில் நம்மை நினைப்பவன் அவன்தான். அவனே வந்து அவன் ஸ்தானத்துக்கு நம்மை அழைத்துப் போய்விடுகிறான்.

மங்களம் பகவான் விஷ்ணு: என்று பகவானை மங்களமான விஷயமாக சொல்கிறது சாஸ்திரம். அப்படிப்பட்ட சுபமான, மங்களமான விஷயத்தை மனத்தால் நினை என்கிறது.

மங்களம் பகவான் விஷ்ணு:
மங்களம் மதுசூதன:
மங்களம் புண்டரீகாக்ஷ:
மங்களாயதனோ ஹரி:

மங்களம் எங்கே? ஹரியினிடத்திலேதான் இருக்கிறது. ஹரி எங்கே இருக்கிறான்...? மங்களத்திலே இருக்கிறான்.

ஆகையினாலே, எது எது பரம மங்களமோ, எது எது நமக்கு சுபத்தைக் கொடுக்குமோ, அது மொத்தம் அவன்தான்!

தாபத்ரயோன் மூலனம் - இந்த மந்தி

ஸர்வீஸ்கள் பண்ணுவதைவிட, நாம் போகிற இடமெல்லாம் நம் மங்களத்தாலேயே ஆனந்தத்தை உண்டாக்கிக் கொண்டிருப்பது தான் மற்ற ஜீவர்களுக்குப் பெரிய தொண்டு. 'லைட்'டாக, லேசாக, எதையும் சாதிப்பது அநாயாஸம். போகிற இடமெல்லாம் நாமே ஒரு 'லைட்' (தீபம்) மாதிரி ஒளியை, ஆனந்தத்தைக் கொடுப்பது 'மங்களம்'. நாம் ஒரு இடத்துக்குப் போனால் அங்கேயிருப்பவர்கள் 'குற்றம் கண்டு பிடிக்க வந்துவிட்டான்' என்று



முகத்தைச் சுளிக்கும்படியாக இருக்கக் கூடாது. எங்கே நாம் போனாலும் அங்கே நல்ல தினுசான ஸந்தோஷத்தை விருத்தி பண்ண வேண்டும். நாமும் மங்களமாக இருந்து கொண்டு, 'பொங்கும் மங்களம் எங்கும் தங்குமாறும் செய்ய வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய-ஸ்வாமிகள்

ரத்தை ஒரு தடவை கேட்டாலே தாபத்ரயங்கள் போய்விடுகின்றன என்கிறது வேதம்.

பூர்வ தாபநீய உபநிஷத்தின் ஆரம்பத்திலேயே பகவத் பாதாள் இதற்கு மிக அழகான வியாக்யானம் பண்ணியிருக்கிறார்.

அதிலே என்ன சொல்கிறார் என்றால்,

ஜன்மாந்திரத்திலே ஆத்யாத்மிகம் என்று ஒரு தாபம். ஆதிபௌதிகம் என்று ஒரு தாபம்- அதற்கும் மேலே விசேஷமாக இந்த மாதிரி உலகத்தில் பலவித கஷ்டங்கள்! ஆத்மா, ஜன்மாந்திரத்தில் பண்ணிய விசேஷத்தினாலே சரீரத்திலே சில தாபங்களைப் பெற்று லோகத்தில் அடைகிறது.

வியாதிகளெல்லாம் வருகின்றன. சரீரத்தைப் போட்டு வருத்துகின்றன. ஆதி வியாதி என்று சொல்வார்கள்.

'ஆதி' என்றால் மனத்துக்கு ஏற்படும்படியான கஷ்டங்கள். எத்தனை நேரமானாலும் சோகம்; மனத்திலே ஒரு வியாகூலம்; பெரிய பளு; எப்போது பார்த்தாலும் ஒரு அச்சம். எதிலேயும் ப்ரீதியில்லாதிருத்தல்; பிரமை பிடித்த மாதிரி உட்கார்ந்திருப்பது; எதையோ பறிகொடுத்தமாதிரி இருக்கிறது.

இந்த மாதிரி சமயங்களில் ஒருத்தரிடம் போய்ப் பேசினால் இலேசில் தைரியம் வருகிறதா அவருக்கு...? நாம் சொல்கிற வாக்கு பிடிபடுகிறதா?

அவருடைய பாபம் எப்போது குறைகிறதோ அப்போதுதான் நாம் சொல்கிற வாக்கு பிடிபடும். அதற்கு முன்னால் எத்தனை தடவை சொன்னாலும் அவர் சோகமாகத்தான் இருப்பார்.

ஆகவே உரிய காலம் வரவேண்டும். அப்போது அவருக்கு நாம் எடுத்துச் சொல்ல, அவருடைய பிரமை சித்தத்தில் இருக்கும்படியான சோகம்-நீங்கும்.

அப்படிப்பட்டதொரு காலத்தில் செய்ய வேண்டிய சாந்தியை வேதம் சொல்கிறது.

சொல்லிவிட்டு, 'உன் காதினாலே பத்ரனான மங்களமான நரசிம்ஹனைப் பற்றிய வாக்குகளைக் கேள்' என்கிறது.

மஹாலக்ஷ்மிக்கு பத்ரா என்று பெயர். அவன் பத்ரையுடன் இருப்பதால் பத்ரன். பத்ர சப்தத்துக்கு மங்களம் என்று பொருள்.

மங்களமானவன் அவன் என்று நினைப்பதே நமக்கு சோபனத்தைத் தரும். சோபனாத்ரி என்று ஒரு ஊர். விஜயவாடாவிலிருந்து சரியாக 32 கி.மீ. தூரத்தில் உள்ளது. ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ஒவ்வொரு அக்ஷரத்தைச் சொல்லிக்கொண்டே போனால், நரசிம்ஹ மந்திரம் முடிந்து போய்விடும்!

அந்த சோபன மலைமேல் மங்களமான நரசிம்ஹன் குடிகொண்டிருக்கிறான். வியாக்ரமுகன்-புலிமுகம் கொண்டவன்- அந்த நரசிம்ஹன்.


ஆகம சாஸ்திரத்தில் 32 - விதமான திருமுகம் நரசிம்ஹனுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்று வியாக்ர முகம்.

அங்கேயே ஈச்வரனும் எழுந்தருளியிருக்கிறார். அவருக்கு வியாக்ரபுரீசுவ்ரர் என்றே பெயர்.

இவ்வாறு சோபனத்தைக் கொடுக்கக் கூடியவன் அவன். அவனைக் காட்டிலும் மங்களமுடையது அவன் திருக்கல்யாண குணங்களைச் சொல்லக் கூடிய அவனுடைய சரித்திரம். அந்த சரித்திரம் பரம மங்களம்.

அதனால்தான், உன்னால் பண்ண முடியாத தர்மங்களை எல்லாம் விட்டு விட்டாலும் எல்லாவற்றையும் விட்டுவிட்டாலும் அவன் திருக்கல்யாண குணங்களைத் தேடி அறிந்து அவன் சரித்திரத்தைக் கேள்; அவன் சோபனத்தைக் கேள்; என்கிறது சாஸ்திரம். இந்தக் கலியுகத்துக்கு மிக உகந்ததான முறை இது.

(தொடரும்)





2001 மார்ச் 11
விக்ரம மாசி 27
மலர் : 59
இதழ் : 32

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




சின்ஹாவின் செயல்வீரம்!

மன்மோகன் சிங் தாராளமயமாக்கலின் முதல் சில அடிகளைத் துணிச்சலுடன் எடுத்து வைத்தபோது, இந்தியப் பொருளாதார நிபுணர்கள் குதூகலத்துடன் வரவேற்றார்கள். உலகமே நிமிர்ந்து உட்கார்ந்து இந்தியாவைக் கவனிக்க ஆரம்பித்தது. யஷ்வந்த் சின்ஹா வழங்கியிருக்கும் 2001-2002க்கான பட்ஜெட், அந்த தாராளமயமாக்கல் பாதையின் அடுத்த கட்டத்துக்கு நாடு முன்னேற வழி செய்கிறது. இதை நிதித்துறை வல்லுனர்கள், பத்திரிகைகள் மட்டுமின்றி முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரமும் ஒப்புக்கொண்டு வரவேற்றிருக்கிறார். ஆனால், மன்மோகன் சிங் இந்த பட்ஜெட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்திருப்பது அரசியல் காரணங்களுக்காகவன்றி வேறென்ன இருக்க முடியும்!

மூன்று வகைகளில் இந்த பட்ஜெட் பொருளாதார முன்னேற்றத்துக்கான பாதையைச் சுலபமாக்கியிருக்கிறது.

- வரி விதிப்பு கணிசமாகக் குறைக்கப்பட்டு, தொழில் நிறுவனங்களிடத்தும் தனியார் கைகளிலும் கூடுதல் பணம் தங்குவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பணம் முறையாகவும் வெற்றிகரமாகவும் முதலீடாகி, உற்பத்திப் பெருக்கத்துக்கு உதவி, பணவீக்கத்தைக் குறைத்து, பொருளாதாரத்தை முன்னேற்ற உதவும் என்பது எதிர்பார்ப்பு.
- அடிப்படை வசதிகள் பெருக்கத்துக்கான (infrastructure) ஒதுக்கீடை கணிசமாக



அதிகரித்து, பாதுகாப்புச் செலவினங்களுக்கான ஒதுக்கீடை உயர்த்தாமல் விட்டிருக்கிறார் சின்ஹா. இந்த 'சமன்படுத்தல்' முயற்சியினால் இந்தியாவின் இருவித நோக்கங்கள் உலகுக்குப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன :

மல்லுக்கு நிற்கிற போக்கு கொண்ட நாடு அல்ல என்பதுடன் முதலீட்டாளர்களுக்கு இங்கே வசதிகளைப் பெருக்குவதற்கு மெய்யான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என்பதும் இதன் மூலமாக அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

● இது நாள்வரை கண்டிராத வகையில், அரசு இலாகாக்களில் அனாவசிய செலவினங் களைக் குறைக்கவும் ஆக்கப்பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அரசு ஊழியர்களின் பல சலுகைகளில் தைரியமாகக் கைவைத்துத் துண்டித்துவிட்டார் சின்ஹா என்பதுடன் மத்திய அரசு அலுவலகங்களில் ஆள்குறைப்பு படிப்படியாக நிகழ்வதற்கும் வழிவகுத்திருக்கிறார். செலவுகள் சீர்திருத்த கமிஷனின் பல சிபாரிசுகள் ஏற்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன. அது மட்டுமல்ல, தொழிலாளர் நலச் சட்டங்களில் புரட்சிகரமாக மாற்றங்கள் கொண்டு வருவதற்கும் வழி செய்துள்ளார். இந்தச் சீர்திருத்தங்கள் தொழிற் சங்கங்கள் மற்றும் அரசு ஊழியர்களின் மனக் கசப்பையும் எதிர்ப்பையும் பெற நேரும் என்று அறிந்தும் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டிருப்பது மெய்யான செயல் வீரம்.

யஷ்வந்த் சின்ஹாவின் பட்ஜெட், குறைகளில்லாத பூரண சந்திரன் என்று கூறிவிட முடியாது. சிறு சேமிப்பு வட்டி விகிதத்தை 1.5 சதவிகிதம் குறைத்தது அனைத்து தரப்பிலும் கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறது. மத்திய அரசின் வருவாயில் கிட்டத்தட்ட ஐம்பது சதவிகிதம் இன்னமும் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்தவே சரியாகி விடுகிறது. இந் நிலையில் பற்றாக்குறை விகிதாசாரத்தை வருகிற நிதியாண்டிற்குள் 5.1 சதவிகிதத்திலிருந்து 4.7 சதவிகிதமாகக் குறைக்க திட்டம் தீட்டியிருக்கிறார் சின்ஹா. இது எவ்வாறு நடக்கும் என்பது குறித்து கவலை கொள்ளாமல் இருக்க முடியாது.

சின்ஹாவின் கனவு நிறைவேற வேண்டுமானால் இந்த பட்ஜெட்டில் அவர் காட்டியிருக்கும் செயல்வீரம் ஒவ்வொரு இந்தியனையும் தொற்றிக்கொள்ள வேண்டும்.



பட்ஜெட்டால் ஆதாயம் அடைகிற தொழிற்துறையினரும் முதலீட்டாளர்களும் பொதுமக்களும் பணத்தைக் கவனமாகவும் உழைப்பை வஞ்சனையின்றியும் முதலீடு செய்தாக வேண்டும். **Its now or never** என்று சொல்லக்கூடிய ஒரு காலகட்டத்தில் நாட்டைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் சின்ஹா. உலக அளவில் போட்டியிட்டு அன்னியச் செலாவணி முதலீட்டையும் வருமானத்தையும் கணிசமாக ஈர்க்க சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியிருக்கிறார்.

இங்கே வருகிற அன்னிய முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையையும் நம்முடன் வர்த்தகம் செய்யும் அன்னிய நிறுவனங்களுக்குத் திருப்தியையும் தர முடிந்தாலன்றி உலகச் சந்தையில் நாம் தடம் பதிக்க முடியாது.

சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளாக, அரசால் பாதுகாக்கப்பட்ட பொருளாதாரச் சூழலுக்கு நம் தொழில்துறை பழகிப்போய் நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் இன்றி சூம்பியிருந்தது. இப்போது அரசு ஆதரவும் பாதுகாப்புகளும் ஏறத்தாழ முழுவதும் நீக்கப் பட்டுவிட்ட போட்டி நிறைந்த சூழலில், சர்வதேச தரத்துக்கும் எதிர்பார்ப்புக்கும் ஈடுகொடுத்தாக வேண்டும்.

சின்ஹா பட்ஜெட்டை நாடாளுமன்றத்தில் வாசித்தபோது பல தலைவர்கள் தூங்கி வழிந்திருக்கிறார்கள்; வேறு பலர் கவனம் செலுத்தாமல் அலட்சியமாய் இருந்திருக்கிறார்கள். நமது தொழில்துறை அதுபோல் தூங்கிவிடலாகாது; பொதுமக்கள் அலட்சியமாய், கவனக் குறைவாய் இருந்துவிடலாகாது.

உழைப்பின் ஒவ்வொரு துளியும் நாட்டின் முன்னேற்றத்தில் முதலீடாவது அவசியம் என்பதைப் பொதுமக்கள் உணர வேண்டும்;

பெறுகிற ஒவ்வொரு பைசாவும் தேச முன்னேற்றத்துக்கு மறுமுதலீடாக வேண்டும் என்ற பிரக்ஞையுடன் தொழிலதிபர்கள் இயங்க வேண்டும்.

இனி சாதித்துக்காட்டாவிட்டால் அது தொழில்துறையின் குற்றமாகக் கருதப்படுமேயன்றி அரசையும் பொருளாதாரக் கொள்கைகளையும் குறைகூற முடியாது. ○

எங்கே போனீர்?

அலுவலகத்தில் நுழைந்தவுடன் இரண்டு விரலைக் காட்டுகிறார் தாடிக்கார உதவி ஆசிரியர். 'ஏனய்யா, ஆபீசுக்கு வரும்போதே காலைக் கடனையெல்லாம் முடிச்சிட்டு வரக் கூடாதா?' என்று முதலாளி – cum – ஆசிரியர் கேட்க, 'அதில்லை... எனக்கு ரெண்டு மாச சம்பளம் பாக்கி' என்கிறார் உ.ஆ. நல்ல விஷயங்களை மட்டும் போட்டால் பத்திரிகை விற்காது, கொஞ்சம் கிசுகிசுவும் சேர்க்க வேண்டும் என்று அந்த உதவி ஆசிரியர் உபதேசம் செய்து கொண்டிருக்கும்போது ஒரு சிறுவன் ஓடி வந்து, 'எங்கம்மா உங்க பேப்பரை வாங்கிட்டு வரச் சொன்னாங்க!' என்கிறான். ஆசிரியர் பெருமையுடன் ஒரு பிரதியைக் கொடுத்து அவனை அனுப்பி விட்டு, 'என்னவோ சொன்னீரே, ஐயா? தாய்க்குலம் எத்தனை ஆர்வமா என் பத்திரிகையைக் கேட்டு வாங்கிட்டுப் போறாங்க பார்த்தீங்களா?' என்று கூற, 'வாங்கிட்டுப் போய் என்ன செய்யறாங்கன்னு இந்த ஜன்னல்கிட்டே வந்து பாருங்க!' என்கிறார் தாடிக்காரர். பார்த்தால் –

ஒரு தாய், தரையில் காலை நீட்டி உட்கார்ந்து, புடவையை முழங்கால் வரை தூக்கி விட்டுக் கொண்ட பின் கைக்குழந்தையைப் பாதங்களில் கவிழ்த்துப் போட்டுக் கொண்டு, கீழே அந்தப் பத்திரிகையில் தாளைக் கிழித்து வைத்து...

ஐயோ பாவம், 'ஞானப்பழம்' ஆசிரியர்! 'All I need to make a comedy is a park, a police man and a pretty girl' என்றார் சார்லி சாப்ளின். பாக்யராஜுக்கு அது எதுவும் தேவையிருக்கவில்லை, ஒரு காமிக் காட்சியை அமைக்க.

Love is the dawn of marriage and marriage is the sunset of love என்று ஒரு பிரெஞ்சுப் பழமொழி உண்டு. அதனால்தானோ என்னவோ, அன்புக்குரிய மனைவி காலமான பிறகு, எந்தப் பெண்ணையும் காதலிக்கவோ மணக்கவோ (சன்) மனமில்லாமல் இருக்கிறார் 'மாய நதிகள்' தொடரில் வரும் அந்தப் பெரியவர். ஆனால் உற்றார் உறவினர் விடவில்லை. தனிமையில் வாடும் அவர் இன்னொரு மணம் செய்து கொண்டால் வாழ்க்கை இனிமை பெறும் என்று வற்புறுத்து



கிறார்கள். ('போ அந்தண்டை, பேசாமல்!' என்று தன் சித்தி மீது அவர் எரிந்து விழ, 'தனியா இருந்தால் இப்படித்தான் கோபம் வரும்!'

என்று பதிலடி கொடுக்கிறார் அந்தப் பெண்மணி.)



கல்யாணம் செய்து கொள்ளலாமா வேண்டாமா என்று முடிவெடுப்பதற்காகக் கோவிலுக்குப் போனால் அங்கே திருக்கல்யாண உற்சவம் நடந்து கொண்டிருக்கிறது. அதையே பெருமாள் தனக்குப் பச்சைக் கொடி காட்டுவதாக எடுத்துக் கொள்கிறார். நல்ல வசனம், நல்ல டைரக்ஷன். இரண்டையுமே சிறப்பாகச் செய்திருக்கிறார் வி. கண்ணன். பல தொடர்களில் பங்கேற்று, பாவத்தோடு நடிப்பதில் தேர்ச்சி பெற்று வருகிறார் யுவராணி. இதில் இளம் விதவை. "பெண்ணாகப் பிறக்கும் குழந்தை, வளர்ந்து பெரியவளாகி, கல்யாணம் செய்துகொண்டு, புருஷனை இழந்து கஷ்டப்படுவதைக் காட்டிலும் சிசுக் கொலையே மேல்" - கனமான குரலில் தாழ்வாகப் பேசுகையில் அந்தச் சோகத்தில் ஒரு நாகம் தெரிந்தது.

ரிமோட்
வினோத்

Question and answer session

பேரன்: தாத்தா, நியூஸிலாந்து - பாகிஸ்தான் மேட்சுகளின்போது, பிளேயர்கள் யார் யார் எங்கெங்கே நிற்கிறாங்கன்னு மைதானத்திலே அவங்கவங்க தலைக்கு மேலேயே வட்டம் போட்டுக் காட்டறாங்களே? செஞ்சுரி, ஹாஃப் - செஞ்சுரி அடிச்சால், பந்து எப்படியெல்லாம் போச்சுன்னு கிரவுண்டிலேயே படம் போட்டுக் காட்டறாங்களே? அந்த மாதிரியெல்லாம் நம்ம தூர்தர்ஷனிலே காட்ட மாட்டாங்களா?

தாத்தா: காட்டுவாங்கடா கண்ணா, கட்டாயம் காட்டுவாங்கடா உன்னோட பேரன் காலத்திலே.

என்ன ஆனீர்?

தங்கம், வைரத்துடன் தனிமை விற்பனை!

பொன் வைக்கும் இடத்தில் 'பூ'வை என்பர் சிலர். பொன் நகை வேண்டாம்; உன் புன்னகை போதும் என்று மனைவியை ஐஸ் வைக்கும் கணவன்மார்களும் உண்டு. எது எப்படியாயினும் தங்கத்திற்கு ஈடு தங்கம்தான் என்று கருதுபவர்தான் பலரும். இந்தப் பலரின் எண்ணத்தை மூலதனமாக வைத்து சென்னை பகல்லா சாலையில் **சொர்ணாலயா ஜுவல்லரி** என்ற நகைக் கடை 28.1.2001 அன்று திறக்கப்பட்டது. நகை விற்பனையில் 15 வருட அனுபவம் உள்ள இதன் நிர்வாக இயக்குனர் திரு. சுகுமாரன் இந்தக் கடையின் விசேஷங்களை நம்மிடம் விவரிக்கிறார்.

"கையில் பணம் இருந்தால் தங்கம் உட்பட எந்தப் பொருளையும் வாங்கலாம். ஆனால் அந்தப் பொருள் தரமானது தானா, அதற்குரிய விலையைத்தான் நாம் கொடுத்து இருக்கிறோமா என்று ஆராய வேண்டும். உதாரணமாக மத்தியதர வர்க்கத்தினருக்கு எங்கள் கடையில் uncut diamond 1 Carat 10,000 ரூபாய்க்கு கிடைக்கும்.

"இன்றைக்குச் சென்னையில் பல நகைக் கடைகள் உள்ளன. ஆனால் ஒரு சில கடைகளில் மட்டுமே நம் தேவைக்குத் தகுந்தாற் போல் வாங்குகிறோம். மற்ற கடைகளில் நாம் வாங்க முடிவதில்லை. ஏனென்றால் இன்றைக்கு ஒவ்வொரு வாடிக்கையாளரும் நகைகளை வாங்கும் பொழுது தனிமையான சூழ்நிலையை எதிர்பார்க்கிறார்கள். அதனால்தான் நாங்கள் பிஸியான இடத்தில் கடை வைக்காமல், வாடிக்கையாளர்களுடைய தனிமைக்காக பகல்லா சாலையில் கடை திறந்திருக்கிறோம். மிக குறைந்த நாட்களிலேயே எங்களுடைய கடை பிரபலமடைந்துள்ளது. ஏனென்றால் எங்களுடைய உபசரிப்புதான் காரணம். இதை தான் எங்களின் முக்கிய நோக்கமாக நினைத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். வாடிக்கையாளர்கள் இங்கு வந்து 1 கிராம் தங்கம் வாங்கினாலும் சரி, 1 கிலோ தங்கம் வாங்கினாலும் சரி அனைவரையும் சமமாக நினைத்து அன்போடு வரவேற்று உபசரிக்கிறோம்.

பொதுவாக தங்கம் மற்றும் வைரம் போன்ற விலையுயர்ந்த பொருட்களை வாங்கும்போது சில வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே தனியறையில் வியாபாரம் செய்வார்கள். ஆனால் எங்கள் கடையில் எல்லா வாடிக்கையாளர்களுக்கும் மாடியில் குளிர்சாதன வசதியோடு தனி அறை ஒதுக்கப்பட்டு இருக்கிறது. எங்கள் கடையில் ஓர் வித்தியாசத்தைக் காணலாம்.



• வாடிக்கையாளர்களை உபசரிக்கும் பிரத்தியேக தனி அறை...



ஒவ்வொரு நாற்காலிக்கும் இடையே ஒரு கண்ணாடி போட்டு தடுப்பு வைத்திருப்போம். அதன் காரணம் வாடிக்கையாளர் வாங்கும் பொருட்கள் மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது என்ற நோக்கத்திற்காகவே இதைச் செய்துள்ளோம். அதே நேரத்தில் வாடிக்கையாளர் விருப்பத்திற்கேற்ப பல டிசைன்கள் ஆர்டர் எடுத்து நகை செய்து தருகிறோம். எங்களிடத்தில் Latest model Jewellery எல்லாம் கிடைக்கும்.

ராசிக் கற்கள் மேல் நம்பிக்கை உள்ள வாடிக்கையாளர்களுக்குப் பிரத்தியேக அக்கறை எடுத்து இலவசமாக ஜோதிடம் கணித்துத் தரப்படுகிறது.

இதோடு மட்டுமல்லாமல் வாடிக்கையாளர்களுடைய வசதிக்காக மாதாந்திர சேமிப்புத் திட்டம் மார்ச் மாதத்தில் இருந்து ஆரம்பிக்கிறோம். இத்திட்டத்தில் ரூ.250, ரூ.500, ரூ.1000/- என்று பத்து மாதம் செலுத்தி நகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

சொர்ணாலயா ஜுவல்லரியின் முக்கிய சிறப்பம்சம் என்னவென்றால் **'SWARNA CLUB'** என்று தொடங்கியுள்ளோம். **சொர்ணா** என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் பெயருடையவர்கள் யாராக இருந்தாலும் தக்க சான்றிதழுடன் இந்தக் கிளப்பில் பதிவு செய்து கொண்டால் அவர்களுக்கு நாங்கள் ஒரு சிறப்பு பரிசு தருகிறோம். (இதற்கு நகை வாங்கும் கட்டாயம் இல்லை). இந்தக் கிளப்பில் உள்ள அங்கத்தினர்கள் எங்களிடம் நகை வாங்கும் போது (வைரத்திற்கு 5%, ரூபி, எமரால்டு போன்ற கற்களுக்கு 10%) தள்ளுபடி செய்கிறோம்.

பொறுமைக்குப் பெயர் பெற்றவர்கள் பெண்கள். அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அனைத்து கௌண்டர்களிலும் பெண்களையே நியமித்திருக்கிறோம். எனக்கு உறுதுணையாக என் மனைவி லலிதா, மகள் அமிர்தா மற்றும் ஊழியர்கள், எல்லாவற்றுக்கும் மேலாக எமது வாடிக்கையாளர்களுடைய ஆதரவோடும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது **சொர்ணாலயா ஜுவல்லரி பிரைவேட் லிமிடெட்** என்கிறார் சுகுமாரன்.

28.1.2001 திறப்புவிழா அன்று நகை கடையை திருமதி ராஜாத்தி அம்மாளுடைய பொற்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டது. நல்லி குப்புசாமி செட்டியார், ஜி.ஆர்.டி. திரு. ராஜேந்திரன், சக்தி மசாலா உரிமையாளர்கள், ராஜ் டீ.வி. நிர்வாக இயக்குநர்கள், நடிகர்கள் பார்த்திபன்,



• திரு. சுகுமாரன் குடும்பத்தினர்

பாண்டு, 'அபஸ்வரம்' ராம்ஜி போன்ற பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு திறப்பு விழாவை சிறப்பித்தார்கள்.

SWARNALAYA JEWELLERY P.LTD.
#5, 'Swetamber Apartments',
New Door No. 5,
Bazulla Road,
T. Nagar,
Chennai - 600 017, India.
Tel: 8231986, 8231987
e-mail:asukumaran@eth.net

மார்ச் 8ம் தேதிக்கு என்ன அர்த்தம்?



எண்பதுகளில் தொலைக்காட்சியில் தோன்றிய இந்த முகம், பார்த்த மாத்திரத்தில் பலரின் நினைவுக்கு வந்துவிடலாம். இவர் திருமதி தேன்தமிழ் காந்திநாதன். முதுபெரும் பாடலாசிரியர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகத்தின் மகள். கண்மணிப் பூங்கா நிகழ்ச்சியில் குழந்தைகளோடு கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக்கொண்டிருந்த இந்தப் பெண்மணிக்கு, திருமணம்தான் எதிர்பாராத திருப்பம்.

சேலம் மாவட்டம், நங்கவள்ளி என்ற கிராமத்தைச் சேர்ந்த காந்திநாதனை மணந்து, கணவன் ஊருக்கே குடியேறினார். அங்கே கணவன், குடும்பம் என்று அமைதியாக நாட்களை நகர்த்த முடியவில்லை இவரால். காரணம், ஆதிக்க வாதிகளின் பிடியில், கொடுத்த வேலையைச் செய்து வயிற்றைக் கழுவிக் கொண்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களைப் பார்த்து உதிரம் கொதித்திருக்கிறது.

ஊருக்கென்று இருந்த ஒரே அடிபம்பில் குடிக்கக்கூட தண்ணீர் பிடிக்க முடியாமல் குமைந்து கிடந்தார்கள். இவர்களுக்காக ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்று துடித்தவருக்கு தமது மாமனாரின் கடந்த காலம் கலங்கரை விளக்கமாக வழிகாட்டி இருக்கிறது.

மாமனார், சேலம் கே.கு. முத்தையார். ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். காந்திஜியின் கட்டளையை ஏற்று நங்கவள்ளி அரிஜனங்களை 1948-ல் ஆலயப் பிரவேசம் செய்ய வைத்தவர். இதனால் ஊரிலிருந்து காலம் காலமாக ஒதுக்கி வைக்கப்பட்டது இவரின் குடும்பம்.

இதற்குப் பதிலடியாக நல்லது செய்ய வேண்டும் என்று முடிவு செய்து பாரதி மகளிர் மன்றம் என்ற அமைப்பைத் துணிவுடன் தொடங்கி விட்டார் தேன்தமிழ்.

முதலில், தலை விரித்தாடும் தண்ணீர்ப் பஞ்சத்தை தீர்க்க, வீட்டுக்கொரு பெண் வீதம் மூவாயிரம் பேரைத் திரட்டி, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வாசலில் நடுரோட்டில் அமர்ந்து மறியல் செய்ய, அன்று மாலையே ஆழ்குழாய்க் கிணறு போட கனரக வாகனம் கதறியபடி வந்துவிட்டது!

தண்ணீர்ப் பஞ்சம் தீர்ந்தால் மட்டும் போதாது என்று அடுக்கடுக்காக பல பணிகளைச் செய்து, அந்த ஊரின் முகத்தையே மாற்றியவரை 1986-ஆம் ஆண்டு பேரூராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் நிறுத்தி அழகு பார்த்திருக்கிறார்கள் மக்கள். ஊரிலிருந்த ஒட்டுமொத்த நிலச்சுவான்தார்களும் சேர்ந்து எதிர்க்க... அந்தத் தேர்தலில் தி.மு.க, அ.தி.மு.க உள்ளிட்ட ஏழு ஆண் வேட்பாளர்களை டெபாசிட் இழக்க வைத்திருக்கிறது இவரது வெற்றி!

பதவிக்கு வந்தபிறகு பொதுப் பணிகளில் இவர் காட்டிய வேகத்தைப் பார்த்து புழுங்கிய ஆதிக்கவாதிகள், "ஆசிட் அடிப்போம். ஊரை விட்டு வெளியேறு" என்று மேடை போட்டு மிரட்டியிருக்கிறார்கள். கொலை மிரட்டல் வேறு! பாதுகாப்பு கருதி காங்கிரஸ் கட்சியில் சேர்ந்திருக்கிறார் தேன்தமிழ்.... இவரது பொதுப்பணி பற்றி மூப்பனார் மூலம் கேள்வியுற்ற ராஜீவ்-சோனியா தம்பதி, சேலம் வந்தபோது, நங்கவள்ளிக்கே வந்து இவரை நேரில் சந்தித்துப் பாராட்டியிருக்கிறார்கள்.

கொதித்துப் போன ஆதிக்கவாசிகள் தருணம் பார்த்துக் காத்திருக்கிருந்தார்கள். நங்கவள்ளியில் நடந்துகொண்டிருந்த காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில், தேன்தமிழ் பேசிக்கொண்டிருந்தபோது, மின் இணைப்பைத் துண்டித்து, இருள் சூழ்ந்த கணத்தில் கல்லால் அடித்து அவர் மண்டையை உடைக்க... படுகாயத்துடன் நினைவிழந்த அவரை, சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்து, 48 மணி நேர போராட்டத்திற்குப் பிறகே காப்பாற்றியிருக்கிறார்கள். இதைக் கேள்விப்பட்ட ராஜீவ் - சோனியா மீண்டும் மருத்துவமனையில் சந்தித்து ஆறுதல் சொல்ல, தேன்தமிழ் காந்திநாதன் பற்றி அன்று செய்தி வெளியிடாத பத்திரிகைகளே இல்லை.

இனி அவர் சேவை மகளிர் காங்கிரசுக்குத் தேவை என்று அவரை மகிளா காங்கிரசின் தமிழ் மாநிலத் தலைவராக உயர்த்தியிருக்கிறது கட்சி மேலிடம். அதன் பிறகு ஒரு கிராமத்தோடு மட்டும் தனது பணிகளைச் சுருக்கிக் கொள்ள

முடியாமல் நாடு முழுவதும் அலைய வேண்டிய கட்டாயம். தேர்தல் கமிட்டி, மகளிர் அரசினர் பயிற்சி குழு, காங்கிரஸ் கலைக் குழு, போலியோ குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கும் 'எக்சாம்வெல்' அமைப்பில் பணி என்று இழுத்துப் போட்டுக் கொண்டு உழைத்து வந்தார். ஆனால் திடீரென்று காங்கிரசிலிருந்து காணாமல் போனார். அதிலிருந்து தன்னைத் துண்டித்துக்கொண்டு இன்று சென்னை புறநகரில் அமைதியாக இருந்து வருகிறார்... ஓடி ஓடி உழைத்து ஊர்ப் பணி செய்த இவர் இன்று ஏன் ஊமையானார்? அவரை நேரில் சந்தித்துக் கேட்டோம்.




• சோனியாவுடன் தேன்தமிழ்

''என் வாழ்நாளில் நான் செய்த இமாலயத் தவறு அரசியலுக்கு வந்தது தான்... சமூக சேவை செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள் தவறியும் அரசியலுக்கு வந்துவிடக் கூடாது. பதவி இருந்தால் அதிகாரத்தின் துணையோடு பல பணிகளைச் செய்ய முடியும் என்ற எண்ணத்தில், பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட சீட் கேட்டேன். எனக்குக் கொடுக்கக்கூடாது என்று இங்குள்ள தமிழக காங்கிரஸ் தலைவர்கள் முட்டுக் கட்டை போட்டார்கள். எனக்கு சீட் கொடுத்தால் கட்சிப் பணியாற்ற முடியாமல் போய்விடும் என்றும், தவிர, சாதி பலம், பணபலம் துளியும் கிடையாது என்றும் காரணம் காட்டி ஏமாற்றினார்கள். சாதி, கட்சி பேதம் இல்லாத மக்கள் சக்திதான் என்னைப் பேரூராட்சித் தலைவராக்கியது. அந்த வெற்றிக்குக் காரணம் எனது பொதுப்பணி. மக்கள் ஏற்றுக் கொண்டாலும், சுயநலம் தவிர வேறு எதுவும் தெரியாத தலைவர்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. திட்டமிட்டு, தேர்தல் நேரங்களில் என்னைப் புறக்கணித்தார்கள். கட்சி அரசியலில் பட்ட காயங்களால்தான் காங்கிரசிலிருந்து விலகினேன்!'' என்று குமுறிய படி சொல்கிறார்.

மார்ச் எட்டாம் தேதியை அகில உலக பெண்கள் தினமாகக் கொண்டாடுவதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா...?

சந்திப்பு: **சக்கரத்தாழ்வார்**
படங்கள்: **ராஜன்**



தஞ்சாவூர் கல்கி ஏஜண்டு **திரு. வி. ஜெயராமன்** அவர்களின் புதல்வர் **சிரஞ்சீவி ரமேஷ் B.E.,** அவர்களுக்கும், **சௌபாக்கியவதி ஹேமாமாலினி B.Sc** அவர்களுக்கும் 29.1.2001 அன்று தஞ்சையில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. திருமணத்திற்கு நண்பர்களும், உறவினர்களும் ஏராளமாக வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வதித்து வாழ்த்தினார்கள்.

வாழ்க மணமக்கள்!

‘இந்த நேரத்துல இவன் எங்கே வந்தான்?’

கேசவ் அஜய்யைப் பார்த்து பச்சை பாகற்காயை முழுசாக கடித்தாற்போல முகத்தை வைத்துக் கொண்டு, ஒப்புக்கு தலையை அசைக்கிறார். வாயைத் திறந்து ‘வா’ என்று கூட கூப்பிடவில்லை. அவரது கவனம் முழுக்க அவிநாசியிடமும், அவரது மகன் திவாகரிடமுமே.

சும்மாவா... வராத மனுஷன் வந்திருக்கிறான். கர்நாடகாவுக்கும், தமிழ்நாட்டுக்கு மாய்க் கலக்குகிற இரண்டு புள்ளிகளில் ஒன்று வீரப்பன் என்றால், மற்றொன்று இந்த அவிநாசிதான். மனிதன் எப்பொழுது எந்தக் கட்சியில் இருப்பார் என்று தெரியாது. ஆளும் கட்சியாக எது வந்தாலும், அதில் இவர் இருப்பார். ஏழெட்டுத் தலைமுறைக்கு மட்டுமில்லை. ஏழெட்டு யுகங்களுக்குச் சொத்து சேர்த்து வைத்திருக்கிறார்.

அப்பேர்பட்ட மனிதர், வெளியே காட்டிக் கொள்ளப்படும் சொத்து பத்துகளுக்கு மேல் பத்து மடங்கு கடன்பட்டு இருக்கும் - ஆயிரம் பக்கங்களுக்கு மேல் புகார் மனுக்களால் ஜாதகம் குறிக்கப்பட்டு இருக்கும் - தில்லுமுல்லு திப்பிசமே உருவாக இருக்கும் கேசவ்ராமின் வீடுதேடி வந்து பேசிக் கொண்டிருக்கிறார் என்றால் - அதற்கு ஒரே காரணம்... அவரது செல்வத் திருக்குமாரன் திவாகரனுக்காகத்தான்.

அந்த நாளைய தேவதைக் கதைகளில் ஒரு ராக்ஷஸனின் உயிர், ஏழு மலை ஏழு கடல் தாண்டி மரப்பொந்தில் உள்ள பொன் வண்டுக்குள் இருப்பதாகக் கூறப்படுவதைப் போல..

அவிநாசியின் உயிர் அனுமந்து என்கிற ஜோஸியர் சொல்லும் வார்த்தையில் இருக்கிறது. ஒவ்வொருத்தொருக்கு ஒவ்வொரு விதமான பலவீனம். அவிநாசிக்கு ஜோஸியத்தில்... அதுவும் அனுமந்து சொல்லும் ஜோஸியத்தில்தான் பலம், பலவீனம் இரண்டுமே.


கேசவராமைச் சந்தித்ததுகூட அனுமந்துவின் வீட்டில்தான். உருப்படாத மகனுக்கு உருப்படியான மனைவி இடைப்பாளா என்றும் வருகிற தேர்தலில் தான் எந்தக் கட்சியில், எந்தத் தொகுதியில் நிற்கலாம் என்றும் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக அனுமந்துவின் வீட்டிற்கு அவிநாசி வர, நாலா திசையிலும் சமுத்திரமாய்ச் சூழ்ந்துள்ள நிதி நிறுவன மோசடிகளில் இருந்து தப்பிக்க தனது ஜாதகத்திலோ அல்லது தன் பெண்டாட்டி ஜாதகத்திலோ, ஏதாவது ஒரு நல்ல அறிகுறியாவது தெரிகிறதா என்று விசாரித்துத் தெரிந்து கொள்ள கேசவராம் வர-

அனுமந்துவும், கேசவராமின் மகள் சுஜாவின் ஜாதகத்தையும், அவிநாசியின் மகன் திவாகரின் ஜாதகத்தையும் மேல் எழுந்தவாரியாக ஒரு நோட்டம் இட்டுவிட்டு, ஒரே போடாகப் போட்டார்.


“அவிநாசி அண்ணா, அதிர்ஷ்டம் வருதுன்னா இப்படித்தான் வரும். பாருங்கோ... சாட்சாத் மகாலட்சுமியே கேசவராமோட பெண் சுஜா ரூபத்துல வந்திருக்கா. உங்க பையனுக்கு இவளை முடிச்சுப் போட்டா - இந்தியாவில் மட்டும் அல்ல... சந்திரமண்டலத்தில் கூட நீங்க மந்திரி ஆகக் கூடிய சான்ஸ் இருக்கு. இப்போ பணம் நிலா திசையில் இருந்து வருதோ இல்லையோ... அப்ப எட்டு திசையில் இருந்தும் வரும். ராஜ்ய லட்சுமி, தன லட்சுமி, இப்படி அஷ்ட லட்சுமிகளும் சேர்ந்து உங்களுக்கு நாட்டுப் பொண்ணா வர்றதுக்கு யோகம் இருக்கு. அவ்வளவுதான் நான் சொல்வேன். கப்புனு புடிச்சுக்கோங்கோ”

அவிநாசிலிங்கத்துக்கு, கேசவ்ராம் சாட்சாத் வெங்கடாசலபதி போலவே காட்சியளித்தார். கேசவ்வுக்கோ - ஒரேயொரு கேள்விக்குப் பதில் சொல்லி குரோர்பதி ஆன

இனிமேல் ஆரம்பம்



சந்தோஷம். தலை கால் புரியவில்லை. இவர், அவரது மாளிகைக்குப் போய் விருந்துண்டு, அரசியல் பேசி, அவரது ரேஸ் குதிரைகளில் இருந்து வீட்டு வாசலில் போட்டிருக்கும் மிதியடி வரையில் தோராயமாக எவ்வளவு தேறும் என்று கணக்குப் போட்டு, இந்த மாபெரும் சொத்துக்களுக்கு முன் - தனது நிதி நிறுவன கடன், கடலில் கரைத்த பெருங்காயம் என்பதை உணர்ந்து கொண்டு, பூரித்து, மகளையும், மனைவியையும் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்க வைக்க அரும்பாடுபட்டுக் கொண்டிருந்த சமயத்தில்தான் அஜய் வந்து நிற்கிறான்.



எத்தனை முறை ரப்பரால் அழித்தாலும், அழிபடாத கிறுக்கலைக் கண்டு எரிச்சலுறும் குழந்தையைப்போல

20

கேசவ்வுக்குள் ஆத்திரம் மண்டுகிறது. அதே சமயம் பெரிய மனிதர்கள் முன் எதையும் வெளிக்காட்டி ரசாபாசம் ஆக்கிக் கொள்ள முடியாமல் கௌரவம் தடுக்கிறது.

'எங்கே சுஜா வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போல அஜய்யைப் பார்த்ததும் மாறிவிடுவாளோ' என்கிற பயம் ஒரு பக்கம்.

சுஜாவோ, ஏதோ தினமும் பார்க்கும் நண்பனை வரவேற்பது போல அஜய்யை, 'ஹேய் எப்போ வந்தே' என்று கேட்டுவிட்டுப் போனாள். மறுபடியும் திவாகர், அவிநாசியிடம் பேச்சைத் தொடர்ந்தார். நடுவில் ஒரு முறை அம்மாவைக் கூப்பிட்டு, 'அஜய் வந்திருக்கான்... காபி கொடும்மா' என்று கூறியதோடு சரி.

அஜய்தான் பாவம். பொருட்காட்சியில் தொலைந்த குழந்தை மாதிரி விழித்துக் கொண்டு நின்றான். கல்பகத்துக்கு அவனைப் பார்க்க பார்க்க வயிற்றுக்குள் சங்கடம் அலை அலையாய்ப் புரண்டது. மகளைத் தனியே ஜாடை காட்டி அழைத்து, அடிக் குரலில் கூறினாள்.

"இந்தா, வராதவன் வந்திருக்கான். அவனோட முதல்லே பேசு."

அனுராதா ரமணன்

மனைவி மகளை எதற்காக கூப்பிடுகிறாள் என்பதை, பின்னாலேயே தொடர்ந்து வந்து மோப்பம் பிடித்த கேசவ் எகிறினார்...

"குழந்தைக்கு யாரோட எப்போ பேச ணும் கறதை நீ சொல்லித் தர வேண்டாம். அவ புத்திசாலி."

- இப்படிச் சொன்னதோடு மட்டுமல்லா மல், அந்தக் கணமே அஜய்யிடம் அவிநாசி யையும், திவாகரையும் அறிமுகப்படுத்தி அவன் தலையில் அம்மிக் குழவியால் நசுக்கு வது போல வார்த்தைகளால் தாக்கினார்.

"இன்னிக்கு கர்நாடகாவிலேயே சின்னக் குழந்தைக்குகூட அவிநாசி சாரைத் தெரியும். ராஜ்குமாரை வீரப்பன் கடத்திக் கொண்டு போய் வெச்சிட்டிருந்தப்ப என்ன பண்றது, எப்படி விடுவிக்கறதுன்னு கர்நாடக முதல் மந்திரி கிருஷ்ணா இவன்கிட்டேதான் ஆலோசனை கேட்டார். இப்போகூட வெளி யில் ஒரு ரூமர் இருந்துண்டிருக்கு. தன்னோட கோரிக்கைகளை கர்நாடகா அரசு நிறை வேற்றாததால எப்ப வேணாலும் வீரப்பன் குருப் அவிநாசியையோ, அவர் பிள்ளை யையோ கடத்திட்டுப் போய் வெச்சிக்கற துக்கு சான்ஸ் இருக்குன்னு. ஹி..ஹி... ஆனா, சார் அதற்கெல்லாம் பயப்படற ரகம் இல்லை. உனக்கு ஒரு விஷயம் தெரியுமோ... நம்ம சுஜா இவர்வீட்டு மருமகளாதான் போகப் போறா..."

அஜய் அதிர்ந்து போய் சுஜாவையும், கேசவ்வையும் மாறி மாறி பார்த்தான். கல்பகமோ செய்வது அறியாது கைகளைப் பிசைந்தவாறு நின்றாள். அஜய்யின் அவஸ் தையை உள்ளூர ரசித்துக் கொண்டே கேசவ், மேலும் வார்த்தைகளால் குத்தினார்.

இந்த ஏப்ரலில் கல்யாணத்தை வெச்சிக்க லாம்னு சார் சொல்றார். நிச்சயதார்த் தத்தை ஒரு வாரத்தில் வெச்சக்கணுமாம். நான் என்ன செய்யப் போறேன் தெரியலே. ஆனா எல்லாத்தையும் அவரே பார்த்துப் பார்னு வெச்சுக்கோ. பொண்ணைப் பெத்த வன்கற கடமைக்கு நான் ஏதாவது செய்ய வேண்டாமா. அதுபத்திதான் இப்போ நான் பேசிட்டிருக்கேன்.

அஜய் எதிர் சோபாவில் அமர்ந்து சுஜா வையே வெறிக்க வெறிக்க பார்த்துக் கொண் டிருக்கும் திவாகரை ஒருமுறை பார்த்தான். உமட்டல் எடுத்தது. அத்தனை பெரிய பணக் கார அப்பா. அரசியல் செல்வாக்கு மிகுந்த வர். தும்பைப் பூ மாதிரி வேஷ்டியும் பட்டு ஜிப்பாவும், அங்கவஸ்திரமுமாக பளீரென்று நிற்கிறார். இவனானால் கலைந்த தலையும், ஒற்றைக் காதில் கடுக்கனும், அழுக்கு ஜீன் ஸ்ும், சாயம்போன டீ சர்ட்டும், ஷேவ் செய்யப்படாத முகமும், எண்ணெய் பள பளக்கும் மூக்கும், நிகோட்டினில் கறுத்த உதடுகளும், முதல் நாள் அடித்த விஸ்கி யினால் சிவந்திருந்த கண்களுமாய்...

தாங்க முடியவில்லை அஜய்யினால். அவன் ஆசை ஆசையாய் கொண்டு வந்த மைசூர்பாகு டப்பாவும், தேன் குழல் பொட்டலமும் டீபாயின்மீது சிந்துவாரற்றுக் கிடக்கிறது.

சுஜா...

அவனது சுஜாவா அவள்?

தனக்காக, தனக்குப் பிடிக்குமே என்று பாவாடை தாவணி கட்டும் சுஜா, காட்டன் சுரிதார் போடும் சுஜா, ஒற்றைப் பின்ன லிட்டு, தலைநிறைய பூ வைத்து, பின்னலை முன்புறம் போட்டு, அவனுடன் பேசிக் கொண்டே அவிழ்த்து, அவிழ்த்து பின்ன லிட்ட கூந்தலோடு சேர்த்து அவனது மனசையும் பின்னலிட்ட சுஜா -

இங்கே 'பாப்' செய்யப்பட்ட தலையும், மிடியும், ஸ்லீவ்லெஸ் டீசர்ட்டுமாய் அமர்ந் திருப்பவளைப் பார்க்கையில் - இவளையா நாம் ஐந்து வருடங்களாக, 24 மணி நேரமும் விடாமல் காதலித்தோம் என்கிற பிரமை தட்டியது. அதே சமயத்தில் இத்தனையும் பொய்யாய்ப் போய் விடக் கூடாதா என்கிற நப்பாசையும் கூட. அவன் கிளம்புமுன் - அவள் தங்கி இருக்கும் ஹோட்டலின் பெயர், அறை எண், தொலைபேசி எண், கொடுத்துவிட்டு, இன்னும் இரண்டு மூன்று நாட்கள் பெங்களூரில்தான் தங்கப் போவதாகவும், முடிந்தால் போனில் பேசும்படியும் கூறிவிட்டு, துக்கம் தொண் டையை அடைக்க கிளம்புகிறான்.

மூன்றல்ல, ஐந்து நாட்கள் காத்திருந்தும் கூட அவனிடமிருந்து ஒரு போன்கூட வரவில்லை.

(தொடரும்)


"இந்த யாகம் எதுக்காக தலைவரே?"

"அடிக்கடி யாகம் நடத்தற சூழ்நிலை வர்றதைத் தடுக்கத்தான்!"

- அம்பை தேவா



KALKI SHOPPING PAGE



ஓம் ஸ்ரீ காயத்ரி துணை

ஓ

பிரபல ஜோதிடரும் "காயத்ரி உபாசகரும்" ஆன திரு **B. சீனிவாசன்** அவர்கள் ஜாதகம் மற்றும் கைரேகை மூலம் உங்கள் எதிர்கால பலன்களை (**வேலை வாய்ப்பு, திருமணத்தடை, தம்பதியர் ஒற்றுமை குறைவு, பிரிந்த தம்பதியர் கூடுதல், வெளிநாட்டில் வேலை வாய்ப்பு, குழந்தை பாக்கியம், நோய்கள் மற்றும் இதர பிரச்னைகள்**) மிக துல்லியமாகவும் அருள்வாக்கு போன்ற உள்ளுணர்வுகளாலும் கணித்துக் கூறுகிறார். இவர் மூலம் எதிர்காலம் அறிந்து பயனடைந்தோரில் பெரிய அதிகாரிகள், அரசியல் பிரபலங்கள், கலை உலக பிரமுகர்கள் மற்றும் பலரும் அடங்குவர். தோஷ நிவர்த்திக்கு தகுந்த பரிகாரங்களையும் கூறுகிறார். ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் இவரைச் சந்திக்க முன் அனுமதி (Appointment) பெற்று சந்திக்கலாம். இவரைத் தொடர்புகொள்ள வார நாட்களில் காலை 7 மணி முதல் 9 மணி வரை **4957221** என்ற எண்ணிற்கு போன் செய்து முன் பதிவு செய்து கொள்ளலாம்.

நவக்கிரக ஆன்மீக பயணம்

நாள் : சென்னையிலிருந்து 16.3.2001 இரவு கிளம்பி 19.3.2001 காலை திரும்புதல்

2 தினங்கள் ரூபாய் 700/-

வசதி : இரயிலில் படுக்கை வசதியுடன் சென்று வருதல்.

இரவு தங்க வசதியான அறைகள், திருத்தலங்களை சுற்றி பார்க்க வேன் வசதி உட்பட. மற்றைய தேதிகளில் சிறு சிறு குழுக்களாகவும் அழைத்துச் செல்லப்படும். (சாப்பாடு நீங்கலாக)

சென்னையில் தொடர்பு கொள்க போன் : 4892205

VISWAM TOURS & TRAVELS
VISWAM GUEST HOUSE

33, திருமஞ்சன வீதி, திருவிழுந்தூர்,
மயிலாடுதுறை-609 001. போன் : 04364-27228
e-mail : viswamnet@vsnl.net
website : www.visvamtours.com

தேவேந்திரா சாரீஸ்

H.O.: 27, ஏலா கந்தப்பன் தெரு, சென்னை – 3.	கிளை: கடை எண். 7, ராம்ஸ் பஜார், 3, பிரகாசம் ரோடு, பனகல் பார்க், தி.நகர், சென்னை–17.

நாங்கள் எங்கள் புடவைகளை...

- புதிய புதிய கலர்களில் தயார் செய்து இருக்கிறோம்.
- புதிய புதிய பார்டர்களில் தயார் செய்து இருக்கிறோம்.
- பல கலர்களில் கட்டம் போட்டு தயார் செய்து இருக்கிறோம்.
- முன்பைவிட சன்னமாக தயாரித்து இருக்கிறோம்.
- மிக விலையுயர்ந்த சாயங்களில் தயார் செய்திருப்பதால் சாயம் போகாது.
- மிகவும் அகல, நீளத்துடன் இருப்பதால் சுருங்காது.
- ஒருமுறை வாங்கி உபயோகித்து பாருங்கள். மிகவும் நேர்த்தியாக இருக்கும்.

எல்லா ஊர்களிலும் உள்ள எங்கள் ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

"இதனை ஓர் இளைஞர் அமைப்பாகவே உருவாக்கி, இத்தகைய திருவிழாக்களை அடிக்கடி நடத்தலாமே!"
— டி.கே. ஹரிஹரன், மயிலாப்பூர்

"சிந்திக்க வைக்கும் சீரிய முயற்சி. பாராட்டு.
— எஸ். விஸ்வநாதன், சென்னை — 88.

"எதைப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. எல்லாமே சிறப்பு!"
— எஸ். ராதா, திருவண்ணாமலை.

"நகரத்தின் முக்கிய பகுதிகளிலெல்லாம் நடத்துங்கள்!"
எம். மகேஸ்வரி, சென்னை — 20.

"பெரியார்தாசனின் 'மனவளப் பயிற்சி' மிகவும் பயனுள்ளதாக இருந்தது. எம்.பி. நிர்மலின் நகைச்சுவைப் பேச்சு உற்சாகம் தந்தது.
— ஆர். விஜயா, கரூர்.



வேறு சுவை!



நில், கவனி, வெற்றிகொள்!

கல்கி - ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

இணைந்து வழங்கும்

இளைஞர் திருவிழா!

"அடடா, அவ்வளவு அருமையான நிகழ்ச்சியா? கலந்து கொள்ள முடியாமல் போய் விட்டதே" என்று ஏங்க வேண்டாம்... மூன்றாவது நிகழ்ச்சிக்கு முதல் நபராக வந்து விடுங்கள். ஏனென்றால், இது விலா நோகச் சிரிக்க வைக்கும் சிரிப்பு ஸ்பெஷல் நிகழ்ச்சி!

தலைப்பு:

ஏழாவது சுவை

நாள்: **11.3.2001 (ஞாயிற்றுக்கிழமை)**

இடம்: **நாரதகான சபா, டி.டி.கே சாலை, ஆழ்வார்பேட்டை**

நேரம்: **மாலை 6 மணி**


தலைமை உரை:

'சிரிப்பலைச் செம்மல்' கணா. சிற்சபேசன்

சிறப்புரை: **'காமெடி கிங்' எஸ்.வி. சேகர், 'நகைச்சுவை நாயகர்' பேராசிரியர் டாக்டர் கு. ஞானசம்பந்தம்**

சிரிக்க வாங்க! சுவைக்க வாங்க! சிந்திக்கவும் தாங்க!





‘பளிச்’ தேர்!

சமீப காலமாக, மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்கள் ‘வந்தோம், சாமி கும்பிட்டோம், போனோம்’ என்று இருப்பதில்லை. நின்று, நிதானித்து அந்த அதிசயக் காட்சியைப் பார்த்துவிட்டுத் தான் போகிறார்கள். கோயிலுக்கு வரும் பக்தர்கள் என்று இல்லை. தெருவில் போவோரையும் வருவோரையும் கூட கொக்கி போட்டு இழுத்து விடுகின்றது அந்தக் காட்சி.

அப்படி என்னதான் நடந்து கொண்டிருக்கிறது கோவிலில்?

350 வயது ஆன, மீனாட்சி அம்மன் கோவில் தேரை நவீன முறையில் சுத்தம் செய்யும் பணி மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது.

சித்திரை மாதத் தேர் திருவிழா முடிந்ததும் தேர் மீது விளக்கெண்ணெய் மற்றும் தயிர் கொண்டு தயாரிக்கப்பட்ட கலவை பூசப்பட்டு தேர் மூடி வைக்கப்பட்டு விடும். பிறகு அடுத்த ஆண்டு தேரோட்டத்தின்போதுதான் உறையைப் பிரிப்பார்கள்.

இப்படியே பல ஆண்டுகள் கடந்து போனதில் தேர் மீது கறுப்புக் கலவை படிந்து தேரின் நிஜ வண்ணமும் அதில் உள்ள சிற்பங்களும் தெரியாமல் போய்விட்டன.

இந்த நிலையில் தேர்களை நவீன முறையில் சுத்தம் செய்யும் சிக்கலான வேலைக்கு கோயில் நிர்வாகம் பொறுப்பு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதை, மதுரையைச் சேர்ந்த வேல் மெட்டலைசிங் நிறுவனத்திடம் ஒப்படைத்திருக்கிறது. அந்த நிறுவனத்தின் உரிமையாளர் குமாரசாமி கூறுகையில் “இந்தியாவிலேயே தேர் சுத்தம் செய்யும் பணி முதன்முறையாக இங்குதான் செய்யப்படுகிறது. நூற்றுக்கணக்கான வருஷங்களாகச் சேர்ந்துள்ள அழுக்கும் எண்ணெய்ப் பிசுக்கும் ஒன்றரை இஞ்ச் அளவுக்கு இருக்கிறது. இதை எடுப்பது என்பது சாமானியமான காரியம் அல்ல. கெமிக்கல் முறையில்தான் செய்து கொண்டிருக்கிறோம். சிற்பங்களுக்கு எந்தச் சேதாரமும் ஏற்பட்டு விடாமல் சர்வ ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டி இருக்கிறது. முழு ஈடுபாட்டுடன் உழைத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் முடித்து விடுவோம்!” என்கிறார்.

“சுத்தம் செய்யும் பணி முழுமையாக முடிந்தவுடன் தேர் ‘பளிச்’ என்று ஆகிவிடும். அப்பொழுது, மக்கள் கண் பார்வைக்காக தேரை சில நாள் வெளியில் வைக்கப் போகிறோம்!” என்கிறார் போ. ராமராஜ், கோவில் நிர்வாக அதிகாரி.

“சுவாமி தேரில் நடந்து கொண்டிருக்கும் வேலை முடிந்தவுடன் அம்பாளுடைய தேரையும் சுத்தப்படுத்தும் பணி தொடங்கிவிடுவோம்!”

— எஸ். குமார்

Dreams Audio

DREAMS AUDIO

Proudly Presents

SAI SANGAMAM


Devotional



Vidya Vishwanathan




Music
Ramani Bharadwaj



Produced by : V. Vishwanathan

Each Rs.40/- Only



OM NAMO SAI NARAYANAYA

(Chanting)



BOMBAY SISTERS

Media Dreams ltd Chennai - 600 017. Ph : 8203715 Visit us at WWW. MEDIA-DREAMS.COM

அனைத்து கேசட் கடைகளிலும் கிடைக்கும்

சர்க்கரை நோய்

சர்க்கரை நோயைக் குணப்படுத்த வெவ்வேறு நாடுகளில் ஆராய்ச்சிகள் சுறு சுறுப்பாக நடந்துகொண்டிருக்கின்றன. ஆராய்ச்சியாளர்கள் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒருமுறை ஒன்றுகூடி ஒரு மாநாட்டை நடத்தி தாங்கள் அடைந்திருக்கும் முன்னேற்றத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள். மாநாட்டின் குறிக்கோள்கள் - ஒருவருடைய கண்டுபிடிப்புகள் இன்னொருவரின் ஆராய்ச்சிக்கு பரஸ்பரம் உதவியாக இருக்க வேண்டும் என்பது ஒன்று. இரண்டு பேர் தற்செயலாக ஒரே ஆராய்ச்சியில் ஈடுபடுவதையும் அதனால் ஏற்படும் பண விரயத்தையும் தடுக்க வேண்டும் என்பது இன்னொன்று.

இந்த வருட மாநாட்டை சென்னைக்குக் கொண்டு வந்தே தீருவது என்று ஒற்றைக் காலில் நின்று அதைச் சாதித்தும் காட்டியிருக்கிறார் ஸ்வீடனில் வசிக்கும் இளம் டாக்டர் சி.பி. சஞ்சீவி. சென்னை மருத்துவக் கல்லூரியில் படித்தவர்.

"ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, இதர ஆசிய நாடுகள் - இவற்றில் மாநாடு நடக்கும் பொழுது இந்திய விஞ்ஞானிகளுக்குப் பங்கேற்பது கஷ்டமாகி விடுகின்றது. அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுடைய ஆராய்ச்சியைப் பற்றி உலகிற்குத் தெரியும் பொருட்டு, இந்த மாநாட்டை இந்தியாவில், குறிப்பாக சென்னையில் நடத்த வேண்டும் என்பதில் முழு மூச்சாக இருந்தேன்!'' என்கிறார், மாநாடு அமோக வெற்றி பெற்று விட்ட களிப்பில் இருக்கும் டாக்டர் சஞ்சீவி.


கல்கி வாசகர்களுக்காக அவர் அளித்த பேட்டி:

சர்க்கரை வியாதி என்பது உயிர்க் கொல்லி நோயா?

தனிப்பட்ட முறையில் சர்க்கரை நோய் என்பது உயிர்க்கொல்லி நோய் இல்லை தான். ஆனால் சில முறைகேடுகள் நிகழ்ந்தால் இது உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய ஒன்று. உதாரணமாக இருதயமும் சிறுநீரகமும் பழுதடைவதற்குச் சர்க்கரை வியாதி வழி வகுக்கக்கூடும். இதைத்தான் முறைகேடு என்று சொன்னேன்.

சர்க்கரை வியாதி என்றால் என்ன?

சக்தி இருந்தால்தான் நாம் எதையுமே செய்ய முடியும். எழுத, நடக்க, உட்கார, ஏன் தூங்கக்கூட நமக்குச் சக்தி வேண்டும். அதாவது, நம் உடலில் உள்ள எல்லா உறுப்புகளும் இயங்க சக்தி தேவைப்படுகின்றது.



இந்தச் சக்தியைத் தருவது குளுகோஸ் என்கிற சர்க்கரை. இது எங்கே கிடைக்கின்றது? நம் உணவில் உள்ள மாவுப் பொருள்களில். நாம் சாப்பிடும் மாவுப் பொருள்களை குளுகோஸாக மாற்றி, இரத்தத்தின் வழியாக எல்லா உறுப்புகளில் இருக்கும் செல்களுக்கும் அனுப்புகிறது நம்முடைய குடல்.

இப்பொழுது இரத்தத்தில் உள்ள குளுகோஸை அப்படியே எடுத்துப் பயன்படுத்திக் கொள்ள பல உறுப்புகளுக்குத் தெரிவதில்லை. அதற்கு இன்சுலின் என்று ஒரு இயக்குநீர் - என்ஜைம் - தேவைப்படுகின்றது. அதாவது, இன்சுலின், ரத்தத்தில் உள்ள சர்க்கரையைச் சக்தியாக மாற்றித் தருகிறது, உடலின் பல உறுப்புகளுக்கு.

இந்த இன்சுலினை உற்பத்தி செய்வது பான்கிரியாஸ் என்ற கணையைச் சுரப்பி. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால்,

டயாபடீஸ் மாநாடு அமோக

க்குத் தடுப்பூசி!

அந்தச் சுரப்பியில் இருக்கும் 'பீட்டா' செல்கள். அவை ஒவ்வொன்றும் ஒரு இன்சுலின் ஃபாக்டரி.

இன்சுலின் தயாரிப்பு சீராக நடைபெறும் பொழுது எந்தப் பிரச்னையும் ஏற்படுவதில்லை. ரத்தத்தில் சர்க்கரை அளவும் கட்டுப்பாட்டில், 80-120 மில்லி கிராம்ஸ் அளவுக்குள் இருக்கிறது.

ஆனால் இந்த இன்சுலின் தயாரிப்பில் கோளாறு ஏற்படும்பொழுது ரத்தத்தில் உள்ள சர்க்கரையைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாமல், இயங்குவதற்கு போதிய சக்தி கிடைக்காமல் முழி பிதுங்குகின்றன செல்கள். பலன், ரத்தத்தில் சர்க்கரை கூடுகின்றது. ஒரு குறிப்பிட்ட அளவை அது தாண்டும்பொழுது கூடுதல் சர்க்கரையை வெளியேற்றியே ஆக வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் உடலுக்கு ஏற்பட்டு, உடனே அதைச் சிறுநீர் வழியாக வெளியேற்றி விடுகிறது. ஆனால் அளவுக்கு அதிகமான சர்க்கரை, நீர்த்தாரைகளை அடைத்துக் கொண்டால் அபாயமாகிவிடும். இந்தப் பிரச்னையைத் தடுக்கிறேன் பேர்வழி என்று, உடல், தேவைக்கு அதிகமாகவே நீரை வெளியேற்றுகிறது.

இந்த நிலை நீடிக்கும்பொழுது, உடலின் பல செல்கள் தண்ணீர் விடாத பயிர் போல வாடி வறண்டு செயலிழந்து போய் விடுகின்றன. சர்க்கரை வியாதியின் பயங்கரம் இதுதான்! சர்க்கரை நோய்க்கு நீரிழிவு நோய் என்ற பெயர் வந்ததற்கு காரணமும் இதுதான்!

சர்க்கரை வியாதி எதனால் வருகின்றது?

சர்க்கரை வியாதி பல காரணங்களால் ஏற்படுவதுண்டு. இந்த அடிப்படையில் அதை டைப் - 1, டைப் -2 என்று இரண்டு நோய்களாகப் பிரிக்கலாம்.

டைப் - 1.

சில வகை சிகிச்சைக்கான மருந்துகள், சில கிருமி தாக்குதல்கள் அல்லது நோய்த் தொற்று காரணமாக இன்சுலின் உற்பத்தி செய்யும் பீட்டா செல்கள் அழிகின்றன. அத்தகைய சமயங்களில் இன்சுலின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இந்தக் காரணத்தால் ஏற்படும் டயாபடீஸுக்கு டைப் - 1 என்று பெயர்.

வம்சாவளி காரணமாக கூட டைப் - 1 டயாபடீஸ் ஏற்படலாம். அப்பாவுக்கு டைப்-1 டயாபடீஸ் இருந்திருந்தால் பிள்ளைக்கு அது தன்னிச்சையாக ஏற்



• டாக்டர் சஞ்சீவி

வெற்றி! — டாக்டர் சி.பி. சஞ்சீவி

ஐந்து ஆண்டுகளுக்குள் நோயைக் குணப்

பட வாய்ப்பு இருக்கிறது.

டைப் -2:

காரணம்- 1. இன்சுலின் ஃபாக்டரிகள் என்ற பீட்டா செல்கள் போதிய அளவில் இருந்தாலும் அவற்றின் செயல்பாட்டில் குறை இருக்கும். பலன், இன்சுலின் உற்பத்தி பாதிக்கப்பட்டுவிடும்.

காரணம்-2. உடல் பருமனாக உள்ள வர்கள், அதாவது தங்களுடைய உடல் உழைப்பு, உயரம், வயது, இவற்றை மனத்தில் கொள்ளாமல் தேவைக்கு அதிக மாக உண்பவர்களுக்கு இது ஏற்படுகின் றது.

நாம் தேவைக்கு அதிகமாக உணவு உட்கொள்ளும் பொழுது கொழுப்புச் சத்து செல்கள் வந்தடைகின்றன. இவை இன்சுலின் இடும் கட்டளையை நிறை வேற்றாமல் உண்மையிலேயே கொழுப்பாக நடந்து கொள்ளுகின்றன. இதனால் இன்சுலினுக்குத் தன்னுடைய வேலையை ஒழுங்காகச் செய்ய முடியாமல் போய்விடுகின்றது. பலன், போதிய குளு கோஸ் உறுப்புகளுக்குப் போய்ச் சேர் வதில்லை.

இந்த குறைபாட்டுக்குக் காரணம் கொழுப்புச் சத்து செல்கள் என்பதைப் புரிந்துகொள்ளாமல் கணையம்தான் போதிய அளவு இன்சுலினை உற்பத்தி செய்யவில்லை போலும் என்று தவறாக நினைத்து விடுகின்றது மூளை. உடனே, "இன்சுலின் உற்பத்தியைப் பெருக்கு!" என்று கணையத்தை மிரட்டுகிறது. அதுவும் இன்சுலின் உற்பத்தியைப் பெருக்கிப் பெருக் கிச் சோர்ந்து போய்விடுகிறது. நாளடை வில் சர்க்கரை நோயும் வந்துவிடுகின் றது!

டைப் - 1 டயாபடீஸைப் போலவே இந்த டைப் - 2 டயாபடீஸ் நோய்க்கும் பாரம்பரியம் சில சமயம் காரணமாக அமைந்து விடுவது உண்டு.

சர்க்கரை நோயைக் குணப்படுத்தும் ஆராய்ச்சி எந்த மட்டில் இருக்கிறது?

எங்களுடைய ஆராய்ச்சி எல்லாம் டைப்-1 டயாபடீஸ் சம்பந்தப்பட்டது. இது சிறு குழந்தைகளைக்கூட தாக்கக்கூடிய வியாதி.

எந்த வயதில் இந்த நோய் அதிகமாகத் தோன்றுகிறது என்பதைக் கண்டுபிடிக்க ஸ்வீடனில் 0-18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைச் சோதித்துப் பார்த்தோம்.

பத்து வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட ஆராய்ச்சியில் 12-13 வயது குழந்தைகளுக்குத் தான் அது அதிகம் இருக்கிறது என்று தெரிய வந்தது. ஆனால் ஐந்து வருடங்களுக்கு முன் னால் திரும்ப சோதனையை நடத்திய பொழுது 10-11 வயது குழந்தைகளுக்கு அதிகம் இருக்கிறது என்றும், சென்ற வருட ஆராய்ச் சியில் 8 வயது குழந்தைகளுக்குத்தான் அதிகம் இருக்கிறது என்றும் தெரிய வந்துள்ளது.

இவர்களுடைய உடலில் கணையம் பழுது பட்டுப் போய் இன்சுலின் சுரப்பி அடியோடு வற்றிப்போய் விடுவதால் இந்தக் குழந்தைகள் இன்சுலினை ஊசி மூலம் ஏற்றிக் கொண் டால் மட்டுமே உயிர் வாழ முடியும் என்கிற பரிதாபச் சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

டைப்-1 டயாபடீஸைக் குணப்படுத்த பலவித ஆராய்ச்சிகள் நடந்துகொண் டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை...

ஆராய்ச்சி-1

குழந்தை பிறந்தவுடன் அதன் தொப்புள் கொடியை வெட்டி அகற்றி விடுகிறோம். அப்படி அகற்றப்படும் தொப்புள் கொடியில் உள்ள ரத்தத்தைச் சோதனை செய்து, மர பணுக்களை ஆராய்ந்து, அந்தக் குழந்தைக்குச் சர்க்கரை நோய் வர வாய்ப்பிருக்கிறதா என்று கண்டுபிடிக்க வேண்டும். வாய்ப்பு இருக்கும் பட்சத்தில் கணையத்தின் பீட்டா செல்கள் அழிவதை தடுப்பூசி மூலம் தடுத்து நிறுத்த முடியுமா என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம்.

ஆராய்ச்சி - 2

இன்சுலினை உற்பத்தி செய்யும் சிறப்புத் தகுதி பீட்டா செல்களுக்கு மட்டுமே உண்டு. உடம்பில் இருக்கிற மற்ற செல்களை பீட்டா செல்களாக மாற்றும் வழி இருக்கிறதா என்று ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

ஆராய்ச்சி - 3

இது ஸ்டெம் - செல்களைப் பற்றியது.

நம் உடம்பில் இருக்கும் உறுப்புகள் அனைத்தும் செல்களால் ஆனவை. ஒரு குறிப்பிட்ட உறுப்பு தாக்கப்படும்பொழுது, அந்த உறுப்பு எந்த செல்களால் உரு

படுத்தும் வழி பிறந்து விடும்!



வாக்கப்பட்டதோ அவை இறந்துவிடுகின்றன. ஆனால் அவற்றிற்குக் கீழே உள்ள செல்கள் உடனே தங்களுடைய மரபணுக்களை மாற்றிக்கொண்டு, அழிந்து போன செல்களின் இடத்தை நிரப்பி, செயல்பட ஆரம்பித்து விடுகின்றன. அதாவது இந்தச் செல்களுக்கு அந்தக் குறிப்பிட்ட உறுப்பாக மாறக்கூடிய சக்தி இருக்கிறது. ஆனால், தேவை ஏற்பட்டால் ஒழிய அவை அந்தச் சக்தியைப் பயன்படுத்துவதில்லை. இந்தச் செல்களுக்கு ஸ்டெம் - செல்கள் என்று பெயர்.

உதாரணத்துக்கு, தோலின் ஒரு பகுதி கிழிந்து விடுகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பகுதியில் உள்ள செல்கள் அழிந்துவிடுகின்றன. ஆனால் கீழே உள்ள ஸ்டெம் - செல்கள் தங்களுடைய மரபணுக்களை மாற்றிக் கொண்டு தோல் - செல்களாக மாறி விடுகின்றன.

இதன் அடிப்படையில் பீட்டா செல்களாக உருவாகும் சக்தி படைத்த ஸ்டெம் - செல்கள் கணையத்தின் எந்தப் பகுதியில் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து நமது நோக்கத்திற்கேற்ப அவற்றின் மரபணுக்களைத் திருத்தி அமைத்து, அவற்றை பீட்டா செல்களாக மாற்ற வழி இருக்கிறதா என்று ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது.

ஆராய்ச்சி 4

குழந்தை பிறந்த உடன், தொப்புள் கொடியில் உள்ள ரத்த அணுக்களை உறைய வைத்து அணு வங்கியில் போட்டு விடுவது. பின்னால், கணையத்தில் பிரச்னை வரும்பொழுது, ஸ்டெம் - செல் முறையில், புது பீட்டா செல்களையே உருவாக்கி கணையத்தைச் சரிப்படுத்துவது.

ஆனால் இந்த ஆராய்ச்சியில் ஒரு அபாயம் இருக்கிறது. ஆராய்ச்சி வெற்றி பெற்றுவிட்டால் ஸ்டெம் செல்களை வைத்து உடலில் உள்ள எல்லா உறுப்புக்களையும் உற்பத்தி செய்து ஒரு புது மனிதனையே உருவாக்கும் சாத்தியம் ஏற்பட்டு விடுமோ என்று அமெரிக்க அரசாங்கம் பயப்படுகிறது.

ஆராய்ச்சி - 5

இது கணைய மாற்றுச் சிகிச்சை பற்றியது.

இறப்பவர்கள் உறுப்புகளைத் தானம் செய்யும்பொழுது, மருத்துவர்கள், பொதுவாக இருதயம், சிறுநீரகம், கண், ஈரல் இவற்றை எல்லாம் எடுத்துவிட்டுத்தான் கணையத்துக்கே வருவார்கள். அப்படி வரும்பொழுது தானம் செய்தவர் இறந்து பத்து மணி நேரம் முடிந்து விட்டிருக்கும். தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் செல்கள் இறந்துகொண்டே இருப்பதால் பத்து மணி நேரத்துக்குப் பிறகு கணையத்துக்கு வரும்பொழுது பீட்டா செல்களின் பெரும்பகுதி அழிந்துவிட்டிருக்கும். பலன், மாற்றுச் சிகிச்சை செய்ய முடியாமல் போய்விடுகின்றது.

கணையத்தை எப்படி விரைவாக வெளியில் எடுப்பது, எப்படி அதிக அளவு பீட்டா செல்களைக் காப்பாற்றுவது, எப்படி மாற்றுச் சிகிச்சையைத் திறம்படச் செய்வது என்று ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது.

ஆராய்ச்சிகள் எப்பொழுது முடிவடையும்?

இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குள் ஆராய்ச்சி வெற்றி பெற்று டைப் - 1 டயாபடீஸ் நோயைக் குணப்படுத்தும் வழி பிறந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குழந்தை கருவில் இருக்கும்பொழுதே அதனுடைய மரபணுக்களை மாற்றி அமைத்து பிறவி நோய்களைத் தடுப்பதற்கு ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறதே, அந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றுவிட்டால் டைப்-1 டயாபடீஸை அப்படியே குணப்படுத்திக் கொள்ளலாமே! உங்களுடைய ஆராய்ச்சி வீணாகி விடாதா?

ஒரு மரபணுவில் பிழை இருப்பதால் உண்டாகும் நோய்களைத்தான் கருவிலேயே சரி செய்ய முடியும். சர்க்கரை நோய் என்பது பதினைந்து வகையான மரபணுக்கள் சம்பந்தப்பட்ட நோய். இதைக் கருவில் குணப்படுத்துவது இயலாத காரியம். ஆகையால் நீங்கள் சொன்ன ஆராய்ச்சி முன்னதாகவே வெற்றி அடைந்துவிட்டால் கூட டைப் - 1 டயாபடீஸைத் தடுக்க அது உதவாது!

— கிருஷ்

படம்: ஆனந்த்



அறுபத்து ஐந்தாம் அத்தியாயம்

"ஐயோ பிசாசு!"

ஆழ்வார்க்கடியான் அதுவரை மறைந்திருந்த தன் ஆட்களைத் திரட்டிச் சேர்த்துக்கொண்டு தஞ்சைக் கோட்டையின் வடக்கு வாசலை நோக்கி நடந்தான். கருத்திருமனுடன் அவன் துவந்த யுத்தம் செய்தபோது தன் ஆட்களை அழையாததின் காரணத்தை வாசகர்கள் ஊகித்து உணர்ந்திருப்பார்கள். அவன் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள விரும்பிய மிக முக்கிய இரகசியமான விவரங்கள் மற்றவர்கள் காதில் விழுவதை அவன் விரும்பாததில் வியப்பில்லை அல்லவா?

பாதி தூரம் சென்ற பிறகு, எதிரே ஒரு தனி ஆள் வெறிகொண்டவனைப் போல் ஓடி வருவதைக் கண்டான். அப்படி ஓடி வந்தவன் இருட்டில் ஆழ்வார்க்கடியான் மீது முட்டிக்கொண்டு, பின்னர் மறுபடியும் ஓடப் பார்த்தான். திருமலை நம்பி அவனை விடாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு "அடேடே! வைத்தியர் மகனா? எங்கே அப்பா இப்படித் தலை தெறிக்க ஓடுகிறாய்?" என்று கேட்டான்.

"ஓகோ! வீர வைஷ்ணவனா? பேயோ, பிசாசோ என்று பயந்து போனேன். நல்லது; நீ எத்தனை தூரத்திலிருந்து இக்கரையோடு வருகிறாய்? எதிரே இரண்டு குதிரைகள் மீது இரண்டு ஆட்கள்

அமரர் கல்கி

போனார்களா?'' என்றான்.

"ஆமாம்; போனார்கள்! அவர்களைப் பற்றி உனக்கு என்ன?''

"எனக்கு என்னவா? நல்ல கேள்வி! அவர்கள் யார் என்று தெரிந்தால் நீ இப்படிப்பட்ட கேள்வி கேட்க மாட்டாய்! ஆமாம்; அவர்களில் ஒருவனையாவது உனக்கு அடையாளம் தெரியவில்லையா?''

"ஒருவன் மட்டும் எனக்குத் தெரிந்த ஆள் மாதிரிதான் தோன்றியது. ஆனால்...''

"யார், யார்? யார் மாதிரி தோன்றியது?''

"வந்தியத்தேவனைப் போலத் தோன்றியது. அப்படியிருக்க முடியாது என்று தீர்மானித்துக்கொண்டேன்.''

"அட பாவி! அப்படியா தீர்மானித்தாய்? அவன் சாட்சாத் வந்தியத்தேவன் தான்!''

"என்னப்பா, உளறுகிறாய்? வந்தியத்தேவன் பாதாளச் சிறையில் அல்லவோ இருந்தான்?''

"இருந்தான்; ஆனால், இப்போது இல்லை! வந்தியத்தேவனும் இன்னொரு பைத்தியக்காரனும் சிறையிலிருந்து தப்பி விட்டார்கள். என்னைக் கட்டிப் போட்டு விட்டு அவர்கள் ஓடி விட்டார்கள்!''

"அடேடே! நல்ல வேலை செய்தார்கள்! அவர்கள் உன்னைக் கட்டிப் போடும்போது உன் கைகள் என்னப்பா, செய்துகொண்டிருந்தன? முதலில், பாதாளச் சிறைக்கு நீ எதற்காகப் போனாய்?''

"முதன்மந்திரியின் கட்டளையின் பேரில் போனேன். அதையெல்லாம் இப்போது சொல்லிக்கொண்டிருக்க நேரமில்லை. நீயும் முதன்மந்திரியிடம் சேவகம் செய்கிறவன்தானே? என்னுடன் வா! அவர்களைப் பிடித்துக்கொண்டு வரலாம்...''

"எதற்காக அவர்களைப் பிடித்துக்கொண்டு வர வேண்டும்? ஓடிப் போனால் போகட்டுமே? உனக்கும் எனக்கும் அதனால் என்ன வந்தது?''

"முதன்மந்திரி நல்ல ஆளைப் பிடித்து வைத்திருக்கிறார்! உன்னைப் போல் எல்லாரும் இருந்தால் இந்தச் சோழ ராஜாங்கம் உருப்பட்டாற் போலத்தான்! வந்தியத்தேவன் இளவரசர் கரிகாலரைக் கொன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டவன் என்பது உனக்குத் தெரியாதா? அது மட்டுமல்ல; சற்று முன்னால் சேந்தன் அமுதன் குடிசைக்கு அருகில் இன்னொருவனையும் அவன் ஈட்டியால் குத்தி விட்டு ஓடி வந்து விட்டான்...''

"தெய்வமே! இது என்ன? அங்கே குத்தப்பட்டவன் யார்?''

"அது யார் என்று நான் பார்க்கவில்லை. வந்தியத்தேவனைத் தொடர்ந்து நான் ஓடி வந்தேன்... சரி, சரி! நீ என்னுடன் வராவிட்டால் போ! வழியை மறிக்காதே! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும்! என்னை விடு!''

"வைத்தியர் மகனே! இந்த உலகத்தில் நான் எத்தனையோ மூடர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் எல்லாரையும் நீ தூக்கி அடித்து விட்டாய்! அவர்கள் குதிரையின் மேல் போகிறார்கள். சாவுக்குத் துணிந்து தப்பி ஓடுகிறார்கள். நீ ஒருவன், கால்நடையாகத் தேடிப் போய் அவர்களைப் பிடித்து விடுவாயா? எனக்கு என்ன அதைப் பற்றி? போ! போ!''

"நீ சொல்வது உண்மைதான். அதனாலேயே உன்னையும் துணைக்கு வரும்படி கூப்பிட்டேன். நீ வர மறுக்கிறாய்?''

"நான் வந்து என்ன செய்கிறது? அவர்களைத் தடுத்து நிறுத்தப் பார்த்தேன். ஒருவன் கையிலிருந்த தடியினால் நன்றாய்ப் போட்டான். வாங்கிக் கொண்டு வந்தேன். இன்னும் அந்த வலி தீரவில்லை. எனக்கு அவ்வளவாகச் சண்டை போட்டுப் பழக்கம் இல்லை. நீ ஒருவேளை... ஆமாம்; உன் கையில் என்ன? இரத்தக்கறை மாதிரி அல்லவா இருக்கிறது?

"சிறையிலே அவர்கள் என்னைத் தாக்கிக் காயப்படுத்தி விட்டார்கள். பொல்லாத ராட்சதர்கள்!''

"பின்னே, அந்த இராட்சதர்களைத் தொடர்ந்து கால்நடையாகத் தனியே

போகிறாயே? சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோதே அவர்கள் உன்னை இந்தப் பாடுபடுத்தியிருக்கும்போது..."

"அப்படியானால், என்னதான் செய்யச் சொல்லுகிறாய்?"

"நான் உன்னை ஒன்றும் செய்யச் சொல்லவில்லை. என் பேரில் எதற்காகப் பழி போடுகிறாய்? நான் உன் நிலைமையில் இருந்தால், திரும்பிப் போய் யாரிடமாவது தக்க மனிதர்களிடம் சொல்லி ஐந்தாறு குதிரை வீரர்களையாவது துணைக்கு அழைத்துக்கொண்டு திரும்பவும் மனித வேட்டைக்குப் புறப்படுவேன். நானும் குதிரைமேல் ஏறிக் கையில் வேலும் வாளும் எடுத்துக் கொண்டுதான் கிளம்புவேன்..."

வைத்தியர் மகன் சிறிது யோசனை செய்தான். சேந்தன் அமுதனுடைய குடிசைக்கருகில் யாரோ ஒருவனைக் குத்திப் போட்டுவிட்டு அவன் ஓடி வந்திருக்கிறான். ஒருவேளை இராஜ குலத்தைச் சேர்ந்த மதுராந்தகராயிருக்கக் கூடும் என்ற நினைவு அவனுக்குக் கதிகலக்கத்தை உண்டாக்கியது. ஆனால் இந்த வைஷ்ணவன் சொல்வது போல் தனியாகக் கால்நடையாகச் செல்வதிலும் பொருள் இல்லை. அப்படி நந்தவனக் குடிசையருகில் தன் குத்திட்டியினால் விழுந்தது மதுராந்தகத் தேவராக இருக்கும் பட்சத்தில் அந்தக் குற்றத்தையும் வந்தியத்தேவன் பேரில் போடுவதுதான் நல்லது. ஓர் இளவரசரைக் கொன்றவன் இன்னொரு இளவரசரையும் கொல்லலாம் அல்லவா? தண்டனை இரண்டுக்கும் ஒன்றுதானே...? இதை நினைத்தபோது, பினாகபாணி, 'இரண்டு இளவரசர்களையும் கொன்றவன் வந்தியத்தேவன்தான்!' என்றே நம்பத் தொடங்கி விட்டான்.

"வைஷ்ணவனே! நீ சொல்வது என்னவோ சரிதான். நான் உன்னோடு வருகிறேன். நீ எனக்கு உதவி செய்ய வேண்டும். யாராவது தக்க மனிதரிடம் சொல்லி என்னோடு குதிரை வீரர்களை அனுப்பச் சொல்ல வேண்டும். பெரிய மனிதர்களின் சுபாவம் எனக்கு என்னமோ பிடிபடுவதில்லை. அவர்களுடன் எப்படிப் பழகுவது என்றும் தெரியவில்லை. இதோ பார்! நான் சேநாதிபதி கொடும்பாளூர் வேளாரிடமும் முதன் மந்திரி அன்பில் அநிருத்தரிடமும் சொல்லிப் பார்த்தேன். ஓடிப் போனவர்களை திரும்பப் பிடிக்க வேண்டியதைப் பற்றித்தான். சில வீரர்களை என்னுடன் அனுப்பும்படி வேண்டினேன். இரண்டு பேரும் என்னை முட்டாள், மூடன் என்று திட்ட ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுடைய நோக்கம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை..."

"நோக்கம் வேறு என்ன? உன்னிடம் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. உன்னிடம் இக் காரியத்தை ஒப்புவிக்க அவர்கள் விரும்பவில்லை. சிறைக்குள்ளேயே ஏமாந்து சிறையிலிருந்தவர்கள் தப்பி ஓடும்படி விட்டு விட்டாய். அவர்களை எங்கே பிடிக்கப் போகிறாய் என்று நினைத்திருப்பார்கள்..."

"அவர்களுடைய நினைவைப் பொய்ப்படுத்த எண்ணித்தான் தனியாகவாவது போகலாம் என்று கிளம்பினேன். எப்படியும் கோடிக்கரையில் அவர்கள் நின்றுதானே ஆக வேண்டும்? அங்கே வந்தியத்தேவன் ஒளிந்திருக்கக் கூடிய இடங்களெல்லாம் எனக்குத் தெரியும். அங்கே எனக்கு உதவி செய்யக்கூடியவர்களும் இருக்கிறார்கள்..."

"அப்படியானால், போ! உன் சாமர்த்தியத்தைப் பார்!"

"இருந்தாலும், குதிரை மேலேறி இன்னும் சிலரையும் அழைத்துக் கொண்டு போனால் நல்லதுதான். நீ அதற்கு உதவி செய்வாயா?"

இதற்குள் அவர்கள் இருவரும் வடக்குக் கோட்டைப் பெரிய வாசலை நெருங்கி வந்து விட்டார்கள்.

இராஜபாட்டையில் வடக்கே சற்றுத்

தூரத்தில் அம்பாரி வைத்த யானைகளும், குதிரைகளும், காலாள் வீரர்கள் பலரும் கும்பல் கும்பலாக வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

கோட்டை வாசலிலும் ஒரு கும்பல் நின்றது. தீவர்த்திகளின் வெளிச்சத்தில் கொடும்பாளூர் வேளாரும் திருக்கோவலூர் மலையமானும் முதன்மந்திரி அநிருத்தரும் நிற்பது தெளிவாகத் தெரிந்தது.

"உனக்கும் எனக்கும் எஜமானர் அதோ கோட்டை வாசலில் நிற்கிறார். அவரிடம் போகலாம், வருகிறாயா?"

வைத்தியர் மகன் தயங்கினான்.


"நான் ஒருதடவை கேட்டாகிவிட்டது. பயன்படவில்லை. ஒருவேளை நீ இரண்டு பேர் தப்பி ஓடியதைப் பார்த்திருக்கிறபடியால் உன் பேச்சை நம்பினாலும் நம்பலாம். ஆனால் என்னை உடன் அனுப்பச் சம்மதிப்பாரா என்று சந்தேகிக்கிறேன்" என்றான்.

"நீ சொல்வது உண்மைதான். மேலும் கோட்டை வாசலில் ஏதோ முக்கியமான காரியத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் இச்சமயம் போவதில் பயனில்லை. எது சொன்னாலும் அவர்கள் காதில் ஏறாது. இந்தப் பக்கம் பழுவேட்டரையர்கள் வருவதாகக் காண்கிறது. அவர்களுடன் சம்புவரையரும் வருகிறார். அதோ, பார்த்திபேந்திரனும் கந்தமாறனும் காணப்படுகிறார்கள். அவர்களிடம் சொல்லிப் பார்க்கலாம். வந்தியத்தேவனைப் பிடிப்பதில் அவர்களுக்குத்தான் அதிக சிரத்தை இருக்கும்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

ஊர்வலம் விரைவில் அவர்களை அணுகியது. முன்னால் கட்டியக்காரர்கள் பழுவேட்டரையர்களின் தொல்குலப் பெருமையையும், அம்மாதிரியே கடம்பூர் சம்புவரையர், மழபாடி மழவரையர், பார்த்திபேந்திர பல்லவன், நீலதங்கரையர், இரட்டைக்குடை இராஜாளியார் முதலியவர்களின் விருதுகளையும் வீரச் செயல்களையும் வரிசைக் கிரமமாகச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். இடையிடையே முரசுகள் முழங்கின; சங்கங்கள் ஆர்த்தன.

ஊர்வலத்தின் முன்னிலையில் சின்னப் பழுவேட்டரையரும் பார்த்திபேந்திரனும் கந்தமாறனும் வெண்புரவிகளின் மீது அமர்ந்து கம்பீரமாக வந்தார்கள். அடுத்தாற் போல் வந்த மத்தகஜத்தின் அம்பாரியில் பெரிய பழுவேட்டரையரும் சம்புவரையரும் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் மற்ற குறுநில மன்னர்கள் யானை மீதும் குதிரை மீதும் வந்தார்கள். முன்னும் பின்னுமாக ஏறக்குறைய நூறு வீரர்கள் கையில் வேலும் இடையில் வாளும் தரித்து நடந்து வந்தார்கள்.

இந்த ஊர்வலத்துக்கு முன்னால் ஆழ்வார்க்கடியானும் வைத்தியர்மகன் பினாகபாணியும் பாதை நடுவில் நின்றதைப் பார்த்ததும், சின்னப் பழுவேட்டரையர் தம் குதிரையைச் சிறிது நிறுத்தி "வைஷ்ண




வனே! முதன்மந்திரியிடமிருந்து முக்கியமான செய்தி ஏதேனும் உண்டா?" என்று கேட்டார்.

"தளபதி! முதன்மந்திரி என்னிடம் செய்தி ஒன்றும் அனுப்பவில்லை. சொல்ல வேண்டிய செய்தியைக் கோட்டை வாசலில் தங்களிடமே சொல்லுவார். ஆனால் முக்கியமான செய்தி ஒன்றிருக்கிறது...'' என்று ஆழ்வார்க்கடியான் நிறுத்தினான்.

''என்ன? என்ன? என்ன?'' என்று மூன்று பேரும் ஆவலுடன் கேட்டார்கள்.

"பாதாளச் சிறையிலிருந்து வந்தியத்தேவன் தப்பி ஓடிவிட்டான்..."

"அது எப்படி



முடியும்? அவன் என்ன இந்திரஜித்தா மாயமாய் மறைந்து போவதற்கு?" என்று கேட்டார் சின்னப்பழுவேட்டரையர்.

"இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. வேறு யாராவது அவனுக்கு ஒத்தாசை செய்திருக்க வேண்டும்!" என்றான் பார்த்திபேந்திரன்.

"எல்லாம் அந்தக் கொடும்பாளூர்ப் பெரிய வேளாரின் வேலைதான்!" என்றான் கந்தமாறன்.

"அப்படித் தப்பி ஓடினாலும் எங்கே ஓடி விடுவான்? கோட்டைக்குள்ளே தானே இருக்க வேண்டும்?" என்றார் சின்னப்பழுவேட்டரையர்.

"அப்படித்தான் வேளார் சொல்லுகிறார். முதன்மந்திரி முன் ஜாக்கிரதையாக என்னைக் கோட்டையைச் சுற்றி வந்து பார்த்துக் கொள்ளும்படி பணித்தார். கடம்பூர் வம்சத்தின் மீது அபவாதம் எதுவும் ஏற்படக்கூடாது என்று முதன் மந்திரி கவலைப்படுகிறார்..."

'அப்படிக் கவலையுள்ளவர் ஒருவராவது இருக்கிறாரே, அந்த வரைக்கும் மிகவும் திருப்தியான காரியம்" என்று சொன்னான் கந்தமாறன்.

"வைஷ்ணவனே! உண்மையைச் சொல்! தப்பி ஓடுவதைத் தடுப்பதற்காக நீ சுற்றி வருகிறாயா? அல்லது உதவி செய்வதற்காகச் சுற்றி வருகிறாயா?" என்று பார்த்திபேந்திரன் கேட்டான். அவனுக்கு வைஷ்ணவன் பேரில் எப்போதுமே சந்தேகம்தான்.

"ஐயா! வேறு சந்தர்ப்பமாயிருந்தால் தங்களுக்கு வேறுவிதமாகப் பதில் சொல்வேன். இப்போது நாம் சொந்தத்தில் சண்டை போடும் சமயம் அல்ல. இந்த வைத்தியர் மகன் பினாகபாணி, ஒரு விசித்திரமான செய்தியைக் கூறுகிறான். இரண்டு பேர் குதிரைகள் மீது ஏறிப் போனதாகவும் அவர்கள்தான் சிறையிலிருந்து தப்பி ஓடிய வந்தியத்தேவனும் கருத்திருமனும் என்று சொல்லுகிறான். இரண்டு பேர் குதிரை மேலேறி இந்தச் சாலை வழியாக விரைவாகப் போனதை நானும் பார்த்தேன்."

"பினாகபாணி! இந்த வைஷ்ணவன் சொல்லுவது உண்மையா?" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

"சத்தியம், ஐயா!"

"பின்னே, உடனே போய் முதன் மந்திரியிடமாவது வேளாரிடமாவது சொல்லுவதற்கென்ன?"

"அவர்கள் இருவருக்கும் என் பேரில் அசாத்திய கோபம்."

"எதற்காக?"

"அவர்களை நான்தான் தப்ப விட்டு விட்டேன் என்று."

"அது எப்படி?"

"பாண்டிய குலக் கிரீடமும் இரத்தின ஹாரமும் இருக்குமிடம் தெரியுமென்று ஒரு பைத்தியக்காரன் பாதாளச் சிறையில் சொல்லிக்கொண்டிருந்தான் அல்லவா? அவனை அழைத்து வருவதற்காக அநிருத்தர் என்னை அனுப்பினார். அதற்காகப் போன இடத்தில் இரண்டு பேருமாகச் சேர்ந்து என்னைப் பாதாளச் சிறையிலே கட்டிப் போட்டு விட்டுத் தப்பி ஓடி விட்டார்கள்!"

"போயும் போயும் முதன்மந்திரிக்கு உன்னைப் போன்ற முட்டாள்தானா இந்தக் காரியத்துக்கு அகப்பட்டான்?" என்று கூறிவிட்டுப் பார்த்திபேந்திர பல்லவன் சிரித்தான்.

வைத்தியர் மகன் கோபமாக "ஐயா! நீங்கள் சிரிப்பதற்காக நான் இங்கே வரவில்லை. உதவி செய்வதாயிருந்தால், செய்யுங்கள்!" என்றான்.

"என்ன உதவி கேட்கிறாய்?"

"என்னுடன் நாலு குதிரை வீரர்களை அனுப்புங்கள். எனக்கும் ஒரு குதிரை கொடுங்கள். தப்பி ஓடியவர்களைப் பிடித்துக் கொண்டு வருவது என் பொறுப்பு. ஏற்கெனவே எனக்கு இட்ட காரியங்களை நான் நிறைவேற்றவில்லையா? தளபதி சின்னப் பழுவேட்டரையருக்குத் தெரியுமே?" என்றான் வைத்தியர்மகன் பினாகபாணி.

"நீ என்ன சொல்லுகிறாய்?" என்று சின்னப் பழுவேட்டரையர் பார்த்திபேந்

திரனைக் கேட்டார்.

"அனுப்ப வேண்டியதுதான். சக்கரவர்த்தி உங்களைத் திரும்ப அழைத்து வரும் பொறுப்பை என்னிடம் ஒப்புவித்திருக்கிறார். இல்லாவிட்டால் நானே இவனுடன் போவேன். வந்தியத்தேவனைப் பிடிக்க வேண்டியது மிக முக்கியமான காரியம்" என்றான் பார்த்திபேந்திரன்.

அச்சமயம் கந்தமாறன், "அந்தப் பொறுப்பை என்னிடம் ஒப்புவியுங்கள். இவனுடன் நானும் போகிறேன். வந்தியத்தேவன் யமலோகத்தின் வாசலுக்குப் போயிருந்தாலும் அவனைத் திரும்பப் பிடித்துக்கொண்டு வருகிறேன்" என்றான்.

சின்னப் பழுவேட்டரையரும் அதற்குச் சம்மதித்தார். சம்புவரையர் முதலியவர்களுக்குச் சமாதானம் சொல்லும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

உடனே கந்தமாறனும் வைத்தியர் மகனும் மற்றும் வீரர்கள் நால்வரும் வடவாற்றின் கரையோடு விரைந்து செல்லக்கூடிய குதிரைகள் மீதேறி வாயு வேக மனோவேகமாகச் சென்றார்கள்.

மதுராந்தகன் குதிரை ஏற்றத்தில் அவ்வளவு பழக்கப்பட்டவன் அல்ல. கருத்திருமன் பழக்கப்பட்டவன் ஆன போதிலும், பாதாளச் சிறையில் நெடுங்காலம் இருந்தவனானபடியால், மிக்க உடற்சோர்வு உற்றிருந்தான். ஆயினும் இரண்டு பேருடைய உள்ளங்களிலும் இப்போது ஒரு புதிய உற்சாகம் பிறந்திருந்தது. உள்ளத்தின் பலத்தினால் தளர்ச்சியைச் சகித்துக் கொண்டு அவர்கள் பிரயாணம் செய்தார்கள்.

நள்ளிரவு வரையில் பிரயாணம் செய்த பிறகு இருவரும் நின்றார்கள். அங்கே நதிக்குக் குறுக்கே மூங்கில் கழிகளைச் சேர்த்துக் கட்டி அமைத்த பாலம் ஒன்று இருந்தது. எப்படியும் தங்களைப் பின் தொடர்ந்து பிடிக்க ஆட்கள் வருவார்கள் என்று கருத்திருமன் எதிர்பார்த்தான். ஆகையால், அந்த இடத்தில் நதியைக் கடந்து அக்கரை சேர்ந்து விடுவது நல்லது என்று எண்ணினான். நதியின் தென் கரையோடு சிறிது தூரம் சென்று பின்னர் கோடிக்கரைப் பாதையில் திரும்பிப் போகலாம்.

அங்கேயே நதியைக் கடப்பதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. மதுராந்தகனால் குதிரையைச் செலுத்திக் கொண்டு ஆற்று வெள்ளத்தைக் கடக்க முடியுமா என்று கருத்திருமன் ஐயமுற்றான். வெள்ளம் அதிகமாயிருந்தால் நிச்சயம் முடியாத காரியம். மதுராந்தகனைப் பாலத்தின் வழியாகப் போகச் சொல்லிவிட்டு இவனே இரண்டு குதிரைகளையும் ஒவ்வொன்றாக அக்கரை கொண்டு போய்ச் சேர்த்து விடலாம்.

இந்த யோசனைகளெல்லாம் மதுராந்தகனுக்கும் சம்மதமாயிருந்தது. நதி வெள்ளத்தில் இறங்குவதற்கு முன்னால் இருவரும் சிறிது நேரம் சிரம பரிகாரம் செய்து கொள்வதற்காக மரத்தடி வேரில் உட்கார்ந்தார்கள். ஆற்று வெள்ளம் 'சோ' என்ற சப்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. நாலாபுறத்திலிருந்தும் மண்டூகங்களின் குரல்கள் கிளம்பிக் காதைத் துளைத்தன. வானத்தில் விரைவாகக் கலைந்து சென்று கொண்டிருந்த மேகத் திரள்களுக்கு மத்தியில் விண்மீன்கள் எட்டிப் பார்த்து ஒற்றர் வேலை செய்துகொண்டிருந்தன.

பெரும்பாலும் அரண்மனைகளில் சப்ரமஞ்சக் கட்டில்களில் பஞ்சணை மெத்தைகளுக்கு மத்தியில் உறங்கிப் பழக்கமான மதுராந்தகனுக்கு நள்ளிரவில் ஆற்றங்கரையில் மரத்து வேர்களின் மீது உட்கார்ந்திருக்க நேர்ந்தது மிக்க மனச் சோர்வையும் வருங்காலத்தைப் பற்றிய பீதியையும் உண்டாக்கியது.

அவனுடைய மனோநிலையை உள்ளுணர்ச்சியினால் அறிந்து கருத்திருமன் அவனுக்குத் தைரியம் சொல்ல முயன்றான். இலங்கை மன்னன் மகிந்தன், பாண்டிய குலத்தின் பரம்பரைச் சிநேகிதன் என்றும், அவனிடம் மதுராந்தகன் போய்ச் சேர்ந்துவிட்டால், பிறகு ஒரு கவலை


யுமில்லையென்றும் தெரிவித்தான். பாண்டிய குலத்தின் மணிமகுடமும் இந்திரன் தந்த ரத்தின ஆரமும் இலங்கையிலேதான் இருக்கின்றன; இருக்குமிடமும் தனக்குத் தெரியும்; அங்கேயே மகிந்தன் மதுராந்தகனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்து விடுவான்! அதற்குள் சோழ நாட்டுச் சிற்றரசர்களுக்குள் போர் மூண்டு சோழ சாம்ராஜ்யம் சின்னாபின்னம் அடைந்துவிடப் போகிறது. ஆதித்த கரிகாலனைக் கொன்றுவிட்டதாகப் பழுவேட்டரையர் – சம்புவரையர் கட்சியின் மீது மற்றவர்கள் குற்றம் சாட்டுவார்கள். மதுராந்தகன் இப்போது தன்னுடன் வந்துவிட்டபடியால், அவனைக் கொன்றுவிட்டதாக வேளார் கட்சியின் மீது பழுவேட்டரையர்கள் குற்றம் சுமத்துவார்கள். இந்தப் படுகொலைகளுக்கு அருள்மொழிவர்மனும் உடந்தையாக இருந்ததாக மக்களிடையே வதந்தி பரவப் போகிறது. ஆகையால் அவனையும் மக்கள் வெறுக்கத் தொடங்குவார்கள். இப்படியெல்லாம் சோழ ராஜ்யம் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கும்போது இலங்கை மன்னன் ஒரு பெரிய சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து வருவான். மதுரையைக் கைப்பற்றுவான். மதுராந்தகனுக்கு உலகம் அறிய இரண்டாந் தடவையாக முடிசூட்டு விழா நடத்தி வைப்பான். 'மதுராந்தகன்' என்ற பெயரையும் மாற்றிச் 'சோழ குலாந்தகப் பெருவழுதி' என்ற அபிஷேக பெயரையும் சூட்டுவான்...!

இவ்வாறெல்லாம் கருத்திருமன் சொல்லி வந்தபோது மதுராந்தகனுடைய உள்ளம் விம்மியது. அவனுடைய வாழ்க்கையில் அதுவரை கண்டிராத உற்சாகத்தை அவன் அடைந்தான். போர்க்களங்களில் கேட்கும் வெற்றி முரசுகள் அவன் காதில் ஒலித்தன. பட்டாபிஷேக வைபவங்களுக்குரிய பலவகை இன்னிசைக் கருவிகள் மற்றொருபால் முழங்கின. ஆயிரமாயிரம் மக்களின் குரல்கள் "பாண்டிய சக்கரவர்த்தி வாழ்க!" "சோழ குலாந்தகப் பெருவழுதி வாழ்க!" என்று கோஷமிட்டன.



இப்படி இன்பமயமான கற்பனை உலகத்தில் மதுராந்தகன் சஞ்சரித்துக் கொண்டிருந்தபோது, அந்தக் கற்பனைக் கனவைக் கலைத்துக் கொண்டு குதிரைகளின் காலடிச் சப்தம் கேட்டது. சற்றுத் தூரத்தில் தீவர்த்திகளின் வெளிச்சமும் தெரிந்தது.

கருத்திருமன் அவ்வளவு விரைவாக ஆட்கள் தங்களைத் தொடர்ந்து வரக்கூடும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆகையால் மிக்க பரபரப்புடன் குதித்தெழுந்து, "இளவரசே! எழுந்திருங்கள், குதிரை மேல் ஏறுங்கள்! அவர்கள் வருவதற்கு முன் நதியைக் கடந்து விட வேண்டும்!" என்றான்.



ஒரு கணத்தில் அவன் குதிரை மேல் பாய்ந்து ஏறிக் கொண்டான். மதுராந்தகன் குதிரை மேல் ஏறுவதற்கு கஷ்டப்படுவதைப் பார்த்து விட்டு, "ஐயா! ஒன்று செய்யுங்கள். தாங்கள் பாலத்தின் மேல் நடந்து அக்கரை போய் விடுங்கள். நான் தங்கள் குதிரையையும் அக்கரைக்குக் கொண்டு வந்து சேர்த்து விடுகிறேன்!" என்றான்.

"அழகாயிருக்கிறது! என்னைப் பயங்காளி என்று நினைத்தாயா? குதிரை மேலேறி இந்த ஆற்றைக் கடக்க என்னால் முடியாவிட்டால், அப்புறம் கடல் கடந்து இலங்கை போவது எப்படி? பாண்டிய ராஜ்யத்தைப் பிடித்துச் சிங்காதனம் ஏறுவது எப்படி?" என்று வீரியம்



பேசியபடியே மெதுவாகக் குதிரை மேலே ஏறினான்.

இரண்டு குதிரைகளும் நதியில் இறங்கின. மதுராந்தகனுடைய குதிரை தண்ணீர்க் கரையண்டை திடீரென்று முன்னங்கால், மடிந்து படுத்தது. "ஐயோ!" என்று அலறினான் கருத்திருமன். நல்ல வேளையாகக் குதிரை சமாளித்து எழுந்து தண்ணீரில் இறங்கியது.

மதுராந்தகனுடைய மனத்திற்குள் திகில்தான். ஆனால் வெளியில் காட்டிக் கொள்ளாமல் "இது என்ன பிரமாதம்? இப்படிப் பயந்து விட்டாயே?" என்றான்.

மதுராந்தகனுடைய குதிரையின் காலில் ஏதாவது காயம்பட்டிருந்ததோ என்னமோ, அது வெள்ளத்தில் மற்ற குதிரையைப் போல் விரைந்து செல்லவில்லை. அடிக்கடி அது வெள்ளத்தோடு வெள்ளமாகப் போகப் பார்த்தது. அதைத் திருப்பி எதிர்க் கரையை நோக்கி செலுத்துவதற்கு மதுராந்தகன் மிக்க சிரமப்பட்டான்.

கரையோடு வந்த குதிரைகளின் காலடிச் சப்தமோ நெருங்கி நெருங்கி வந்துகொண்டிருந்தது.

பாதி ஆறு வரையில் கருத்திருமன் இளவரசனுக்காக நின்று நின்று போய்க் கொண்டிருந்தான். பிறகு ஒரு யோசனை அவன் மனத்தில் உதித்தது. மதுராந்தகனுக்குத் தைரியம் சொல்லிவிட்டு அக்கரையை நோக்கி விரைந்து சென்றான். கரையில் ஏறிக் குதிரையை ஒரு மரத்தினடியில் நிறுத்தினான். குதிரை மேலிருந்து பாய்ந்து இறங்கி மூங்கில் பாலத்தின் வழியாகத் திரும்பவும் வட கரைக்கு வந்தான். மதுராந்தகனிடமிருந்த சிறிய கத்தியை அவன் ஏற்கெனவே வாங்கி வைத்துக்கொண்டிருந்தான். அதைக்கொண்டு அவசர அவசரமாகப் பாலத்திலிருந்து தொங்கிக்கொண்டிருந்த கயிறுகளை அறுத்து முடி போட்டான். அது போதிய நீளமானதாகத் தெரிந்ததும், ஒரு முனையைப் பாலத்தில் சேர்த்துக் கட்டிவிட்டு மற்றொரு முனையைச் சாலையின் மறுபுறத்திலிருந்து மரத்தின் அடியில் சேர்த்துக் கட்டினான்.

மர நிழலினால் அதிகமாயிருந்த இருட்டில் அவ்விதம் சாலை நடுவில் குறுக்கே ஒரு கயிறு கட்டியிருந்ததை யாரும் பார்க்க முடியாது அல்லவா? அதிலும் குதிரை மேல் வேகமாக வருகிறவர்கள் நிச்சயம் பார்க்க முடியாது.

இந்தக் காரியத்தை அவன் செய்து முடித்ததும் பாலத்தின் வழியாகத் திரும்பி ஓடிவிடலாமா என்று யோசித்தான். அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு அங்கேயிருந்த மரம் ஒன்றின் பேரில் சரசரவென்று ஏறிக் கிளைகளின் மறைவில் உட்கார்ந்து கொண்டான்.

மதுராந்தகருடைய குதிரை கிட்டத்தட்ட நதியைக் கடந்து அக்கரையை நெருங்கியிருந்தது.

இன்னும் சில நிமிஷ அவகாசம் கிடைத்தால், கரைமேல் ஏறி மதுராந்தகன் குதிரை அப்பால் சென்று விடும்.

இந்த எண்ணம் அவன் மனத்தில் தோன்றி மறைவதற்குள் சாலையோடு வந்த குதிரைகள் அந்த மரத்தடியை நெருங்கி விட்டன. ஐந்தாறு குதிரைகள் இருக்கும். அவற்றில் இரண்டு குதிரைகள் முன்னணியில் வந்தன. அவை இரண்டும் ஒருகணம் முன் பின்னாகக் கருத்திருமன் கட்டியிருந்த குறுக்குக் கயிற்றினால் தடுக்கப்பட்டுத் தலை குப்புற உருண்டு விழுந்தன.

கருத்திருமன் மரத்தின் மேலிருந்தபடி தன்னையறியாமல் 'ஹா ஹா ஹா' என்று பலமாகச் சிரித்தான்.

குதிரைகள் மேலிருந்து விழுந்தவர்களில் ஒருவன் "ஐயோ! பிசாசு!" என்று பயங்கரமாக அலறினான்.

குரலிலிருந்து அவன் வைத்தியர் மகன் பினாகபாணி என்பதைக் கருத்திருமன் தெரிந்துகொண்டான். விழுந்தவன் கழுத்து நெறிந்து இறந்திருக்கக் கூடாதா, இன்னமும் உயிரோடிருக்கிறானே என்றும் எண்ணிக் கொண்டான்.

இன்னொரு குதிரை மேலிருந்து விழுந்தவன் சிறிதும் அதிர்ச்சியடையாமல் தரையிலிருந்து எழுந்தான். அவன் நமது பழைய நண்பன் கந்தமாறன்தான்!

(தொடரும்)


அதிசயங்கள் நிகழ்த்தும் அற்புத மருத்துவர்

பல ஆண்டுகளாக மூட்டுவலியால் அவதிப்பட்டவர் முகம் மலர்ந்த காட்சி!



கடந்த பத்து ஆண்டாக கை, கால், இடுப்பு, மூட்டுவலிகளில் கடுமையான வலியினால் பாதிக்கப்பட்ட நிலையில் பல மருத்துவர்களிடம் காண்பித்தும் ஆபரேஷன்தான் முடிவு என்று கூறினார்கள். என்ன செய்யலாம் என்று நான் நினைத்த வேளையில் ஏற்கெனவே பாதிக்கப்பட்டு குணமடைந்த ஒரு நண்பரின் ஆலோசனைப்படி ரப்பானி வைத்தியசாலை **டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்** அவர்களிடம் சென்று மருந்து சாப்பிட்டதில் இன்று 10 ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட உடல் வலுவாகவும் மன நிம்மதியாகவும், எல்லா சங்கடங்களும் தீர்ந்து நிம்மதியாக வாழ்கிறேன் என்று தெரிவிக்கிறார். **D.** வசந்தா, 4–வது குறுக்குத் தெரு, சாலிகிராமம், சென்னை.

மலட்டுத் தன்மை என்பதே இல்லாமல் போச்சு!



குழந்தை இல்லை என்று நாங்கள் ஏறாத ஆஸ்பத்திரி வாசல்கள் இல்லை. பிறகு பலரின் ஆலோசனையைக் கேட்டு ரப்பானி வைத்தியசாலாவிற்கு வந்து தொடர்ந்து மருந்து சாப்பிட்டதில் குழந்தை பெற்று தனது மன மகிச்சியை அனைவருக்கும் தெரிவிக்கின்றனர். சென்னை தேனாம்பேட்டையைச் சேர்ந்த ஜெயசங்கா–மாரியம்மாள் தம்பதி.

மருந்தில்லை என்ற சோரியாஸிஸ் மாயமாய் மறைந்து போச்சு!



நான் கடந்த சில வருடங்களாக உடம்பில் அரிப்பு ஏற்பட்டு சோரியாசிஸ் என்ற நோயாலும், கடுமையான மூட்டு வலியாலும் பாதிக்கப்பட்டேன். பல சிகிச்சைகளும் எனக்கு பலன் தராமல் ரப்பானி வைத்தியசாலாவில் காண்பித்தேன். தொடர்ச்சியாக சில மாதங்கள் அங்கு பெற்ற சிகிச்சையின் பலனாக என் பிரச்சனைகள் அனைத்தும் தீர்ந்தது தெரிவிக்கிறார் திருமதி பத்மா ஸ்வாமிநாதன், ரெய்ன் ரீச் அபார்ட்மெண்ட்ஸ், மௌனசாமி மடம் தெரு, வெங்கடபுரம், சென்னை – 53.


கர்ப்பப்பை ஆபரேஷன் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றாச்சு!



வயிற்று வலிக்காக சென்னையில் உள்ள ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் 3 ஆண்டு வைத்தியம் பார்த்தபின் கர்ப்பப்பையை எடுத்துவிடச் சொன்னார்கள். ரப்பானி வைத்தியசாலாவில் 3 மாதம் மருந்து சாப்பிட்டதில் சரியாப் போச்சு. கர்ப்பப்பையை எடுக்க தேவையில்லை என்று அதே ஆஸ்பத்திரியில் சொல்லிவிட்டார்கள் என்கிறார் போரூர், அண்ணாசாலையைச் சேர்ந்த கோவிந்தராஜின் மனைவி **G.** செல்வி.

கிட்னி அகற்ற வேண்டிய நிலை இல்லை என்றாச்சு!

S. Ravi, BHEL SPD.CP. P.Box.No.1245, Bangalore, Ph: 3346392



எனக்கு உடலில் உப்பு அதிகமாக இருப்பதாகச் சொல்லி பெங்களூரில் பல மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்று, பின் பரிசோதனை செய்ததில் என் கிட்னி பெயிலியர் ஆகி இருப்பதும், அதை அறுவை சிகிச்சை செய்து மாற்றுவதுதான் ஒரே வழி என்றும் அறிவுறுத்தப்பட்டேன். பின் நண்பர்களின் ஆலோசனைப்படி ரப்பானி வைத்யசாலா வந்து சிகிச்சை பெற்றேன். படிப்படியாக என் உடலில் இருந்து யூரியாவின்அளவு குறைந்து இப்போது கிட்னி மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

மேலும் கை கால் வாதம், மூளை வளர்ச்சி குறைவு, லிவர் பெயிலியர், மூலம், நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் குறைவு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.)

மாதந்தோறும்
Dr. சையத் சத்தாரின்
யுனானி மருத்துவ மாத
இதழ் கடைகளில் கேட்டு
வாங்குங்கள்


டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்
ரப்பானி வைத்ய சாலா

73/1, டாக்டர் பெசன்ட் ரோடு,
மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
போன்: 8510969, 8410874



வாடிக்கையாளர்கள்தான் தெய்வம்!

''வெற்றி ரகசியங்கள்'' என்ற இந்தப் பகுதிக்காக 'ஃபுட் வர்ல்ட்' முதல்வர் கே. மொஹபாத்ராவைச் சந்தித்தபொழுது 'எங்களுடைய வெற்றிக்கு முன்னோடியே விவேக்ஸ்தான்!' என்று குறிப்பிட்டிருந்தார். அப்படி என்றால் விவேக்ஸின் வெற்றியை ஆராய வேண்டாமா? விரைந்தோம் விவேக்ஸ் உரிமையாளர் பி.ஏ. கோதண்டராம செட்டியைச் சந்திக்க...



'விவேக்' யார்?

சுவாமி விவேகானந்தரேதான்! என்னுடைய அண்ணன் லக்ஷ்மிநாராயண செட்டிதான் விவேக்ஸை நிறுவியவர். அவர் ஒரு பி.இ. எலக்ட்ரானிக்ஸ் மாணவர். பள்ளிக்குச் செல்லும் பருவத்தில் இராமகிருஷ்ணா மிஷனில் தங்கிப் படித்தவர். சுவாமி விவேகானந்தரின் தீவிர பக்தர். அந்தக் காரணத்துக்காகவே 1965-ல் தாம் நிறுவிய முதல் கடைக்கு 'விவேக்ஸ்' என்று பெயர் வைத்தார்.

வீட்டு உபயோகப்பொருட்களில் இவ்வளவு வெரைட்டி தரவேண்டும் என்று உங்களுக்கு எப்படித் தோன்றியது?

ஒரு குறிப்பிட்ட கலரில் ஒரு குறிப்பிட்ட டிசைனில் புடைவை வாங்கவேண்டும் என்று முடிவு செய்கிறீர்கள்.

வீட்டுக்கு புடைவைகளைக் கொண்டுவரும் மூட்டைக் காரரிடம் நீங்கள் விரும்பிய மாதிரியே ஒரு புடைவை இருக்கிறது. எந்த அலைச்சலும் இல்லாமல், சௌகரியமாக வீட்டில் இருந்து கொண்டே அந்தப் புடைவையை நீங்கள் வாங்கிவிடலாம். ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

ஒரு வண்டியை ஏற்பாடு செய்து கொண்டு புடைவை கடைக்குப் போய் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் செலவிட்டு, அங்கு இருக்கும் ஆயிரக்கணக்கான புடைவை களையும் மெனக்கெட்டுப் பார்த்து, பிறகு, மூட்டைக்காரர் கொண்டு வந்த புடைவையை அச்சில் வார்த்தது போல் இருக்கும் இன்னொரு புடைவையை வாங்குகிறீர்கள். இதற்குக் காரணம் என்ன?

அப்படி வாங்கும்பொழுது உங்களுக்கு ஒரு தனி திருப்தி கிடைக்கின்றது. அந்தத் திருப்தியைத் தருவது எது?

புடைவை கடையில் இருக்கும் வெரைட்டி. அதே லாஜிக்தான் இங்கேயும். புடைவை என்ன, மிக்ஸி என்ன, எல்லாம் ஒன்றுதான்!

வெரைட்டியை நாங்கள் தர விரும்பினாலும், முன்பெல் லாம் அதற்கு வாய்ப்பே இல்லை. ஆனால் நுகர்வுக் கலாசாரத்தில் ஏற்பட்டிருக்கும் பிரும்மாண்டமான மாற் றம் இதைச் சாத்தியப்படுத்தி இருக்கிறது. மாற்றத்துக்குக்

காரணம்?


நம்முடைய வரவேற்பறைக்குள் வந்துவிட்ட மீடியா.

உலகத்தின் மற்ற பகுதிகளில் மக்கள் எப்படி வாழ்கிறார்கள், அவர்களின் பழக்கவழக்கங்கள் எப்படி இருக்கின்றன, வாழ்க்கைத் தரம் எப்படி இருக்கின்றது என்பதை எல்லாம் 'பளிச்' என்று படம் பிடித்துக் காட்டி விடுகின்றது மீடியா.

செயின் ஸ்டோர் என்ற முத்திரையோடு 32 கிளைகள் சகிதம் கிளோபலைசேஷனை வரவேற்கத் தயாராகிவிட்டோம்!

உடனே நாமும் நம்முடைய வசதிகளைப் பெருக்கிக் கொண்டு சௌகரியமாக வாழவேண்டும் என்கிற உந்துதல் ஏற்படுகின்றது. அதற்கேற்றபடி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முனைகிறோம். கணவனுக்குச் சமமாக மனைவியும் வேலைக்குப் போய் வருமானத்தை இரட்டிப்பாக்குகிறாள். பலன், பெரிய பணக்காரர்கள் மட்டுமே ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று நாம் நினைத்த வசதிகள் எல்லாம் இன்று 'அத்தியாவசிய' வசதிகள் ஆகிவிட்டன.

இன்னொரு விஷயம். செலவுகளைக் குறைத்துக் கொண்டு பிள்ளைகளுக்கு முடிந்தளவு பணத்தைச் சேர்த்துவிட வேண்டும் என்று நினைத்தார்கள் அன்றையப் பெற்றோர்கள். ஆனால் இன்றையப் பெற்றோர்கள், தரமான கல்வியையும் நல்ல உடல்நலத்தையும் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்துவிட்டால் போதும், பணத்தை அவர்களே சம்பாதித்துக் கொள்வார்கள் என்று நம்பிக்கையுடன்



• பி.எ. கோதண்டராம செட்டி

இருக்கிறார்கள். இதனால் சேமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமல் அவர்களால் வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடிகின்றது.

வாடிக்கையாளர்களின் மனப்போக்கு மாறும்பொழுது உற்பத்தியாளர்களும் அதற்கேற்றபடி தங்களுடைய தொழில்நுட்பத்தை மாற்றிக் கொள்கிறார்கள்.

உதாரணத்துக்கு, நாங்கள் ரெஃப்ரிஜிரேட்டர் விற்கத் தொடங்கும்பொழுது கோத்ரெஜ் கம்பெனி 165 லிட்டர், 290 லிட்டர் என்று இரண்டே இரண்டு மாடல்கள் தான் தருவார்கள், அதுவும் வெள்ளை நிறத்தில். எங்கள் கடையில் இருக்கும் இந்த இரண்டையும் பார்த்துவிட்டு வாடிக்கையாளர்கள் ஆர்டர் செய்ய வேண்டும். இப்பொழுது பாருங்கள். ரெஃப்ரிஜிரேட்டரை எடுத்துக் கொண்டால் 10 பிராண்ட்கள், ஒவ்வொரு பிராண்டிலும் 5 மாடல்கள், ஒவ்வொரு மாடலிலும் 5 நிறங்கள். ஆக மொத்தம் 200-250 ரெஃப்ரிஜிரேட்டர்களிலிருந்து ஒன்றை நீங்கள் தேர்வு செய்யும் முறை வந்துவிட்டது.

வாடிக்கையாளர்கள், தங்களுடைய பொருளாதார நிலைமையைப் பொறுத்து பிராண்ட்களை, மாடல்களைத் தேர்வு செய்கிறார்கள். எல்லாருடைய பொருளாதார நிலைமையையும் அனுசரித்து விற்பனைப் பொருட்களைத் தேர்வு செய்வதை நாங்கள் கொள்கையாக வைத்திருக்கிறோம். பலன், கடைக்குள் 'வெரைட்டி' வந்து விடுகிறது!

> **விற்பனையாளரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு எந்த வாடிக்கையாளரும் கடைக்கு வருவதே இல்லை.**

தவணை முறையில் பொருள்களை விற்பனை செய்யும் வழக்கத்தைப் பிரபலப்படுத்தியது நீங்கள் தானே...?

30 வருடங்களுக்கு முன்பு நாங்கள் கடையைத் தொடங்கிய காலகட்டத்தில் நாங்கள் விற்பனை செய்த பொருள்களைச் சமுதாயத்தின் மேல் மட்டத்தினர் (அதாவது, பொருளாதார அடிப்படையில்) தான் வாங்க முடியும் என்கிற நிலை. நடுத்தர வர்க்கத்தினரும் அவற்றை வாங்கி அனுபவிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தபொழுது தோன்றியது தான் இந்தத் தவணை முறை.

100 ரூபாய்க்குப் பொருள் வாங்கினால், தினம் ஒரு ரூபாய் வீதம் 100 நாட்களில் வாடிக்கையாளர் கடனை அடைத்துவிடும் முறையை அமல்படுத்தினோம். நாங்கள் நினைத்தபடியே வியாபாரம் பெருகியது. ஆனால் வாடிக்கையாளர்கள் பெருகிக் கொண்டே போகப் போக தினப்படி வசூல் செய்வது எங்களுக்கு பிரம்ம பிரயத்னம் ஆகிவிட்டது. அதுமட்டுமில்லாமல் மாதத்துக்கு ஒரு முறை சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் மாதக் கடைசியில் தவணை செலுத்த, அது ஒரு ரூபாய்தான் என்றாலும் கூட, திணறினார்கள். அப்பொழுதுதான் மாதம் ஒரு தடவை தவணை செலுத்தும் முறையை அறிமுகப்படுத்தினோம். அது மாபெரும் வெற்றியைத் தர 'விவேக் ஹயர்- பர்சேஸ் லீஸிங் லிமிடெட்' என்று ஒரு கம்பெனியை, தவணை முறையில் வாங்கும் வாடிக்கையாளர்களின் வசதிக்காக பிரத்யேகமாகத் தொடங்கி விட்டோம்.

இன்று அந்த நிலைமையில் ஒரு மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது.

ஹவுசிங் லோன், கார் லோன், ஹாலிடே லோன், மெடிகல் லோன் என்று வங்கிகளும் நிதி நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு கடன் தருகிறார்கள். போட்டியின் காரணமாக இன்று வட்டி சதவீதமும் குறைந்து விட்டது. இதற்கெல்லாம் காரணம் 'Non-priority'செக்டராக இருந்த சில்லறை வியாபாரம் இன்று 'priority'செக்டராக மாறிவிட்டது.

இந்தக் கம்பெனிகள் மூலம் கிடைக்கும் அனுகூலங்களை எங்கள் வாடிக்கையாளர் இழந்துவிடக் கூடாது என்பதற்காக, கன்ட்ரிவைட், நேஷன்வைட், ஐஸிஐஸிஐ போன்ற நிதி நிறுவனங்களுக்கு எங்களுடைய கடைக்குள்ளேயே இடம் ஒதுக்கி கவுண்ட்டர்கள் அமைத்துத் தந்திருக்கிறோம். இப்பொழுது, நமது கடையில் ஒரு பொருளை தவணை முறையில் வாங்க விரும்பினால் எங்களுடைய லீஸிங் கம்பெனி மூலமாகவும் வாங்கலாம், இந்த நிறுவனங்கள் மூலமாகவும் வாங்கலாம். எங்கள் லீஸிங் கம்பெனி மூலமாகத்தான் பொருள்களை வாங்கவேண்டும் என்று நாங்கள் நிர்ப்பந்தம் செய்வதில்லை. பொருள்களில் எப்படி வெரைட்டி தருகிறோமோ அதே போல் வாங்கும் முறையிலும் வெரைட்டி இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம்.

தவணை முறை வெற்றி அடைந்ததற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் உண்டு.

ஒன்று நமது மக்களுடைய payment culture, அதாவது கடனை அடைக்கும் பண்பு, ரொம்பவே தரமானது. விற்பனையாளரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு எந்த வாடிக்கையாளரும் கடைக்கு வருவதே இல்லை. இது அனுபவத்தில் நான் கண்ட உண்மை.

இரண்டு, வாடிக்கையாளர்களின்

...ப்போக்கில் ஏற்பட்டிருக்கும் மாற்றம்.

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான் தவணை முறையை அமல் படுத்தியபொழுது வாடிக்கையாளர், பத்திரத்தில் கையெழுத்திட கடைக்கு வருவார். அப்போது, ஏதோ தவறு செய்வது போல் சுற்றுமுற்றும் பார்த்துக் கொள்வார். யாரும் தன்னைக் கவனிக்கிறார்களோ என்ற பயம்! இதுகூடப் பரவாயில்லை. தவணைக் கட்டணம் தாமதமாகும் பொழுது ஊழியரை அவர் வீட்டுக்கு அனுப்பினோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவ்வளவு தான். வரிந்து கட்டிக் கொண்டு அடுத்த நாளே சண்டைக்கு வந்துவிடுவார். " 'விவேக்ஸ்' என்று கொட்டை எழுத்தில் எழுதிய பலகையை ஏந்திய சைக்கிளில் உங்கள் ஊழியர் என் வீட்டுக்கு வந்து ஈட்டிக்காரன் போல் நிற்கிறார், எனக்கு அவமானமாக இருக்கிறது!" என்று முறையிடுவார்.

ஆனால் இன்று நிலைமையே வேறு. வாடிக்கையாளர் ஸ்டைலாக பத்து கிரெடிட் கார்டுகளை கவுண்டரில் கடைபரப்புகிறார், "என்னுடைய நாணயத்துக்கு இதெல்லாம் அத்தாட்சி!" என்பதைப்போல. தவணை முறையில் வாங்குவது தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திய காலம் போய், அது ஒரு பெருமைக்குரிய வாழ்க்கை முறை ஆகிவிட்டது.

வாடிக்கையாளர்களிடம் பண்புடன் நடந்து கொள்ள உங்கள் ஊழியர்களுக்கு எப்படி பயிற்சி கொடுக்கிறீர்கள்?

எங்கள் கடையில் இருக்கும் அனைத்து ஊழியர்களும் விவேக்கைச் சேர்ந்தவர்களாக இருந்து விட்டால் பயிற்சியை எளிதில் கொடுத்துவிடலாம். ஆனால் உற்பத்தி செய்யும் கம்பெனிகள் ஒரு கூடுதல் சலுகையாக தங்களுடைய பிரதிநிதிகளை அனுப்பி வைக்கிறார்கள், விற்பனைப் பிரிவில் வேலை செய்ய. அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, சம்பளம் போக கமிஷனும் தருகிறார்கள்.

இப்படி பல கம்பெனிகளின் பிரதிநிதிகள் ஒரே இடத்தில் இருக்கும் பொழுது ஒரு முக்கியமான பிரச்னை வந்து விடுகின்றது.

அதாவது, வாடிக்கையாளர் ஒருவர் ஒரு பொருளை வாங்க வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். யார் அவரைத் தன்பக்கம் இழுப்பது என்பதில் போட்டி ஏற்பட்டுவிடுகின்றது. இந்த ஆர்வக்கோளாறினால் இவர்கள் இதர கம்பெனிகளின் பொருட்களைப் பற்றி தரக்குறைவாகப் பேசி அநாகரிகமாக நடந்து கொண்டுவிடும் அபாயம் ஏற்பட்டுவிடுகின்றது.

விவேக்கின் வாடிக்கையாளர்களுக்கு இந்தச் சங்கடம் உண்டாகக் கூடாது என்பதற்காகவே தயாரிப்பாளரின் பிரதிநிதிகளுக்கு நாங்களே ஒரு பயிற்சி திட்டம் வகுத்து, வாடிக்கையாளரிடம் எப்படிப் பேசவேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லித்தருகிறோம். இவற்றை எல்லாம் மீறி அவர்கள் நம்முடைய திருப்திக்குச் செயல்படா விட்டால் அவர்களை உடனே மாற்றி விடும்படி உரிய கம்பெனியைக் கேட்டுக் கொள்கிறோம்.

இதில் நாங்கள் ரொம்பவே கவனமாக இருப்போம். காரணம், புது வாடிக்கையாளர்களைப் பெறுவது எளிது. ஆனால் மனக்கசப்பு ஏற்பட்டு விலகிவிடும் பழைய வாடிக்கையாளர்களைத் திரும்பப் பெறவே முடியாது. அவர்கள் போனது, போனதுதான்!

தவணை முறையில் வாங்குவது தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திய காலம் போய், அது ஒரு பெருமைக்குரிய வாழ்க்கை முறை ஆகிவிட்டது!

விவேக்ஸ் ஒரு 'செயின் ஸ்டோர்' ஆனது எப்படி?

1995. விவேக்ஸ் மூன்று கிளைகளோடு மட்டுமே இயங்கிக் கொண்டிருந்த காலகட்டம். குளோபலைசேஷன் பெரிய விஷயமாகி வெளிநாட்டு கம்பெனிகள் இந்தியாவுக்குப் படை எடுக்க முழு மூச்சாக தயாராகிக் கொண்டிருந்த நேரம்.

இவர்கள் காட்டும் வேகத்துக்கு என்ன காரணம் என்று யோசித்தோம். மக்கள் தொகை தான் என்று புரிந்தது. அதைச் சாதகமாக்கிக் கொள்ள அவர்கள் நாடு கடந்து நாடு வரும்பொழுது, இங்கேயே உட்கார்ந்து கொண்டிருக்கும் நாம் கோட்டை விட்டுவிட்டால் நன்றாக இருக்குமா? உடனே வியாபாரத்தைப் பன்மடங்கு விரிவாக்க முடிவு செய்தோம்.

எப்படி விரிவாக்குவது?

வரப்போகும் சர்வதேச கம்பெனிகள் நிச்சயம் 'செயின் ஸ்டோர்' முறையைத்தான் கடைபிடிப்பார்கள். காரணம், இந்த முறையில் இரண்டு முக்கியமான அனுகூலங்கள் உண்டு.

1) பொருள்களை அதிக அளவில் வாங்கி விற்கும் பொழுது சகாய விலையில் விற்பது சாத்தியப்படுகின்றது.

2) வாடிக்கையாளர்களை நாமிருக்கும் இடத்துக்கு வரவழைப்பதைவிட அவர்கள் இருக்கும் இடத்துக்கு நாம் போகும்பொழுது வியாபாரம் பன்மடங்காகின்றது.

நாமும் அதே முறையைக் கடைப்பிடித்து விட்டால்?



விவேக்ஸை செயின் ஸ்டோர் ஆக்க வேண்டும் என்கிற முடிவை எடுத்தாகிவிட்டது. அதைச் சர்வதேசத் தரத்தோடு செய்ய வேண்டாமா?

கட்டட நிபுணர்களை அழைத்துக் கொண்டு ஹாங்காங், ஜப்பான், சிங்கப்பூர் நாடுகளுக்குச் சென்றோம். கடைகளை எப்படி நிர்மாணிக்கிறார்கள், செயின் ஸ்டோர்களை எப்படி நடத்துகிறார்கள் என்று ஆராய்ச்சி செய்தோம்.

நாங்கள் கற்றுக் கொண்ட விஷயங்களை வைத்து 15,000 சதுரடியில், பெங்களூரில், ஜெய் நகரில், புதிய பாணியில் முதல் கடையைத் திறந்தோம். அழகான, அற்புதமான ஷோரூம் அது. நாங்கள் எதிர்பார்த்ததைவிட அபார வெற்றி கிடைத்தது. கிடுகிடுவென்று 18 ஷோரூம்கள் திறந்துவிட்டோம். ஜெயின்சன்ஸ் என்று இன்னொரு கம்பெனி 14 ஷோரூம்களோடு இயங்கிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கம்பெனியையும் விலைக்கு வாங்கி செயின் ஸ்டோர் என்ற முத்திரையோடு 32 கிளைகள் சகிதம் கிளோபலைசேஷனை வரவேற்கத் தயாராகிவிட்டோம்! *(சிரிக்கிறார்)*

புது வருடம் என்றால் விவேக்ஸுக்கு முன்னால் நிற்கும் பாம்பு நீள க்யூ தான் ஞாபகத்துக்கு வருகிறது. புது வருட விற்பனையில் என்ன ரகசியம்?

விவேக்ஸின் மிகப்பெரிய சொத்து அதன் வாடிக்கையாளர்கள். வியாபாரத்தைத் தந்து வாழ்க்கையையும் தருபவர்கள். அவர்களுக்கு எங்களது நன்றியை, எங்கள் அன்பைத் தெரிவிக்கும் வகையில் ஏதாவது செய்ய வேண்டும் என்ற உந்துதல் எங்களுக்கு ரொம்ப நாளாகவே இருந்தது. ஏதாவது பரிசு கொடுக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் அத்தனை பேரையும் எப்படி அழைத்து பரிசு கொடுப்பது?

உதாரணத்துக்கு நான் கடந்த 35 வருடங்களில் சென்னையில் 7 லட்சம் சுமீத் மிக்ஸி விற்றிருக்கிறேன். 7 லட்சம் வாடிக்கையாளர்களையும் ஒன்று சேர்ப்பது சாமானியமான காரியமா?

அப்பொழுதுதான் திடீரென்று அந்த எண்ணம் உதித்தது. வருடத்தின் 365 நாட்களும் நாம் நம்முடைய லாபத்துக்காக வியாபாரம் செய்கிறோம். ஏன் ஒரு நாள் வாடிக்கையாளர்களுக்காக வியாபாரம் செய்து நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கூடாது?

அந்த நாள் வருடத்தின் முதல் நாளாக இருக்கட்டும் என்று ஜனவரி ஒன்றாம் தேதியைத் தேர்ந்தெடுத்தோம். அன்று நடக்கும் வியாபாரத்தில் ஒரு பைசா லாபம் இல்லாமல் கிடைக்கும் கமிஷனை அப்படியே வாடிக்கையாளர்களுக்குத் தந்துவிடுவது என்று முடிவு செய்தோம். தள்ளுபடி விற்பனை ஆரம்பித்த கதை இதுதான்.

தள்ளுபடி விற்பனையை ஆரம்பித்து 25 வருடங்கள் ஓடிவிட்டன. புது வருடத்தன்று கோவிலுக்குப் போவதைப் போல், புத்தாடைகளை அணிவது போல் விவேக்ஸுக்கு வந்து ஏதாவது ஒரு பொருளை வாங்குவது ஒரு செண்ட்டிமெண்ட்டாகவே ஆகிவிட்டது பல வாடிக்கையாளர்களுக்கு.

எங்களுடைய இந்தத் தள்ளுபடி விற்பனை பெற்ற வெற்றியைப் பார்த்து துணிக்கடைக்காரர்கள், நகைக்கடைக்காரர்கள், ஏன், 'டைடான்' போன்ற கடிகாரக் கம்பெனிக்காரர்கள் உட்பட எல்லோரும் இதைப் பின்பற்றத் தொடங்கிவிட்டார்கள். தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, கர்நாடகாவிலும் இந்தப் பழக்கம் தொற்றிக் கொண்டுவிட்டது.

தள்ளுபடி விற்பனையைத் தொடங்கி சில வருடங்கள் ஆன பிறகு வாடிக்கையாளர்கள் எங்களிடம் வந்து 'இன்னும் அதிக தள்ளுபடி

தாருங்கள்!' என்று உரிமையோடு கேட்டார்கள். நாங்கள் உடனே உற்பத்தியாளர்களிடம் போய், "எங்களுடைய வாடிக்கையாளர்கள் உங்களுக்கும் வாடிக்கையாளர்கள்தானே? எங்களுடைய லாபத்தின் முழுப் பகுதியையும் நாங்கள் விட்டுக் கொடுக்கும்பொழுது நீங்கள் உங்களுடைய லாபத்தின் ஒரு பகுதியை விட்டுக் கொடுத்தால் என்ன என்று கேட்டோம். அவர்களும் முழு மனத்துடன் சம்மதித்து, தள்ளுபடி தந்தார்கள். அதைக் கூடுதல் தள்ளுபடியாக வாடிக்கையாளர்களுக்குக் கொடுத்து விட்டோம்.

தள்ளுபடி விற்பனையைத் தொடங்கிய முதல் வருடம் 500 வாடிக்கையாளர்கள் வந்தார்கள். இன்று 50,000 பேர் வருகிறார்கள். 3 கிளைகளில் தொடங்கிய இந்த விற்பனை இன்று 47 இடங்களில் நடக்கிறது. விவேக்ஸின் கடை அருகாமையில் இல்லாத இடங்களில் திருமண மண்டபங்களை வாடகைக்கு எடுத்து விற்பனையை நடத்துகிறோம்.

முன்பெல்லாம் ஜனவரி ஒன்றாம் தேதி மட்டும்தான் இந்த விற்பனை நடக்கும். கிரெடிட் கார்டு சிஸ்டம் வந்த பிறகு, கார்டு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள், "கிரெடிட் கார்டு கிளியரன்ஸ் கிடைத்து பில் போட்டு பொருளை வாங்குவதற்குள் போதும் போதும் என்றாகி விடுகின்றது. ஏதாவது ஒரு வழி செய்யுங்கள்!" என்று சொன்னார்கள்.



உடனே அடுத்த வருடத்திலிருந்து டிசம்பர் 31ஆம் தேதி பிரத்யேகமாக கிரெடிட் கார்டு வாடிக்கையாளர்களுக்கு என்றும், ஜனவரி ஒன்றாம் தேதி பணம் கொடுக்கும் வாடிக்கையாளர்களுக்கு என்றும் விற்பனையைப் பிரித்து இரண்டு நாட்களாக நடத்தினோம்.

பிறகு இன்னொரு யோசனை தோன்றியது. பில் போட்டுத் தயார் செய்ய அதிக நேரம் எடுக்கும் என்பதால் தானே தவணை முறையில் வாங்கும் வாடிக்கையாளர்களைத் தள்ளுபடி விற்பனையில் கூட்டுச் சேர்க்காமல் விட்டிருந்தோம்? கிரெடிட் கார்டு வாடிக்கையாளர்களுக்குச் செய்தது போலவே இவர்களுக்கு என்று பிரத்யேகமாக ஒரு நாளை ஒதுக்கி விட்டால்? இந்த யோசனை தோன்றிய உடனே ஜனவரி இரண்டாம் தேதியை அவர்களுக்கு என்று ஒதுக்கி வைத்தோம்.

பெரிய கல்யாணங்களில் நிச்சயதார்த்தத்துக்குச் சிலரையும், திருமணத்துக்குச் சிலரையும், ரிசப்ஷனுக்குச் சிலரையும் அழைப்பதுபோல் நாங்களும் வாடிக்கையாளர்களை அவர்கள் சௌகரியத்துக்காக மூன்றாகப் பிரித்து தள்ளுபடி விற்பனையை நடத்துகிறோம்.

கல்யாணத்துக்குச் செய்வது போலவே ஒன்றரை மாதத்துக்கு முன்பே நாங்கள் இந்த விற்பனைக்கான ஏற்பாடுகளைத் தொடங்கி விடுவோம். எங்களுடைய 700 ஊழியர்கள் உட்பட 5000 பேரின் உதவி அந்தச் சமயத்தில் தேவைப்படும். உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகள், நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள், எங்களுடைய வங்கியைச் சேர்ந்த ஊழியர்கள், நண்பர்கள் என்று பல பேர் இரவு பகல் பார்க்காமல் உழைப்பார்கள்.

விற்பனை முடிந்த பிறகும் கூட 15 நாட்களுக்கு வேலை சரியாக இருக்கும். விற்பனை செய்த பொருட்களை டெலிவரி செய்ய வேண்டுமே! 10,000 வாஷிங் மெஷின்களை விற்பனை செய்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள், 10,000 வெவ்வேறு இடங்களில் பொருள்களைக் கொண்டு சேர்க்க வேண்டும். "நல்ல நாள், நல்ல நேரம் பார்த்து டெலிவரி செய்யுங்கள்!" என்பார்கள் சில வாடிக்கையாளர்கள். "பகலில் வீட்டில் இருக்க மாட்டோம். மாலை ஆறு மணிக்கு மேல் வாருங்கள்!" என்பார்கள் சிலர். "உங்களிடம் சிவப்பு நிற ரெஃப்ரெஜிரேட்டர் தற்சமயம் ஸ்டாக் இல்லை என்றால் கம்பெனியிலிருந்து வரவழைத்துத் தாருங்கள்!" என்பார்கள் சிலர்.

இப்படி எல்லோருடைய திருப்தியையும் மனத்தில் கொண்டு வேலை செய்யும் பொழுது வேலை பன்மடங்காகிவிடும். செய்து முடிப்பதற்குள் நுரை தள்ளிவிடும். ஆனால் பில் போடும்பொழுது "இந்த முறை குக்கர் வாங்கியிருக்கிறேன், அடுத்த முறை மிக்ஸி வாங்க வேண்டும்!" என்று ஆசையுடன் ஒரு வாடிக்

கையாளர் சொல்லிவிட்டுப் போகும்பொழுது பட்ட கஷ்டமெல்லாம் ஒரு நொடியில் பறந்துவிடும்.

வியாபாரம் செய்ய நினைக்கும் இளைஞர்களுக்குச் சில வார்த்தைகள்...

வியாபாரத்தைப் பற்றி மூன்று விஷயங்களை நீங்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்று: 'வாடகைப் பணம்' என்பது உங்கள் வீட்டையோ நிலத்தையோ வாடகைக்கு விட்டதன் பொருட்டு கிடைக்கும் சன்மானம்;

'வட்டி' என்பது உங்களது பணத்தை வங்கியில் டெபாஸிட் செய்ததன் பொருட்டு கிடைக்கும் சன்மானம்;

'சம்பளம்' என்பது உங்கள் உடல் உழைப்புக்குக் கிடைக்கும் சன்மானம்;

'லாபம்' என்பது நீங்கள் வியாபாரத்தில் எடுக்கும் 'ரிஸ்க்'க்கு கிடைக்கும் சன்மானம்.

அதிகமான வரும்படி என்று பார்க்கும் பொழுது மேலே சொன்ன நான்கு விதமான

வாடிக்கையாளர்களின் பிணைப்பு, பந்தம் இருக்கிறதே, அதற்கு ஈடான விஷயம் இந்த உலகத்தில் ஒன்றுமே இல்லை!

சன்மானங்களில் லாபத்துக்குத்தான் முதலிடம். வியாபாரத்தின் கவர்ச்சியே அதில் தான் இருக்கிறது.

ரிஸ்க் எடுக்காவிட்டால் வியாபாரம் செய்ய முடியாது. அதனால் இளைஞர்களே, உங்களுக்கு ரிஸ்க் எடுக்கும் அளவுக்கு துணிச்சல் இருக்கிறதா என்று கேட்டுக் கொள்ளுங்கள். 'ஆம்' என்றால் மட்டும் வியாபாரத்தில் இறங்குங்கள்.

இரண்டு: வியாபாரம் என்பது எடுத்தவுடனேயே லாபம் தந்துவிடக் கூடிய சமாசாரம் இல்லை. ஒவ்வொரு வியாபாரத்துக்கும் gestation period என்று ஒன்று உண்டு. அதாவது, அதற்கு லாபம் ஈட்டித்தர அவகாசம் கொடுக்க வேண்டும். அவகாசம் என்பது சில மாதங்களாக இருக்கலாம், சில வருடங்களாக இருக்கலாம். அதுவரை பொறுமை காக்க வேண்டும். அது லாபம் ஈட்டித் தருவதற்கு முன்னால் கார் வாங்குகிறேன் வீடு வாங்குகிறேன் என்று முதலில் கை வைத்தீர்களோ, வியாபாரம் படுத்துவிடும்.

மூன்று: உங்களுடைய வாடிக்கையாளர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களைத் தெய்வமாக நினையுங்கள்.

வியாபாரம் இல்லாவிட்டால் நீங்கள் இல்லை. வியாபாரத்தைத் தருபவர்கள் யார்? உங்கள் வாடிக்கையாளர்கள். அவர்களை நன்றாகக் கவனியுங்கள், அவர்கள் உங்களை அதைவிட நன்றாகக் கவனித்துக் கொள்வார்கள். உங்களை நன்றாகக் கவனித்துக் கொள்வது மட்டும் இல்லை, உங்களில் ஒருவராக ஒன்றிவிடுவார்கள். ஒரு உதாரணம் சொல்லுகிறேன்.

அரசாங்க உத்யோகத்தில் இருக்கும் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி என்னிடம் வந்தார். அவர் விவேக்ஸின் நெடுநாளைய வாடிக்கையாளர்.

"உங்களிடம் ஒரு சந்தோஷமான விஷயத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்!" என்றார்.

"என்ன விஷயம்?" என்றேன் ஆர்வமுடன்.

"எனக்குப் பேரக் குழந்தை பிறந்திருக்கிறது!"

"ரொம்ப சந்தோஷம்!"

"அவனுக்கு விவேக் என்று பெயரிட்டிருக்கிறேன்!"

எனக்கு ஒரு நிமிடம் பேச்சே வரவில்லை.

"குழந்தைக்கு என்னைத்தான் பெயரிடச் சொன்னார்கள். என் வீட்டைச் சுற்றி கண்களை ஓடவிட்டேன். எங்கு திரும்பினாலும் விவேக்கில் நான் வாங்கிய பொருட்கள். படுக்கையறையில், வரவேற்பறையில், சாப்பாட்டறையில், சமையலறையில். கல்யாணமான நாள் முதல் பாட்டி ஆகிய நாள் வரை, கிளார்க்காக வேலைக்குச் சேர்ந்த நாள் முதல் அதிகாரியாக பதவி உயர்வு பெற்ற நாள் வரை என்னுடைய ஒவ்வொரு வளர்ச்சியையும் நினைவூட்டும் விவேக்கின் பொருட்கள். என் வாழ்க்கையின் ஒரு அங்கமாகிவிட்ட விவேக்கின் பெயரைச் சூட்டுவதுதான் பொருத்தம் என்று தோன்றியது, சூட்டிவிட்டேன்!" என்றார்.

என் கண்களில் நீர் தளும்பிவிட்டது.

எனக்கு ஐந்து பிள்ளைகள், என்னுடைய மூத்த அண்ணனுக்கு மூன்று, இரண்டாவது அண்ணனுக்கு இரண்டு. ஆனால் யாருக்கும் ஒரு குழந்தைக்காவது விவேக் என்று பெயரிட வேண்டும் என்று தோன்றவில்லை. இந்தப் பெண்மணிக்குத்தான் எவ்வளவு விசுவாசம்? வாடிக்கையாளர்களின் இந்த பிணைப்பு, பந்தம் இருக்கிறதே அதற்கு ஈடான விஷயம் இந்த உலகத்தில் ஒன்றுமே இல்லை!

— கிருஷ்ணா சிதம்பரம்

படங்கள்: **ஸ்ரீஹரி**



முதுபனி நிலவு

ராஜேஷ் குமார்

9

சிவப்ரகாசம் உறைந்து போய் நின்றிருந்த யமுனாவைப் பார்த்து மறுபடியும் இரைந்தார்.

"சொல்லும்மா... உனக்கு இப்படிப்பட்ட ஒரு முறை மாப்பிள்ளை உறவு இருக்கிறதை என்கிட்ட ஏன் சொல்லலை...?"

யமுனாவின் பெரிய விழிகளில் நீர் நிரம்பி கனத்து பளபளத்தது. "அது... வந்து மாமா..."

"ம்... சொல்லு..."

"பயமாயிருந்தது மாமா... ஆனா உங்க மகன்கிட்ட சொல்லியிருக்கேன்..."

சிவப்ரகாசத்தின் முகத்தில் இப்போது சட்டென்று ஒரு மாற்றம். பொங்கிய பாலில் நீர் தெளிக்கப்பட்ட தினுசில் கோபத்தின் உக்கிரம் குறைந்தது.

"அகிலுக்கு இந்த விஷயம் தெரியுமா...?"

"தெரியும் மாமா...! இப்படியொரு கிரிமினல் முறை மாப்பிள்ளை இருக்கிறது எங்க அப்பாவுக்குத் தெரிய வேண்டாம்ன்னு அவர்தான் சொன்னார்..."

"ஓ...! இது அவனோட வேலைதானா...?"

திலகவதி யமுனாவுக்கு சப்போர்ட் செய்து பேசினாள். "உங்க பையன் அப்படிச் சொல்லி வெச்சிருக்கும் போது மருமக எப்படி வாயைத் திறப்பா...?"

"இருந்தாலும் சொல்லியிருக்கலாம். இப்போ எவ்வளவு அசிங்கம் பார்த்தியா...? வெள்ளிக்கிழமையும் அதுவுமா ஒரு குடிகாரன் – ஜெயிலுக்குப் போய்ட்டு வந்தவன், நம்ம வீட்டு வாசற்படியை மிதிக்கலாமா...? வயசுப் பொண்ணுங்க இருக்கிற வீட்ல அவனோட சாராயப் பார்வை படலாமா...?" சிவப்ரகாசம் பொரிந்து கொண்டிருக்கும் போதே காம்பௌண்ட் கேட்டுக்குள் கார் நுழைந்து போர்டிகோவில் மௌனமாயிற்று.

தங்க வர்ண ஸ்வீட் பாக்கெட் அட்டைப் பெட்டியோடு அகில் காரிலிருந்து கீழே இறங்கினான். சந்தோஷம் தத்தளிக்கும் முகத்தோடு போர்டிகோ படிகளை நோக்கிப் போனவன் படிகளில் இறுகிய முகங்களோடு நின்றிருந்த எல்லோரையும் பார்த்து ஸ்லோ மோஷனில் முகம் மாறினான்.

"என்ன எல்லோரும் வாசலுக்கே வந்துட்டீங்க. வெல்கம் பண்றீங்களா...? யாரோட முகமும் சரியில்லையே...?"

எல்லோரும் மௌனம் காக்க யமுனா மட்டும் அழுகையை அடக்கிக் கொண்டு பேசினாள்.

"என்னங்க... அந்த சத்தியமூர்த்தி வந்திருந்தான்..."

"யாரு... உனக்கு முறை மாப்பிள்ளைன்னு ஒருத்தனைச் சொன்னியே... அவனா...?"

"ம்... அவனே தான்...!"

"ஜெயிலிலிருந்து வந்துட்டான் போலிருக்கு. வந்து ஏதாவது கலாட்டா பண்ணினானா...?"

சிவப்ரகாசம் மகனின் தோளைத் தொட்டார்.

"என்னைக் கேளுடா... நான் சொல்றேன்...! நல்ல நாளும் அதுவுமா ஒரு குடிகாரப்பய நம்ம வீட்டு வாசற்படியை மிதிச்சு பேசக் கூடாததையெல்லாம் பேசிட்டுப் போயிட்டான். ஏண்டா, இப்படியொரு மோசமான முறை மாப்பிள்ளை யமுனாவுக்கு இருக்கிறது உனக்கு முன்னாடியே தெரியுமாமே... உண்மையா...?"

"ஆமா..."

"அதை ஏன் என்கிட்ட சொல்லலை...?"

"அப்பா, அம்மா, சொந்தம், பந்தம் எதுவும் இல்லாத யமுனாவை நான் காதலிக்கறேன்னு சொன்னதும் மொதல்ல கோபப்பட்டீங்க. கல்யாணத்துக்கு ஒத்துக்க மாட்டேன்னு அடம்பிடிச்சீங்க. அதுக்கப்புறம் யமுனாவை நேர்ல பார்த்ததும் மனசு மாறி பச்சைக் கொடியைக் கையில் எடுத்தீங்க. அந்தச் சமயத்துலதான் யமுனா ஜெயில்ல இருக்கிற தன்னோட முறைமாப்பிள்ளையைப் பத்தி என்கிட்டே சொன்னா.

உங்ககிட்டே அந்த உண்மையைச் சொல்லணும்ன்னு என்னைக் கட்டாயப் படுத்தினா. நான்தான் சொல்லக்கூடாதுன்னு தடையுத்தரவு போட்டேன். ஜெயிலுக்குப் போகிற அளவுக்கு ஒரு மோசமான உறவு யமுனாவுக்கு இருக்குன்னு உங்களுக்குத் தெரிஞ்சா அந்த நிமிஷமே நீங்க கையில் இருக்கிற பச்சைக் கொடியை கீழே போட்டுட்டு சிவப்புக் கொடியை எடுத்துக் குவீங்கன்னு எனக்குத் தெரியும். ஏன்னா உங்களுக்குத்தான் ஜெயில், கோர்ட்டு, போலீஸ் என்கிற வார்த்தைகளே பிடிக் காதே..."

சிவப்ரகாசம் ஒரு பெருமூச்சோடு அகிலை ஏறிட்டபடி தன் இடதுகையின் சுட்டு விரலை உயர்த்தினார்.

"இதோ பார்... அந்தக் குடிகாரப்பய இந்த வீட்டு வாசற்படியை மிதிச்சது.. இதுவே கடைசி தடவையா இருக்கணும். இனிமே அவன் வரக்கூடாது..."

"வர மாட்டான்..."

"நீ என்ன செய்யப் போறே?"

"போலீஸ்ல கம்ப்ளெயின்ட் பண்ணி..."

"என்ன சொன்னே... போலீஸா?"

"ஆமா..."


"டேய் அகில்... ஒரு விஷயத்தை மனசுல நல்லாப் பதிய வெச்சுக்க. இந்த வீட்டுக்கு ஜெயிலுக்கு போனவன் மட்டும் இல்லை, போலீஸ்காரனும் வரக்கூடாது."

யமுனாவின் ரத்த ஓட்டம் சில விநாடிகள் ஸ்தம்பித்து விட்டு பின் இயக்கம் பெற்றது. இன்ஸ்பெக்டர் பால்பாண்டியனின் வருகையும் லீலா கிருஷ்ணனின் விவகாரமும் மூளைப் பகுதியை பிறாண்டி விட்டு வயிற்றை இம்சை செய்தன.

"பேசாம நா சாமியாரா போயிடலாம்னு பாக்கறேன்!"

"ஆசிரம நிர்வாகப் பொறுப்பை என் கிட்ட விட்ருங்க!"

— அம்பை தேவா



சரியாய்ப் பத்து மணிக்கு இன்ஸ்பெக்டர் பால் பாண்டியன் பக்கத்துத் தெருவில் இருக்கும் பஞ்சமுக ஆஞ்சநேயர் கோயிலுக்கு வந்து விடுவார்.

'வீட்டில் இருக்கும் அத்தனை பேரையும் ஏமாற்றி விட்டு என்னால் கோயிலுக்குப் போய் பால் பாண்டியனைச் சந்திக்க முடியுமா...?'

'சரளா வேறு கோயிலுக்கு வந்து காத்திருப்பாள்...!'

தோளை யாரோ தொட்ட உணர்வு. சுதாரிப்புக்கு வந்து நிமிர்ந்தாள். சிவப்ரகாசம் சின்னப் புன்னகையோடு பக்கத்தில் நின்றிருந்தார்.

"போனது போகட்டும். இன்னிக்குச் சந்தோஷமான நாள். எனக்கு பேரனோ பேத்தியோ கொடுக்க இன்னிக்கு நீ அச்சாரம் போட்ட நாள். உன் மனசு கஷ்டப்படும்படியா நான் பேசியிருக்கக் கூடாது. பேசிட்டேன். அதையெல்லாம் நீ மனசுல வெச்சுக்காமே சந்தோஷமாயிருக்கணும். எல்லார்க்கும் ஸ்வீட் எடுத்துக் கொடும்மா... மொதல்ல எனக்கு..."

கண்ணீர்ச் சுரப்பிகள் சட்டென்று உடைப்பெடுத்துக் கொள்ள யமுனாவின் கண்களில் வெள்ளப் பிரவாகம்.

"மாமா...! நான் தப்புப் பண்ணியிருந்தா என்னை மன்னிச்சுக்குங்க..."

"நீ எந்தத் தப்பும் பண்ணலை. உனக்கு மோசமான முறை மாப்பிள்ளை ஒருத்தன் இருக்கிறதை உன் புருஷன்கிட்டே சொல்லியிருக்கே. நீ அதை மறைச்சிருந்தாத்தான் தப்பு..."

இப்போது திலகவதியின் கை யமுனாவின் தோளை இதமாய்ப் பற்றியது. "நீ இந்த வீட்டுக்கு மருமக. வெள்ளிக்கிழமையும் அதுவுமா வாசல்ல நின்னு அழக்கூடாது. உன்னோட மாமா கோபம்தான் உனக்குத் தெரியுமே. வீட்ல யாரும் விளையாட்டுக்குக் கூட பொய் பேசக் கூடாது. நரசிம்ம மூர்த்தியா அவதாரம் எடுத்துடுவார். அவருக்கு எல்லாமே ஒழுங்காயிருக்கணும், அவ்வளவுதான். மொதல்ல அவருக்கு ஸ்வீட் கொடும்மா..."

யமுனா கண்ணீரை உள்வாங்கிக் கொண்டு அந்த இனிப்புப் பாக்கெட்டைப் பிரித்தாள்.

அறையின் உள்ளேயிருந்து வெளிப்பட்ட தயாளனைப் பார்த்து நிலைகுலைந்த வருண் மிரட்சியாய்ப் பின்வாங்கி, சுவரில்

'தட்'டென்று முட்டிக் கொண்டு நின்றான்.

"ஸ... ஸார்..." சுவாசிக்கத் திணறிய வருணை நோக்கி உதட்டில் ஒட்ட வைத்துக் கொண்ட ஒரு புன்னகையுடன் தயானந்த் நெருங்கினார்.

"என்ன வருண்...! அப்படியே திகைச்சுப் போய் நின்னுட்டே! இந்த இடத்துல நீ என்னை எதிர்பார்க்கலை இல்லையா...? ஃபார் யுவர் இன்ஃபர்மேஷன்... இது என்னோட இடம்தான். ஷி ஈஸ் மை பர்சனல் செக்ரட்டரி... நேம் பர்வதா. நாட் பர்வத ராஜகுமாரி. அது உனக்காக வெச்சுக்கிட்ட பேர்."

வருண் சற்றே மிரட்சியிலிருந்து விடுபட்டவனாய் தயானந்தை ஏறிட்டான்.

"எதுக்காக ஸார் இந்த நாடகம்?"

"எதுக்காக இருக்கும்ன்னு நீ நினைக்கிறே?"

"நான் ஒரு ஜெயில் ரிடர்ன்டு. க்ரிமினல் ஆக்டிவிட்டீஸ் இன்னமும் என்கிட்ட இருக்கா இல்லையான்னு டெஸ்ட் பண்ணிப் பார்த்திருக்கீங்க..."

"கரெக்ட்..."

"நான் அப்படிப்பட்டவன் கிடையாது ஸார்..."

"பம்பாய் ஜெயில்ல நீ ரெண்டு வருஷம் கம்பி எண்ணிட்டிருந்தது உண்மைதானே...?"

"உண்மைதான்...!"

"எதுக்காக அந்த ரெண்டு வருஷ ஜெயில் வாழ்க்கைன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?"

வருண் உதட்டைக் கடித்தபடி ஐந்து விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னான்.

"தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஒரு கொலையைப் பண்ண வேண்டியதாயிடுச்சு..."

"யாரை...?"

"மாதுங்கா ஏரியாவில் ரௌடித்தனம் பண்ணிக் கொண்டிருந்த ஒரு தாதாவை."

"உனக்கும் அவனுக்கும் என்ன தகராறு... பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்னையில் ஏதாவது தகராறா?"

"கொலை செய்யறதுக்கு பத்து நிமிஷம் முன்பு வரை அவன் யார்ன்னு எனக்குத் தெரியாது. மாதுங்காவில் ஒரு வீட்டு மாடி போர்ஷனில் ரூம் எடுத்துத் தங்கியிருந்தேன். அந்த வீட்டு ஓனர் ஒரு மார்வாடி. அவருக்கு ஒரு அழகான பொண்ணு. ஒருநாள் மத்தியான நேரம். நான் ரூம்ல படுத்து ரெஸ்ட் எடுத்துக்கிட்டிருந்தேன். திடீர்ன்னு கீழே ஏதோ சப்தம் கேட்டது. மார்வாடி மராட்டி பாஷையில் யாரையோ திட்டிக்கிட்டு இருந்தார். நான் கீழே இறங்கிப் போனேன். தாதா ஒருத்தன் கைநிறைய ரூபாய் நோட்டுக்களை வெச்சுக்கிட்டு மார்வாடிகிட்டே பேசிட்டிருந்தான். என்னைப் பார்த்ததும் மார்வாடி - "பாருங்க தம்பி இந்த அநியாயத்தை... ஒரு மணி நேரத்துக்கு உம் பொண்ணை என் கூட வெளியே அனுப்பு. இந்தப் பணத்தை வாங்கிக்கன்னு சொல்றான். பொண்ணை அனுப்பாட்டி ரெண்டு பேரையும் கொன்னுடுவானாம். இந்த அட்டூழியத்தை நீங்களே தட்டிக் கேளுங்க தம்பி!"ன்னு சொன்னார். நான் அந்த தாதாகிட்ட போய் நல்லதனமாகப் பேசி வெளியே அனுப்பப் பார்த்தேன். அவன் கேட்கலை. பணம் வேணும்ன்னா அதிகமா தர்றேன். பொண்ணை அனுப்புன்னு மிரட்டிக் கலாட்டா பண்ணினான். ஒரு கட்டத்தில் கத்தியைக் காட்டிக்கிட்டே பெண்ணைக் கடத்த முயற்சி பண்ணினான். இனிமே பொறுமையாயிருந்து பிரயோஜனமில்லைன்னு என் மனசுக்குப் பட்டது. பக்கத்தில் இருந்த ஸ்டூல் நாற்காலியை மடக்கி விநாடிக்கும் குறைவான நேரத்தில் தாதா தலையில் ஓங்கி ஒரு போடு போட்டேன். ஒரே அடிதான். மயக்கமாகி கீழே விழுந்தவன் போலீஸ் வந்து பார்க்கும்போது பிணம்! என்னை அந்த கேஸிலிருந்து காப்பாத்த மார்வாடி எவ்வளவோ முயற்சி பண்ணினார். முடியலை. ரெண்டு வருஷ தண்டனை கிடைச்சது..."

தயானந்த் சிரித்தார். "அதுல ஆறு மாசத்தை நன்னடத்தைக்காகக் குறைச்சுட்டாங்க. ரெண்டு வருஷம் முடியறதுக்



"ஒரே ராத்திரி எப்படி உன்னால ஏழெட்டு வீட்டுல திருட முடிஞ்சது?"

"அது தொழில் ரகசியம். கேட்காதீங்க எசமான்!"

— கொங்கணாபுரம் வே. செந்தில்

குள்ளேயே நீ வந்துட்டே..."

"ஸார்.. இதெல்லாம்... உங்களுக்கு..."

"எப்படித் தெரியும்ன்னு கேட்கறியா... இப்போ எனக்கு பர்சனல் செக்ரட்ரியா இருக்கிற பர்வதா மும்பையைச் சேர்ந்த தமிழ்ப் பொண்ணு. இங்கே வேலைக்கு வர்றதுக்கு முந்தி மும்பை மாதுங்காவில் இருந்தா. நீ தாதாவைக் கொலை பண்ணின போது உன்னோட ஃபோட்டோ வராத பத்திரிகையே மும்பையில் கிடையாதாமே. நீ இன்னிக்கு இன்டர்வ்யூ ஹாலுக்குள் நுழையும்போதே உன்னைப் பார்த்துட்டு வந்து என்கிட்டே சொல்லிட்டா பர்வதா..."

"நான் ஒரு கொலையைப் பண்ணிட்டு ஜெயிலுக்குப் போனவன்னு தெரிஞ்ச பின்னாடியும் எனக்கு ஏன் வேலை போட்டுக் கொடுத்திங்க... அதுவும் செக்யூரிட்டியில் வாட்ச்சர் வேலை...?"

"அகில இந்திய அளவில் துப்பாக்கி சுடும் போட்டியில் உனக்கு இரண்டாவது இடம். அந்த ஒரு தகுதிக்காகவே கம்பெனி போட்டுக் கொடுத்த வேலை இது. என்னைப் பொறுத்தவரைக்கும் உன்கிட்டே இருக்கிற சிறப்பான தகுதி நீ ஜெயிலுக்குப் போய்ட்டு வந்ததுதான். இந்தத் தகுதிக்காக நான் பர்சனலா உனக்கு ஒரு வேலை தரப் போறேன். அது என்ன வேலைன்னு என் வாயாலேயே நான் சொல்ல மாட்டேன். இப்போ நாம ஒரு கேஸட்டை டெக்ல போட்டு பார்க்கப் போறோம். சரியா எட்டு நிமிஷம் மட்டுமே ஓடக்கூடிய வீடியோ கேஸட் அது. அந்த கேஸட்டைப் பார்த்த பின்னாடி நீ பண்ண வேண்டிய வேலை எதுன்னு உனக்கே புரியும்..."

வருணின் முகத்தில் இப்போது மினுமினுப்பாய் வியர்வை. தொண்டைக்குழி அவஸ்தையில் உள்வாங்கி பின் புடைத்து கிளம்பியது.

"ஸார்... நீங்க பேசறதைப் பார்த்தா பயமாவும் இருக்கு, குழப்பமாவும் இருக்கு..."

"அந்த பயம், குழப்பம் எல்லாம் இன்னும் ஒரு பத்து பதினஞ்சு நிமிஷத்துக்குத்தான். அதுக்கப்புறம் நீயாகவே ஒரு தெளிவான முடிவுக்கு வந்திருப்பே...! பர்வதா...!"

"ஸார்..."

"கேஸட்டை டெக்ல போட்டுத் தயார் நிலையில் வை... நாங்க பின்னாடியே வந்துட்டிருக்கோம்..."

(தொடரும்)

தேடல்

தெரியுமென்று நினைத்தது
அகண்டத்தின்
சிறுதுணுக்கு

அறிந்ததாக நினைத்ததெல்லாம்
அறியாமை.

கைக்குடையில் கதிர் மறைத்து
மெய்ப்பொருளை மறந்திருப்போம்

உள்வாங்க உள்வாங்க
கலமாகும் இரும்பு
ஆழ்ந்துவிட ஆழ்ந்துவிட
நீரில் நீ மிதிப்பாய்.

இடதுகால் குறிப்பு வைத்து
இருகண்ணும் அளித்தபின்பு
அதிகம் கண்டான் வேடன்.

— எஸ். கே. பிரபாகர்

நீங்கள் கேட்டவை - தராசு

கிரிக்கெட் வீரர்கள் நடிகைகளால் ஈர்க்கப்படுவது ஏன்...?

● மதிநேசன், வேலூர்.

? நாற்பது இடங்களைத் தருவதற்குத் தயார் என்று கலைஞர் அறிவிப்பு தந்த பிறகும் மூப்பனார் மௌனமாக இருந்தது ஏன்?

! காங்கிரஸை மடியில் கட்டிக் கொண்டு அவஸ்தைப்படுவதால்தான்!

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை - 84

? அரசு நிறுவனமான பால்கோவின் 51 சதவிகித பங்குகளை 'ஸ்டெர்லைட்' டிடம் விற்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதே. கோடிக் கணக்கில் லாபம் ஈட்டித் தரும் அரசு நிறுவனத்தைத் தனியாருக்கு விற்கலாமா?

! தற்போது சிறிதளவு லாபகரமாக இயங்கினாலும் அலுமினியம் தயாரிப்பை நவீனப்படுத்த ஏராள முதலீடு தேவைப்படும். அதற்கு மத்திய அரசு தயாராக இல்லை. நவீனப் படுத்தாமலிருந்தாலோ வெகு விரைவில் நிறுவனம் நஷ்டத்தைச் சந்திக்கும். தனியாரிடம் 51 சதம் பங்குகளை விற்றால் முதலீடுக்கு அரசு பொறுப்பு ஏற்க வேண்டாம்; லாபத்தில் பங்கு பெறுவதும் சாத்தியம்.



• ... சர்ப்பு!

● சாத்தூர் சபாபதி, திருச்சி - 18

? நம்து நடப்பு அரசியலின் அசட்டு தைரியங்களை வரிசைப் படுத்துங்கள்...?

! 'ஊழல் செய்தார்' என்று பதவியிலிருந்து தூக்கி வீசியவரையே மீண்டும் சிம்மாசனத்தில் அமர்த்த அதே தலைவர்கள் துணிந்து நிற்கிறார்களே... அதற்குத்தான் முதலிடம், இரண்டாமிடம், மூன்றாமிடம்!



• பரவசம்...

● மங்கை, பாளையங்கோட்டை


? கிரிக்கெட் வீரர்கள் சினிமா நடிகைகளால் ஈர்க்கப்படுவது எதனால்...?

! பேரழகும் தனக்கு அடிபணிகிறது என்ற ஈகோ இவருக்கு; பேராற்றலும் தனக்கு அடிபணிகிறது என்ற ஈகோ அவருக்கு!

● கே.என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்

? ரஜினி, 'சோ'வின் முயற்சிகள் எந்த அளவுக்குத் தேர்தலில் உதவப் போகின்றன?

! குட்டியாய் ஒரு நீதிக் கதையைச் சொல்லி, 'ஆண்டவனாலேயே காப்பாற்ற முடியாது' என்று ரஜினி எச்சரிக்கை மணி அடித்ததில் அ.தி.மு.க. பெருந்தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது. அது ரஜினியின் ஆளுமை. சோவின் இன்றைய முயற்சிகள் கூட்டணிகளைப் பிரிப்பதிலும் புதிதாக உருவாக்குவதிலும் வெற்றி அடையக்கூடும். ஆனால், வாக்காளரிடையே ஒரு புரட்சிகரமான மனமாற்றத்தை அல்லது திருப்பத்தை ஏற்படுத்தாது.



• ...சாதித்ததும்

● 'ஸ்ரீவி' நாயக்கன், ஸ்ரீவில்லிப்புத்தூர்.

? வரும் தேர்தலின் மூலம் தமிழகத்தில் அரசியல் திருப்பம் ஏற்படும் என்று நம்புகிறீர்களா?

! மலைப்பாதையில் பஸ்ஸிலோ காரிலோ போகும்போது திருப்பம் நிச்சயம். அந்தத் திருப்பத்தை சாரதி திரம்பட சமாளித்தால் பாதை தொடர்கிறது. ஜனநாயக பஸ்ஸின் சாரதி திருவாளர் பொதுஜனம்தான்.



• சோதிப்பதும்..!

❑ ரூ.50 பரிசு பெறுபவர் :
எஸ்.வி. அருணாச்சலம்,
1-C/4, மனகாவலம், ஆஸ்பத்திரி ரோடு,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

★ ரூ. 25 பரிசு பெறுபவர் :
த. குமரேசன்,
அம்மன்கோயில் தெரு, காவல்கிணறு
புதூர், காவல்கிணறு (அஞ்), நெல்லை.

● விஜயலக்ஷ்மி முருகேசன், சென்னை - 74

? 'காற்றுக்கு' என்ன வேலி..?

! 'கதை'தான் என்கிறார்கள்!

● த. குமரேசன், காவல்கிணறு ★

? "குளோனிங் முறையில் குழந்தையை உருவாக்கும் திட்டத்தின் நோக்கம் ஆன்மிகமானது. 'நிலையற்ற வாழ்வு' என்ற தத்துவத்திலிருந்து இனி நிலையான வாழ்வு என்ற புதுத் தத்துவம் பிறக்கும்..." என ஹாமில்டன் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் கூறியுள்ளாரே?

! அணுகுண்டு தயாரிப்பைக்கூட நியாயப்படுத்திப் பேசிய விஞ்ஞானிகள் உண்டு. பின்னால் வருத்தப்பட நேர்ந்ததும் உண்டு. குளோனிங் முயற்சிகள் அணுகுண்டை விடவும் மனித குலத்துக்கு அபாயகரமானவை. இதில் ஆன்மிகத்தைத் தொடர்புபடுத்துவது சைத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானது.



● கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு

? நீங்கள் யார் என்று கேட்டால், "முதலில் விவசாயி, அடுத்து டாக்டர், அதன் பிறகு சமூக சேவகன், அரசியல்வாதி என்பேன்..." என்கிறாரே டாக்டர் ராமதாஸ்?

! இது பழைய பேச்சு! இப்போது போய்க் கேளுங்க... 'அன்புச் சகோதரியின் அருமைச் சகோதரன் நான்...' என்பார்.

● பி.ஆர். பார்த்தசாரதி, திருச்சி - 6

? புஷ் நிர்வாகம் ஈராக் மீது நடத்திய தாக்குதல் குறித்து...?

! அகில உலகின் கண்டனத்துக்கு உள்ளான கண்மூடித்தனமான அவசர உத்தரவு.

● ஏ.கே.நாசர், லெட்சுமாங்குடி

? அரசியலில் பரிதாபத்துக்குரியவர்கள் யார்...?

! அடிமட்டத் தொண்டன். அவன்தானே கடன் வாங்கி, போஸ்டர் ஒட்டி, சுவரில் எழுதி, கூட்டம் நடத்தி, ஐந்துக்கும் பத்துக்கும் அலையாய் அலைந்து.... பரிதாபமாகத்தானிருக்கிறது.

● எஸ்.வி. அருணாச்சலம், பாளையங்கோட்டை ❑

? கூட்டணி அமைப்பதிலேயே இவ்வளவு குழப்பமும் சிக்கலும் இருக்கையில், இவர்கள் ஆட்சிக்கு வந்தால் வோட்டுப் போட்ட நமக்காக என்ன செய்வார்கள்...?

! தொகுதி ஒதுக்கீடு பேரம் ஏலக்கடை ஆகிவிட்டதைப் பார்க்கும்போதே தெரியவில்லையா... ஆட்சிக்கு வந்தால் மக்களையும் ஏலம் விடுவார்கள் என்று!

● எம். சம்பத் பொள்ளாச்சி

? மறைந்த யோகி ராம்சூரத் குமார் பற்றி..?



! 'யோகி, உங்களுக்குக் கேன்ஸரா?' என்று தேம்பிய பக்தர்களிடம் 'மை ஃபாதர் பிளெஸ்ஸல் மீ திஸ் வே' என்று சிரிப்பாராம். சாதகமானது போலவே பாதகமானதையும் இறையருளாகவே பாவித்த அந்த மகான் சிவராத்திரி அன்றே சிவமுக்தி அடைந்ததை எண்ணி நெகிழ்ந்துள்ளனர் அவரது பக்தர்கள்.

● எம்.சிவகுருநாதன், சென்னை - 42.

? இந்தியாவில் பணியாற்றும் எந்த ஒரு அரசு ஊழியரும் தங்களிடம் வரும் கோப்புகளை இனிமேல் தேவையின்றி ஏழு நாட்களுக்குமேல் வைத்திருக்கக்கூடாது என்று நெறிமுறை வகுத்து, மத்திய அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்...?

! இதை ஒரு நெறிமுறை என்று ஆணை பிறப்பிக்கும் நிலையில் இன்றையப் பணி கலாசாரம் இருப்பதை எண்ணி நோகிறேன். அந்த நெறிமுறைகளிலிருந்து தப்ப என்னென்ன ஓட்டைகள் என்றுதான் அவசரமாகப் பார்த்துக் கொண்டிருப்பார்கள் நம் ஊழியர்கள்.

வர்ஷா

கர்ணன்

விதானத்தில் இளநீல வண்ணத்தில் மோகனமாகச் சிரித்துக்கொண்டிருந்தான் கிருஷ்ணன். பார்த்துக்கொண்டிருந்த அம்ருதாவின் உள்ளமெங்கும் விடையில்லாத கேள்விகள் யுத்தகளப் படையாகத் திரண்டெழுந்து அவளை ரணமாக்கின.

இந்த வீடு, ஒரு அரண்மனை. அதன் வயசு பல நூறு வருஷங்கள். வளர்ந்த தென்னை மரத்தைப் பிடுங்கி வீட்டுக்குள் வைத்தாலும், இடித்து விடாத உயரத்தில் கூரை. ஒரு பக்கத்து வாசலில் நுழைந்தால், அடுத்த பக்கத்து வாசல் இரண்டு தெரு தாண்டி முடிகிற விசாலம். கதவுகளில், தூண்களில் மின்னிக் கொண்டிருந்த நுண்ணிய மர வேலைப்பாடுகள். எல்லாம் ஒன்று சேர்ந்து 'நான் ராஜ பரம்பரையாக்கும்' என்று பழங்காலப் பெருமை பேசிப் பகட்டிக்கொண்டிருந்தது அது. அந்தப் பகட்டிற்கு, மேல் பூச்சுப் பூசி மெருகேற்றி இருந்தார் கணபதி. அம்ருதாவின் தந்தை.

கணபதி ஒரு பெரிய கலா ரசிகர். "நான் ஊஞ்சலாடிக்கிட்டே பாத்தேன்னா, அந்தக் கண்ணனும் என்னைப் பார்த்து சிரிச்சுக்கிட்டே குழல் வாசிக்கணும்!" – ரசனையோடு அவர் சொல்ல, ஓவியர்களும் அந்த ரசனை தந்த லயிப்போடு வரைந்திருந்தார்கள். கூரையில் உயிர்ப்போடு தெரிந்தான் கண்ணபிரான்.

ஓவியத்தில் முழுகியிருந்த அம்ருதா கண்களைக் கீழே ஓடவிட்டாள். அடர்ந்து போயிருந்த தூசியும், அழுக்கும் போர்த்தியிருந்தாலும் மங்காத அழகோடு காலுக்குக் கீழே, தரையில் மென்மையாக விரிந்து கிடந்தது சிவப்பு நிறக் கம்பளம்.

காஷ்மீர் கம்பளம். ''நமக்குப் பொண்ணுதான் பிறக்கும். பிறந்ததும் அவ கால் கம்பளத்தில்தான் படணும். தரையில் படக் கூடாது. கண்ணகி மாதிரி நம்ம மகளும் கால் தரையிலேயே படாத தேவதையா வளரணும்!" – அம்ருதா வயிற்றிலிருக்கும் போது அம்மாவிடம் அடிக்கடி சொல்வாராம் அப்பா. இது அவர் சொல்லித்தான் தெரியும். நேரடியாக அம்மாவின் வாயாலேயே கேட்கும் அதிர்ஷ்டம் அம்ருதாவுக்குக் கிடைக்கவில்லை. அவளின் கால்கள் முதல் முதலாகக் கம்பளத்தில் பதியும் முன்பே அவள் தாய் கிருஷ்ணவேணி, விதானத்து கிருஷ்ண பகவானை நேரடியாகத் தரிசிக்கப் போய்விட்டாள்.

தங்கத் தேரிலே வெள்ளிக் குதிரைகள் பூட்டி, அதிலே வலம் வருகிற ஒரு ராஜகுமாரியைப் போலத்தான் அம்ருதாவை வளர்த்தார் கணபதி. அப்பா இருக்கிற வரையில், தனக்கு ஒரு சாம்ராஜ்யமே சொந்தம் என்றுதான் நினைத்திருந்தாள் அம்ருதாவும். "எச



மான். பொண்ணுக்குக் கல்யாணம் பேசியிருக்கேனுங்க..." வந்து நிற்பவர் கைகளில், வெள்ளித்தட்டு, பட்டுப் புடைவை, தங்கச்சரடு, ரூபாய் நோட்டுகள் எல்லாம் போய்ச் சேரும்.

"நீங்க நல்லாயிருக்கணும் எசமான்..." வாழ்த்தில் மழைத்துளிப் பட்ட நிலம் போலக் குளிர்ந்து போவார் கணபதி.

'இட்டது சட்டம்
என்பவர் கொட்டம்
ஓய்ந்திடும் மட்டும்
ஓயாதென் பாட்டும்'

"இவ்ளோ நல்ல எழுதறீங்களே அறிவுச்செல்வன், புத்தகமாகப் போடக்கூடாது?"

"ஒருத்தரும் ஒப்பி அச்சிலேத்த மாட்டேங்கிறாங்க ஐயா."

"எவ்ளோ ஆகிடப் போகுது செலவு? நான் தரேன், புத்தகம் போடுங்க."

கணபதியின் தமிழ்க்காதல் அறிவுச்செல்வனின் எழுத்துக்களை அச்சிலேற்றின. படபடத்த புதுப்புத்தக வாசனையில் செலவழிந்ததை மறந்தார் கணபதி.

"கணபதி, யாரென்ன கேட்டாலும் மறுக்காம உதவி செய்றவன் நீ. அதனாலதான் உங்கிட்டே வந்திருக்கேன்..."

"என்ன கதிர்வேலு, என் நண்பன் நீ, உனக்குச் செய்யாமலா? என்ன உதவின்னு சொல்லு, என்னால முடிஞ்சா கண்டிப்பா செய்றேன்..."

"எம் மகன் பட்டணத்துல படிச்சிட்டு வந்திருக்கான். ஏதாவது வேலை தேடிக்கடான்னா கேக்க மாட்டேங்கிறான். சொந்தமா தொழில்



மகள்

பண்ணணுமாம். உரத் தொழிற்சாலை ஆரம்பிக்கணும்னு அடம்பிடிக்கிறான். அவ்வளவு பணத்துக்கு நான் எங்கே போறது?"

"உரம் தயாரிக்கிற ஃபேக்டரியா? ரொம்பப் பெரிய விஷயமாச்சே கதிர்வேலு?"

"நானும் என் மகன்கிட்டே எடுத்துச் சொன்னேன் கணபதி. நம்ம ஊர்லேயே உரம் தயாரிச்சா, நம்ம ஊர் விவசாயிங்களுக்கு குறைச்ச விலையில் உரம் கிடைக்கும். உள்ளூர் ஆளுங்களுக்கு வேலை போட்டுக் கொடுக்கலாம். நமக்கும் பிஸ்னஸாச்சுன்னு சொல்றான் அவன்."

"ம்.... சரி... உம் பையனை என்னை வந்து பாக்கச் சொல்லு."

கதிர்வேலுவின் மகன் ரத்னவேலு கணபதியைப் பார்த்தான்.

அறுவடைக்குக் காத்திருந்த வயல்களும், குலை தள்ளியிருந்த வாழை களுடன் தோட்டங்களும், தென்னந் தோப்புகளும், பாய்லர்களாக, டாங்க்களாக, இரசாயனம் சுமக்கிற குழாய்களாக மாறின.

"ஃபாக்டரியை இன்

னும் விரிவுபடுத்தலாம்னு இருக்கேன். நம்ம கைக்காசைப் போட வேண்டாம். அரசாங்கத்துல கடன் தராங்க. வாங்கிச் செய்யலாம்னு படுது..."

"செய்ய வேண்டியதுதானே ரத்னவேலு?"

"கவர்ன்மெண்ட்டுல கடன் வாங்குறதுக்கு உங்க கையெழுத்து வேணும். சும்மா சும்மா ஐயாகிட்டே போய் நச்சரிக்காதேன்னு அப்பாகூட சொன்னாரு... நான்தான் உதவி கேட்டா நீங்க மறுக்க மாட்டீங்கன்னு வந்தேன்..."

"கையெழுத்துதானே? போட்டுட்டாப் போகுது... எங்கே போடணும்?" பல லட்சங்கள் கடனுக்காக, ரத்னவேல் உரத் தொழிற்சாலை சார்பில், உத்தரவாதக் கையெழுத்துப் போட்டார் கணபதி.

கடனும் வாங்கப்பட்டது. விரிவும் படுத்தப்பட்டது. உரத் தொழிற்சாலையல்ல. கதிர்வேலு பெயரில் வீடுகளும், வயல்களும், தோப்புகளும், இன்னபிற சொத்துகளின் சேர்க்கையும்...

நஷ்டமடைந்த உரத் தொழிற்சாலை மூடப்பட்டது. கணபதியின் மிச்ச சொச்ச சொத்துக்களையும் ஏப்பம் விட்டபின்.

இடிந்து போனார் கணபதி. சொத்து போனதற்காக அல்ல... வாசலுக்கு வந்து நின்று, 'எசமான்...' என்று நம்பிக்கையோடு கேட்பவர்களிடம் 'இல்லை' என்று சொல்லுகிற நிலைமை வந்துவிட்டதே என்று!

'இல்லை' என்கிற சொல்லை அதிக நாள் சொல்ல விருப்பமில்லாதவர் போல், சட்டென போய்ச் சேர்ந்தார், அம்ருதாவை மட்டும் அந்த அரண்மனையில் தன்னந்தனியாக விட்டுவிட்டு.

ராஜாங்கத்து ராஜகுமாரியாகத் தன்னை நினைத்துக் கொண்டிருந்த அம்ருதாவைத் தாக்கின, முதுகுக்குப் பின்னாலிருந்து முன்னால் வந்து நின்ற நிஜங்கள்.

"காரியம் முடியட்டும்னு இருந்தேம்மா. கணபதி ஐய்யா எங்கிட்டே கொஞ்சம் கடன்பட்டிருந்தாரு... கேக்கலாம்னா உன்னாலேயும் கொடுக்க முடியாது போலிருக்கே?"

நகைகளைக் கழற்றி, வந்தவரிடம் கொடுத்தாள் அம்ருதா.

"உன்னை இப்படி மூளியாப் பாக்க மன சொப்பலை. ஆனா எனக்கும் குடும்பம், புள்ளைங்கன்னு இருக்கே... இந்தச் செயினை மட்டும் நீயே வச்சிக்கம்மா. வாழ வேண்டிய பொண்ணு.... வெறுங்கழுத்தோட நிக்க வேண்டாம்."

வாரி வாரிக் கொடுத்துக் கொடுத்து தன் தந்தை வறுமையை வாரிக் கட்டிக் கொண்டிருந்தது புரிந்தது அம்ருதாவுக்கு. இறந்து போன தந்தை மேல் கோபம் வந்தது. தனக்குக்கூட இல்லாமல் அப்படியென்ன தான தர்மம்?

"அபவ் ஒன் க்ரோர் லோன் மேடம். பாக்டரி ஆல்ரெடி டிஸ்ஸால்வ்டு. உங்க அப்பாதான் கியாரண்ட்டி கையெழுத்துப் போட்டிருக்கிறார். இந்த அரண்மனையை ஏலம் விட்டுதான் ஆகணும்... வேற வழியில்லை... ஸாரி மேடம்."

எரிகிற தீக்காயம் மேல் அமிலத்தை ஊற்றினாற்போல், அரசாங்கத்திலிருந்து வந்து சேர்ந்தார்கள் அதிகாரிகள்.

துயரப்படக்கூடத் தெம்பின்றி துவண்டு போனாள் அம்ருதா.

"வர்ற மண்டே வீட்டைக் காலி பண்ணிடுங்க மேடம்!"


இருட்டு சூழ்ந்தது அம்ருதாவை. இன்று தலைக்கு மேலிருக்கும் கூரை நாளை இருக்காது. இனி இந்தக் குழலூதும் மேக வண்ணனைக் கண் குளிரப் பார்க்க முடியாது. நந்தியாவட்டை, செவ்வரளி, சந்தனமுல்லை... தான் பார்த்துப் பார்த்து



"குண்டர்கள் நம் கட்சி ஆபீஸில் நுழைந்து சூறையாடியதை ஏன் தலைவரே, போலிஸுக்குச் சொல்லாம இருந்துட்டீங்க?"

"சீட்டுக்கட்டுகளையெல்லாம் கிழித்து, விஸ்கி பாட்டில்களையெல்லாம் உடைச்சிட்டாங்கன்னு புகார் கொடுத்தா நம்ம கட்சி மரியாதை என்ன ஆகும்னு நினைச்சுத்தான்!"

- உ. ராஜாஜி



சிநேகித்த இந்தச் செடிகளின் மலர்களை இனிமேல் பறிக்க முடியாது. வரப் போகிற இரவே கடைசி. இன்றே இறுதி. நாளை விடிகிறபோது எனக்கென்று எதுவுமில்லை. புயலடிக்கிற அலைகடலாக ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த அம்ருதாவின் உள்ளம், அலைகளும் சீற்றமுமாகக் கொதித்து அரளி விதை வரை போய் நின்றது.

"அம்மா...!"வாசலில் குரல்.

சிவந்திருந்த விழிகளைச் 'சட்'டெனத் துடைத்துக் கொண்டு, எட்டிப் பார்த்தாள் அம்ருதா.

"யாரு...?"

"நான்தாம்மா... நடராசு!"

பழைய பண்ணை ஆட்களில் ஒருவன். பண்ணையே இல்லை...

"என்ன நடராசு...?" சம்பிரதாயக் கேள்வி. நடராசுவோ, அந்தக் கேள்வியில் 'பொட்' என உடைந்தான்.

"எசமான்... போயிட்டாராம்மா... ஆறு மாசமா பாவி நான் ஊர்ல இல்லாமப் போயிட்டேனே... அந்தப் புண்ணியவான் மொகத்தைப் பாக்க கொடுத்து வைக்கலியே எனக்கு..."

அரற்றினான்.

"பொண்ணுக்குக் கல்யாணம் வச்சிருக்கேன்னேன்... பத்திரிகை எடுத்துட்டு வா நடராசு, செலவை நான் பாத்துக்கிறேன் னீங்களே ஐயா... இப்படி என்னைப் பரிதவிக்க வுட்டுட்டுப் போயிட்டீங்களே..."

வாயில் துண்டை வைத்துக் கொண்டு குமுறினான்.

விரக்தியான சிரிப்பும், அழுகையும் சேர்ந்து கலவையாகப் பிரவகித்தது அம்ருதாவுக்குள்.

"எப்ப நடராசு கல்யாணம்?"

"அதை விடுங்கம்மா. ஐயா இல்லாம... எப்படி நீங்க..."

"ஏன்? எனக்கென்ன? அரண்மனை மாதிரி வீடு இருக்கு... என்ன கவலை? நீ சொல்லு. எப்ப உன் பொண்ணு கல்யாணம்?"

ஆறு மாதங்களாக ஊரில் இல்லாத நடராசு, அரண்மனை ஏலம் பற்றி அறிந்திருக்க முடியாது. நம்பிக்கையோடு அம்ருதா சொன்ன பொய் நிலைத்தது.

"அடுத்த வாரம்மா... ஐயாவைதான் நம்பியிருந்தேன்..."

"இரு வரேன்"

உள்ளே போனாள் அம்ருதா.

எதுவுமே இல்லாமல் வெறிச்சென்றிருந்தது வீடு. தேடிப் பிடித்து ஒரு எவர்சில்வர் தட்டு...

'உங்கம்மா கல்யாணத்தப்போ கட்டியிருந்த புடைவை. நீயும் இதைக் கட்டிக்கிட்டுதான் மணமேடை ஏறணும்...' அப்பாவின் கனவுகள் இழைத்த அரளிப்பூ நிற பட்டுப்புடைவை...

கழுத்தில், கடைசியாய்த் தனித்துக் கிடந்த ஒற்றைச் சங்கிலி...

"வாங்கிக்க நடராசு..."

அம்ருதா நீட்டியபோது இன்னும் அதிகமாகத் தேம்பினான் நடராசு.

"கர்ண மகராசா பெத்த பொண்ணும்மா நீங்க. 'அப்பாதானே சொன்னாரு, நமக்கென்ன'ன்னு என்னைத் தவிக்கவுடாமே... எம் பொண்ணுக்குத் தயை பண்றீங்களே... உசுரிருக்கிறவரைக்கும் மறக்க மாட்டேம்மா..."

பெருகி வழிந்த கண்ணீரில், தன் மகளின் கழுத்தில் தடையேயின்றி தாலியேறப் போகும் சந்தோஷம் மின்னிடப் பேசி விட்டுப் போனான் நடராசு.

உள்ளே உடைப்பெடுத்த சந்தோஷத்தை மீறி அப்பாவிடம் கோபம் வந்தது. இப்படிக் கொடுத்து மகிழ்வதற்காகவாவது அவர் தனக்குக் கொஞ்சம் வைத்துவிட்டுப் போயிருக்கலாம்... ○

"எட்டு லட்சம் ஏகாம்பரம்ங்கிற பெயர் உனக்கு எப்படி தாத்தா வந்தது?"

"1952ல் நான் பைனான்ஸ் கம்பெனி நடத்தியபோது அவ்வளவுதான் என்னால் சாப்பிட முடிஞ்சுது!"

- உ. ராஜாஜி

"கேடி கபாலிகிட்ட ரொம்ப நியாய உணர்வு இருக்கு!"

"என்ன விஷயம்?"

"திருடின பொருட்களை அடகு வச்சு பணத்தை எடுத்துக்கிட்டு அடமான ரசீதை திருடின வீட்டுக்கு அனுப்பி வச்சுடறான்"

- அம்பை தேவா



சினிமாவில் வரும் அபத்தங்களைப் பார்த்து கடுப்பாகி, நடிகர், நடிகைகளிடம் போய் "ஏன் இப்படி எல்லாம் நடிக்கிறீர்கள்?" என்று கேட்டால் "இயக்குனர் சொல்வதைத்தானே செய்ய முடியும்?" என்கிறார்கள். இயக்குனர்களைப் போய்க் கேட்டால் "தயாரிப்பாளர் தானே பணம் போடுகிறார், அவர் விரும்புகிற மாதிரி தானே இயக்க முடியும்!" என்கிறார்கள். தயாரிப்பாளர்களை விளக்கம் கேட்டால், "அதெல்லாம் ஃபார்முலா சமாசாரம்!" என்கிறார்கள். "ஃபார்முலா என்பது மோசமான படங்களைத் தருவதற்கு ஒரு சப்பைக்கட்டா?" என்று ரோஜா கம்பைன்ஸ் காஜா மொய்தீனை மடக்கினோம்...

முதலில் ஹீரோவின் கால்ஷீட்டை வாங்கி மடியில் கட்டிக் கொண்டு, அதன் பிறகு கதைதேடி அலையும் தயாரிப்பாளர்களின் வரிசையில் நீங்களும் வருகிறீர்களா?

சத்தியமாக இல்லை. ஆனால் சினிமா பற்றியும் சினிமா மொழி பற்றியும் தெரிந்தால்தான் இன்று சினிமா தயாரிப்பாளராக ஆகமுடியும். வெறும் பணத்தை வைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியாது. நடிகரின் கால்ஷீட் முக்கியம்தான் என்றாலும் நடிகரை மட்டுமே நம்பி சினிமா என்பதை இப்போது நடிகர்களே ஒத்துக் கொள்வதில்லை. ஒரு முன்னணி நடிகர், முன்னரே கால்ஷீட் கொடுக்கிறார் என்றால் அந்த கம்பெனியிடம் நல்ல கதை எதிர்பார்க்கலாம் என்று நம்புகிறார் என்று அர்த்தம். இன்று ஆர்டிஸ்டையும், ஏமாற்ற முடியாது. ஆடியன்சையும் ஏமாற்ற முடியாது.

அத்தி பூத்தாற்போல நல்ல படங்கள் வந்தாலும், தமிழ் சினிமா, உங்களைப் போன்ற



• காஜா மொய்தீன்

தமிழ் சினிமா ஃபார்முலா!

கவர் ஸ்டோரி

தயாரிப்பாளர்களின் வியாபாரத்திற்காக உருவாக்கப்பட்டிருக்கும் ஃபார்முலாவை விட்டு வெளியே வரவில்லையே?

இந்த ஃபார்முலா விவகாரத்தில் ஒட்டு மொத்தமாக சினிமாக்காரர்களை மட்டும் தவறு சொல்ல முடியாது. அடிப்படையில் தமிழ் ரசிகர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்துகிடக்கிறார்கள். சினிமாவைப் பொழுதுபோக்காக மட்டுமே பார்ப்பவர்கள் ஒரு பிரிவினர். இவர்களில், தினமும் உழைத்து, களைத்து திரும்புகிறவர்கள் முக்கியமானவர்கள். பெற்றோரின் பணத்தில், பாக்கெட் மணியில் ஜாலியாக பொழுது போக்க நினைக்கும் இளைய சமுதாயத்தினர். உணர்ச்சிமயமான பெண் ரசிகர்கள். கலையாகவும், பொழுதுபோக்காகவும் சினிமாவைப் பார்க்கிறவர்கள். இப்படித்தான் நாங்கள் ரசிகர்களைப் பிரித்துக் கொள்கிறோம். எல்லா தரப்பு ரசனையையும் நாங்கள் ஒரே படத்தில் திருப்தி படுத்த வேண்டியிருக்கிறது. அதனால்தான் அதில் கொஞ்சம், இதில் கொஞ்சம் என்று தர வேண்டியிருக்கிறது. இப்படி உருவானது தான் ஃபார்முலா. 'பாஸ்ட் ஃபுட்' போன்று படங்கள் அமைந்தாலும் அடித்தளமாக நல்ல கதை இருந்தால்தான் அவை எடுபடும். உலகில் இன்று எந்த நாட்டின் வெகுஜன சினிமாவை நீங்கள் எடுத்துக் கொண்டாலும், இன்று இந்த ஃபார்முலா உள்ளடங்கியிருப்பதைப் பார்க்கலாம். எந்தக் கலையையும் பொழுது போக்கை அடிப்படையாக வைத்துதான் அதிக மக்களிடம் எடுத்துப் போக முடியும்.

இதிலிருந்து என்ன சொல்ல வருகிறீர்கள்... ரசனை என்பது திட்டமிட்டு உருவாக்கப்படுவதா? தானாக உருவாகும் ஒன்றா?

நமது வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப ரசனை உருவாகிறது. அது மாறிக் கொண்டே இருக்கும் என்பதை ஏற்றுக் கொள்ளும் அதேவேளை, ரசனையை வரிந்து யாராலும் உருவாக்க முடியாது என்பதுதான் என் கருத்து. இன்னும் எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால், வட இந்தியர்கள், இரண்டு ரொட்டியும், கொஞ்சம் சப்ஜியும் இருந்தால் சாப்பிட்டு விடுவார்கள். ஆனால் தென்னிந்தியர்களுக்கு, குழம்பு, கூட்டு, பொறியல், ரசம், மோர், ஊறுகாய் என்று இருந்தால்தான் சாப்பாடு இறங்கும். சாப்பிட்டு முடித்த பிறகு தாம்பூலத்தட்டு தேடுகிற மாதிரி, வணக்கம் போட்டு முடித்தபிறகுகூட, ஹீரோ, ஹீரோயினைக் கொஞ்ச நேரம் காட்டமாட்டார்களா என்று எதிர்பார்க்கும் ரசனை இங்கே இருக்கிறது.

இது நீங்கள் உருவாக்கிய ரசனை தானே?

நிச்சயமாக இல்லை. ஆயிரம்பேர் தியேட்டருக்கு வருகிறார்கள் என்றால் கொஞ்சம்பேருக்கு ஹீரோ பிடிக்கிறது. இளைஞர்களுக்கு ஹீரோயினைப் பிடிக்கிறது. சிலருக்குக் கதை பிடிக்கிறது. சிலர் இசையை எதிர்பார்த்து வருகிறார்கள். இன்னும் சிலருக்கு எல்லாமே பிடிக்கிறது. இதில் நீங்கள் எந்த ரசிகரையும் உதாசீனப் படுத்திவிட்டுப் படமெடுக்க முடியாது. அந்த வகையில் இது நல்ல கலவைதானே? சித்தர்களே கசப்பான மருந்தை தேன் குழைத்துத் தானே தரச்சொல்லியிருக்கிறார்கள்!

நீங்கள் சொல்கிற கலவையான ஃபார்முலாவில் எடுக்கப்பட்ட எத்தனையோ படங்கள் டெபாசிட் இழக்கவில்லையா?

எதுவுமே அளவோடு இருக்கிறபோது எந்த பிரச்னையும் இல்லை. நமது மக்கள் அதிகம் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். ஆனால் செண்டிமெண்ட் ஒரு டிராப் அதிகம் இருந்தாலும் "சொதப்பிட்டான்யா" என்று எழுந்து, 'இதுமாதிரி படத்தையெல்லாம் ஏன்யா எடுக்குறீங்க' என்று தியேட்டர்காரர்களைத் திட்டிவிட்டு வெளியே வந்துவிடுவார்கள். கிளாமர், நகைச்சுவை, சண்டை எல்லாமே அளவோடும், கொஞ்சம் லாஜிக்கோடும் இருக்க வேண்டும். இந்தக் கலவை அதிகமாகிவிடுகிறபோது அல்லது விகிதம் சரியாக இல்லாது போகும் படங்கள்தான் படுதோல்வியைச் சந்திக்கின்றன.

கொஞ்சம் லாஜிக் என்று சொல்கிறீர்கள். ஆனால் ஹீரோக்கள் ஒரு அடி கூட வாங்காமல் பத்து எதிரிகளைப் பந்தாடுவது நம்ம தமிழ்ப் படங்களில் தானே இருக்கிறது?

ஹீரோக்கள் அடிவாங்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் ரசிகர்கள் தயாராக இல்லை. அதையும் மீறி ஹீரோ அடி வாங்கினால் தியேட்டரில் கத்தி தீர்த்துவிடுவார்கள். ஹீரோவை அடிக்கும் ஸ்டண்ட் கலைஞர்களுக்கு ரசிகர்களிடமிருந்து கிடைக்கும் வசவுகளைக் காதுகொடுத்துக் கேட்க முடியாது. ஹீரோ, காரணத்தோடு அடிவாங்கினால் மட்டும் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொள்கிறார்கள். ஆனால் நிலமை இப்போது மாறி இருக்கிறது. எம்.ஜி.ஆர். காலத்தைப் போல... வில்லனிடம் மாட்டிக் கொண்டு தவிக்கும் கதாநாயகியைத் திடீரென்று கூரையைப் பொத்துக் கொண்டு வந்து காப்பாற்றும் சண்டியர்தனமெல்லாம் இப்போது கிடையாது.

சரி, பாடல்காட்சிகளில் ஹீரோ, ஹீரோயின் ஏன் மாங்கு...மாங்கு என்று ஆடுகிறார்கள். அதிலும் பாடலின் ஒரு வரிக்கு சுவிட்ஸர்லாந்திலும், இன்னொரு வரிக்கு ஆஸ்திரேலியாவிலும் போய் ஆடுகிறார்கள்! இதென்ன அநியாயம்?

காதலர்கள் யதார்த்தத்தில் டூயட் பாடுவது இல்லை, ஒத்துக் கொள்கிறேன். நம் சினிமாவில் தொடக்கம்தொட்டே பாடல்கள் தவிர்க்க முடியாத விஷயமாகி விட்டது. நாற்பதுகளில் நொடிக்கொரு பாட்டு இருந்தால்தான் படம் ஓடும். இன்று குறைந்தது ஐந்து பாடல்களைப் படத்தில் வைக்கிறோம். இதில் பொயட்டிக்காக ஒரு பாடல், மாங்கு மாங்கு என்று ஆடக்கூடிய பாடல் இரண்டுமே உண்டு. டான்ஸ் கோரியோகிராஃபி இல்லாத பொயட்டிக்கான பாடலை அமைதியாக ரசிக்கிற அதே ரசிகர்கள்தான், மாங்கு மாங்கு என்று ஆடுகிற பாடலையும் விசிலடித்து ரசிக்கிறார்கள். எல்லா பாடலும் பொயட்டிக்காக இருந்தால் தியேட்டரில் என்ன நடக்கும் என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். ஒவ்வொரு வரிக்கும், ஒரு நாட்டில் ஆட்டம் போடுவது என்னைப் பொருத்தவரை தயாரிப்பாளரின் பட்ஜெட்டை பாதிக்கிற விஷயம். அதை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.


ஹீரோயிசம் என்பது, ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு கலரோடு தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது? ஹீரோயின் கடைசியில் ஹீரோவிடமே சரணாகதி அடையும் நிலையும் தொடர்கிறதே?

ஹீரோயிசம் வளர்ந்துவிட்டதற்கு காரணம், ரசிகர்கள்தான். ரஜினி,

"வணக்கம் போட்டு முடித்தபிறகுகூட, ஹீரோ, ஹீரோயினைக் கொஞ்ச நேரம் காட்டமாட்டார்களா என்று எதிர்பார்க்கும் ரசனை இங்கே இருக்கிறது."



விஜய்காந்த், சரத்குமார், விஜய், அஜித் என்று ஒவ்வொருவரிடமும் ஒவ்வொன்றை எதிர்பார்க்கிறார்கள். இதைத் தாண்டி எந்த பாத்திரத்தில் நடித்தாலும் ஓகே என்று ஒரு சில ஹீரோக்களை மட்டுமே ரசிகர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். அதில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர் முரளி. பொற்காலம் படத்தில் ஊனமுற்ற தங்கைக்கு எதுவும் செய்ய முடியாத ஒரு அண்ணனாக யதார்த்தமான ஹீரோவாக நடித்து பாராட்டு வாங்குகிற அதே நேரம் அவர் மைக் பிடித்து பாடினாலும் இன்னொரு படத்தில் உருட்டுக் கட்டையைப் பிடித்து அடித்தாலும் ஓகே என்கிறார்கள் ரசிகர்கள். இன்னொன்று. ஹீரோ இன்று அழகாக, புஜபல பராக்கிரமத்தோடு இருக்க வேண்டும் என்கிற அவசியம் கூட இல்லாமல் போய்விட்டது. அதற்குக் காரணம் கதை. இயக்குனரின் ஆளுமை அதிகரித்து விட்டது என்று சொல்லலாம்.



"ஹீரோக்கள் அடிவாங்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் ரசிகர்கள் தயாராக இல்லை. அதையும் மீறி ஹீரோ அடிவாங்கினால் தியேட்டரில் கத்தி தீர்த்துவிடுவார்கள்!"

நகைச்சுவை காட்சிகளைக் கதையிலேயே அமைப்பது என்ன அத்தனை கஷ்டமா? 'டிராக் காமெடி' என்கிற அபத்தத்தையெல்லாம் எப்போது தவிர்க்கப் போகிறீர்கள்?

இதைத் தவிர்க்கவே முடியாது. அதற்கு முதல் காரணம் ஹீரோவின் கால்ஷீட் தேதிகளுக்கும், பிஸியாக இருக்கிற காமெடி நடிகரின் தேதிகளுக்கும் ஒத்து வருவதில்லை. அடுத்து, மிகக் குறுகிய காலத்தில் படமெடுத்து முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். தாமதிக்கிற ஒவ்வொரு நாளும் வாங்கிய பணத்திற்கு வட்டி கட்டியாக வேண்டும். இதனால்தான் தனியே காமெடி டிராக் வைக்க வேண்டிய நிலை வந்துவிடுகிறது. காமெடி டிராக்கையும் உங்கள் இஷ்டத்திற்கு வைத்துவிட முடியாது. கதையைப் பொறுத்து, அதை டிஸ்டர்ப் செய்யாது என்று தெரிந்தால்தான் டிராக் வைக்கிறோம். இல்லையென்றால் காமெடியே இல்லாமல் படம் வருகிறது. இதைவிட முக்கியமான காரணம் காமெடி நடிகர்களின் அபார வளர்ச்சி. ஹீரோ புது நடிகர் என்றாலும் இன்று, படத்தில் விவேக் இருந்தால் பயப்படாமல் படம் வாங்க முன் வருகிறார்கள்.

நல்ல கதைகளைத் தேடிப்போகாமல், கிராமம், காதல், அரசியல் அடிதடி, மாஃபியா தர்பார் இதற்குள்ளேயே சுற்றிக் கொண்டிருக்கும் தமிழ் சினிமாவில் கதைப் பஞ்சம் கோரத்தாண்டவம் ஆடுவதை ஒப்புக் கொள்கிறீர்களா?

இப்போது வரும் இளைய தலைமுறை இயக்குனர்கள், புதிதாகச் சிந்திக்க தொடங்கியிருக்கிறார்கள். நிறைய விஷயங்களைத் தேடிச் சென்று தெரிந்து கொண்டு கதை பண்ணுகிறார்கள். ஆனால், ஹாலிவுட் அளவுக்கு நம்மால் வளர முடியவில்லை. காரணம், சினிமா அங்கே புரொஃபெஷனலாக இருக்கிறது. பதினைந்து வால்யூம் கொண்ட ஒரு நாவலைப் பத்துபேர் கொண்ட டீம் 'திரைக் கதையாக எழுதுகிறது. அவர்களது சினிமா சந்தை பல மில்லியன் டாலர்களில் இருக்கிறது. அதனால் அவர்கள் ஒவ்வொரு படத்திலும் புதுமையைக் கையாள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். அது தவிர அங்கே சினிமா தயாரிப்பாளர்கள் பெரிய நிறுவனங்கள். ஹாலிவுட்டோடு ஒப்பிட முடியாவிட்டாலும், தமிழ் சினிமா புரொபொஷனலாக, கலையாக வளர்ந்து முதிர்ச்சி அடையும்போது, சினிமா தயாரிக்க வங்கிகள் நிதி உதவு செய்ய முன் வருகிறபோது, மாற்றங்கள் கண்டிப்பாக நிகழும். ஆனால் அதற்கு அவகாசம் தேவைப்படும். சினிமாவை நேசிப்பவர்கள் தயாரிப்பாளர்களாக வரவேண்டும்!

சந்திப்பு: **ஆர்.சி. ஜெயந்தன்**

படங்கள்: **ராஜன்**

பல 'சச்சின்'களை

கிரிக்கெட்டின் 'ஊழல் கறை'யை அகற்றத் துடிக்கும் இந்திய அணி ஒருபுறம். தொடர்ந்து 15 மாட்ச்சுகளில் வெற்றி பெற்று, வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள உயிரைக் கொடுக்கத் தயாராக இருக்கும் ஆஸ்திரேலிய அணி இன்னொருபுறம். இந்தியா – ஆஸ்திரேலியா போட்டிகள் பரபரப்பாகப் பேசப்படுவதில் ஆச்சர்யம் இல்லை. இந்த ஸீரீஸ் பற்றி அலசுகிறார்கள் இந்திய முன்னாள் ஸ்பின்னர் எல். சிவராம கிருஷ்ணன், கிரிக்கெட் பண்டிதர் ஆர். மோகன், இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் முன்னாள் காப்டன் சுதா ஷா. இந்தச் சந்திப்பு நிகழ்ந்தபொழுது முதல் டெஸ்ட் போட்டி ஆரம்பித்திருக்கவில்லை என்றாலும் நீங்கள் இந்தக் கட்டுரையை நீங்கள் படிக்கும்பொழுது அது நடந்து முடிந்திருக்கும் என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்...

சுதா: வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்கள் இந்தியாவுக்கு வரும்பொழுது அவர்கள் வயிறு படுத்தும் பாடு பெரிய பாடாக இருக்குமே, ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்கள் சமாளித்து விடுவார்களா?

மோ: எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. ரே லிண்டுவால் இந்தியாவை டூர் செய்தபொழுது, மெட்ராஸ் டெஸ்டில், முதல்நாள் அன்று அவரால் ஏழு ஓவர்களுக்கு மேல் பௌல் செய்ய முடியவில்லை – வயிறு மக்கர் செய்ததுதான் காரணம். இரண்டாவது இன்னிங்ஸில் 43 ரன்கள் மட்டுமே கொடுத்து ஏழு விக்கெட் எடுத்துவிட்டார் என்பது வேறு விஷயம்.



• ஆர். மோகன்



• சுதா ஷா

பொதுவாக வெளிநாட்டு வீரர்களின் உடல்நலத்தைப் பதம் பார்ப்பது மூன்று விஷயங்கள். 1. உணவு – அதாவது இந்திய உணவில் இருக்கும் காரம் 2. தண்ணீர் 3. வெய்யில்.

ஆலன் பார்டர் ஒருமுறை என்னிடம் சொன்னார் – "இந்தியாவில் டூரை ஆரம்பிக்கச் சிறந்த வழி என்ன தெரியுமா? இந்தியாவுக்கு வந்து இறங்கின கையோடு காரசாரமாக எதையாவது சாப்பிட்டு வயிற்றைக் கெடுத்துக் கொள்ள வேண்டும் – இரண்டு, மூன்று நாள் அவஸ்தை

உருவாக்க வேண்டும்!

பட்டு, முதல் போட்டிக்குள் குணமாகி விட வேண்டும் – பிறகு ஸீரீஸ் முடியும்வரை பிரச்னையே இல்லாமல் ஆடலாம்!''

ஆனால், நமக்கேன் வம்பு என்று இப்போதைய ஆஸ்திரேலிய வீரர்கள் மசாலா பக்கம் வருவதே இல்லை. அதோடு, உணவின் வெப்பநிலையைச் சரிபார்க்கும் தெர்மா மீட்டர்களை வேறு கொண்டு வந்து விட்டார்கள். ஒரு குறிப்பிட்ட டெம்ப்ரேச்சருக்குக் கீழே உள்ள உணவைச் சாப்பிட்டு விடாதீர்கள் என்று மருத்துவர்கள் சொல்லி அனுப்பியிருக்கிறார்களாம்!

இதை எல்லாம் மீறி பிரச்னை ஏற்பட்டால் ரெடிமேடு டிரிப்ஸை கைவசம் வைத்திருக்கிறார்கள்.

தண்ணீர்ப் பிரச்னையைச் சமாளிக்க இருக்கவே இருக்கிறது கிரிக்கெட்டின் ஆஸ்தான பிஸ்லெரி.

அடுத்து, வெயில். ஆஸ்திரேலியாவில், குறிப்பாக அடிலேய்டில், 110° F வெயில் என்பது சகஜம். ஆனால் காற்றில் ஈரப்பதம் இருக்காது. இந்தியாவிலோ முதல் பந்து பௌலிங் செய்வதற்கு முன்பு சாக்ஸ் நனைந்துவிடும். வெயிலைச் சமாளிக்க இந்த அணி என்ன கொண்டு வந்திருக்கிறது தெரியுமா? ஐஸ் ஜாக்கெட்டுகள்!

எந்தப் பிரச்னை வந்தாலும், எதிர் கொண்டு சமாளித்து வெற்றி அடைந்தே தீருவது என்று வந்திருக்கிறார்கள் பாருங்கள், அதுதான் கில்லர் – இன்ஸ்டிங்ட் என்பது!

சுதா: இந்த வெறி நம் இந்தியர்களுக்கு வர மாட்டேன் என்கிறதே?

மோகன்: நடப்பது நடந்தே தீரும் என்கிற மனப்பான்மை நம் இந்தியர்கள் அனைவருக்கும் உண்டு. இதுதான் அந்த வெறிக்கு முட்டுக்கட்டையாக இருப்பது!

சிவ: பொதுவாக நம் இந்திய வீரர்களுக்கு மனபலமும் குறைச்சல்தான்!

மோ: எந்த இடத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் 100 சதவீதம் திறம்பட செயல்படுவதுதான் சிறந்த மனோபலத்துக்கு சாட்சி. அப்படிப் பார்த்தால், சச்சின் ஒருவரைத் தவிர, என்னால் யாரையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை. இப்படிப் பட்ட வீரர்கள் கிடைப்பது அரிது. அவர்கள் தாமாகவே கிடைப்பார்கள் என்று காத்துக்கொண்டிருந்தால், காத்துக்கொண்டே இருக்க வேண்டியதுதான்! அவர்களை நாம்தான் உருவாக்க வேண்டும். எப்படி? மனப் பயிற்சி மூலம்.

உதாரணத்துக்கு, ஜோனல் போட்டிகளில் அபாரமாக விளையாடும் வீரர்கள் சர்வதேச போட்டி என்று வரும்பொழுது திணறுகிறார்கள். காரணம், வெற்றியைத் தாக்குப் பிடிக்கக் கூடிய மனப்பக்குவம் இல்லை. இது வெறும் ஆரம்பம்தான். இன்னும் சாதிக்க எவ்வளவோ இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல யாருமே இல்லை. வெற்றி அடைந்தவுடன் வேலை முடிவதில்லை, அங்குதான் வேலையே ஆரம்பமாகிறது என்று அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

பயிற்சியாளர்கள் வரிசையில் மனநல நிபுணர்களைச் சேர்த்துக் கொள்ளும் கட்டத்துக்கு இப்பொழுதுதான் வந்திருக்கிறோம். இனி, போகப் போக பலன் தெரியும்!

சிவ: வெளிநாட்டில் போய் விளையாடிய கடைசி 28 டெஸ்டுகளில் ஒன்றில்தான் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால், ஆஸ்திரேலியாவைப் பாருங்கள். வெஸ்ட் இண்டீஸுக்குப் போய் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இங்கிலாந்தில் போய்



• எல். சிவராமகிருஷ்ணன்

வெற்றி பெற்றிருக்கிறார்கள். எந்த இடத்தி லும், எந்தச் சூழ்நிலையிலும் திறம்பட செயல்பட நாமும் கற்றுக் கொள்ள வேண் டும்!

சுதா: கிரிக்கெட் அகாடமிகளின் பங்கு எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?

மோ: அகாடமிகள் அனைத்தும் ஆஸ்தி ரேலிய முறையிலேயே பயிற்சி கொடுக்கின் றன. அவை எல்லாம் தொடங்கப்பட்டு 7-8 வருடங்கள்தான் ஆகின்றன என்றாலும் ஏற்கெனவே பலன் தெரிய ஆரம்பித்து விட்டது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராகவும் ஜிம்பாப்வேவுக்கு எதிராகவும் NCA நேஷனல் கிரிக்கெட் அகாடமியைச் சேர்ந்த இளைஞர்கள் சக்கைப்போடு போட்டி ருப்பதே சாட்சி.

நமது இந்திய அணிக்குக் கூட இதே முறையில் பயிற்சி கொடுக்க நியுஜிலாந்தி லிருந்து ஜான் ரைட் வந்திருக்கிறார். நிச்சயம் மாற்றம் தெரியும்!

சுதா: டீம் – ஸ்பிரிட் என்று வரும் பொழுது 'தாய்மொழி' போன்ற அடிப்படை விஷயங்களில் வீரர்கள் வேறுபடுவது ஒரு காரணம் என்கிறார்களே...

மோ: இந்திய வீரர்கள் அடிக்கடி ரன்–அவுட் ஆவதற்கு வேண்டுமானால் அது காரணமாக இருக்கலாமே ஒழியே, அது வேறு எதற்கும் தடையாக இருக்கக் கூடாது! (சிரிக்கிறார்)

சுதா: சீரீஸ் தொடங்கும் முன்பே இரண்டு காப்டன்களும் மோதிவிட் டார்களே!

சிவ: வார்த்தை மோதல் எல்லாம் இருக்கட்டும், ஃபீல்டில் எப்படி மோதுகிறார்கள் என்பதல்லவா முக்கியம்?

சுதா: விக்கெட்டுகள் எப்படி இருக்கப் போகின் றன?

மோ: எப்படி இருக்கப் போகின்றன என்பது தெரிய வில்லை, ஆனால் இந்திய அணியைப் பொறுத்தவரை டர்னிங் டிராக்கு கள் உதவாது. இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லலாம்.

1. டர்னிங் விக்கெட்டில் ஷேயின் வார்ன் போன்ற பௌலர்கள் வெளுத்து வாங்கி விடுவார்கள். நம்முடைய பாட்ஸ்மேன் திணற வேண்டியதுதான்!

2. அதேபோல் அவர்களை வீழ்த்த நம்மி டம், பெயர் சொல்லும் அளவுக்கு ஸ்பின்– பௌலர்கள் இல்லை.

சுதா: பேடி, பிரஸன்னா, வெங்கட், சந்திரசேகர் – இவர்கள் தரத்தில் ஒரு ஸ்பின் -பௌலர் பிறகு உருவாகவில்லையே...?

மோ: உண்மைதான். ஆனால் நம் முடைய தற்போதைய ஸ்பின்னர்களால் பந்தை டர்ன் செய்ய முடியவில்லையே தவிர, அவர்களின் பௌலிங், ஆக்யூரேட் டாக, அதாவது திருத்தமாக இருக்கிறது. உதாரணம் கும்ப்ளே. அவர் 120 பந்துகள் பௌல் செய்தால் 100 பந்துகள் ஆக்யுரேட் டாக இருக்கும். அவர் இந்த ஸீரிஸில் விளையாட முடியாதது, நம்முடைய துரதிர்ஷ்டம்தான்!

அனுபவசாலியான ஹிர்வானி இருக் கிறார். ஆனால் பிரமாதமாக விளையாடி னார் என்று சொல்லக் கூடிய அளவுக்கு எந்த டெஸ்ட்டை

சல்யூட்!

"கிரிக்கெட் உலகின் ஜாம்ப வான், சகாப்தம், இன்னும் என்னவெல் லாமோ சொல்கிறார்கள் என்னை. என்னைவிட சிறந்த பேட்ஸ்மேன்கள் நிறைய பேரை நான் காண் கிறேன். ஆனால் என்ன காரணத்துக்காகவோ அவர் கள் அவுட்டாகி விடுகிறார்கள்."

– சில வருடங்களுக்கு முன்பாக ஆஸி.டி.வி. சேனல் ஒன்றில் டான்பிராட்மேன் அளித்த பேட்டி இது. அவர் மற்ற பேட்ஸ்மேன்களைப் பற்றி இப்படிச் சொன்னாலும் அவர் ஒரு கிரிக்கெட் வரலாறு என்பதில் சந்தேகமில்லை. இன்று வரை எந்த பேட்ஸ்மேனாலும் தொடமுடியாத 'அவரெஜ்' அவருடையது என்பது ஒன்றே போதும் அவரின் சாதனைக்கு!

ஐம்பத்தி இரண்டு டெஸ்டுகளில் எண்பது இன்னிங்ஸ் ஆடி ஆறா யிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி ஆறு ரன்கள் எடுத்திருக்கிறார் அவர். ஓர் இன்னிங்ஸ் சராசரி, தொண்ணூற்று ஒன்பது புள்ளி தொண்ணூற்று நான்கு! ஒரு இன்னிங்ஸில் எடுத்த அதிகபட்ச ரன்கள் முந்நூற்று முப்பத்து நான்கு.

பிராட்மேனின் இந்த அதிகபட்ச ரன் சாதனையை, 1998ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக ஆடிய ஆஸி.அணியின் முந்நாள் கேப்டன் மார்க் டைலர் சமன் செய்தவுடன் தமது இன்னிங்ஸை முடித்துக் கொண்டார். இதற்குக் காரணம் பிராட்மேன் மீது அவருக்கு இருந்த மரியாதை.

1928ம் ஆண்டிலிருந்து 1948ம் ஆண்டு வரையான இருபது வருடங் களுக்கு பந்து வீச்சாளர்களின் சிம்ம சொப்பனமாகவே இருந்திருக்கிறார்

யும் விளையாடவில்லை! (சென்னையில் நடந்த ஒரு டெஸ்டைத் தவிர!) இன்றைய ஸ்பின்னர்களுக்கு இன்னொரு டெக்னிகல் பிரச்னை இருக்கிறது.

'பேட்'டின் தரம், எடை எல்லாம் கடந்த 30 வருடங்களாக மாறிக் கொண்டே வருகிறது. பலன், அவர்கள் பந்தை ஃபிளைட் செய்தால் பேட்ஸ்மேன் எளிதாக சிக்ஸர் அடித்து விடுகிறார்கள். இதற்கு பயந்து கொண்டு இவர்கள் பந்தை 'டர்ன்' செய்யத் தயங்குகிறார்கள்.

ரஞ்சி சாம்பியனான மும்பை அணிக்கு எதிராக ஆஸ்திரேலியா விளையாடிய போட்டியில், இப்படித்தான். ஷேயின் வார்ன் ஒரு பந்தை ஃபிளைட் செய்தார். யாரோ ஊர் பேர் தெரியாத பேட்ஸ்மேன் விளாசித் தள்ளிவிட்டார், சிக்ஸருக்கு. ஷேயின் வார்ன், இரண்டு பௌன்சர்கள் போட்டு கோபத்தைத் தணித்துக் கொள்ள வேண்டியதாயிற்று!

சுதா: ஆஸ்திரேலிய அணிக்கு அவர் ஒருவரே போதும்!

மோ: அவருக்குத் தோளில் ஏதோ பிரச்னை என்று சொல்கிறார்கள். ஆனால், இன்னொரு ஸ்பின்னரான காலின் மில்லர் நன்றாக பௌல் செய்யக் கூடியவர். அவரை ஆஸ்திரேலியாவின் அனில் கும்ப்ளே என்று சொல்லுவேன்!

சிவ: இந்திய 'அ' அணி ஆஸ்திரேலியாவை எதிர்த்து விளையாடியபொழுது ஹர்பஜன் சிங்கும் சங்வியும் நன்றாக பௌல் செய்திருப்பது நமக்கு நம்பிக்கையைத் தருகிறது.

சுதா: மெக்ரா, காஸ்பரோவிச், ஃபிளெமிங் என்று, மூன்று பேஸ்-பௌலர்களை வேறு ஆஸ்திரேலிய அணி வைத்திருக்கிறது...

மோ: பேஸ்- பௌலிங்கைப் பொறுத்தவரை வயது என்பது ரொம்பவும் முக்கியம். நீங்கள் சொன்ன மூவருக்கும் வயதாகிவிட்டது. மெக்ரா, வயதையும் மீறி நன்றாக விளையாடக்கூடும் என்றாலும் இளமையான ஃபாஸ்ட் - பௌலர் இல்லாதது ஒரு குறை தான்! எனக்கென்னவோ, பிரெண்ட்லி, ஹேவர்டு போன்றவர்கள் இன்னும் உதவியாக இருந்திருப்பார்கள் என்று தோன்றுகிறது.

சிவ: இந்தியாவை எடுத்துக்கொண்டால் அஜித் அகர்கரைப் பொருத்தும், அவர் நடு ஓவர்களில் போடப் போகும் ரிவர்ஸ் - ஸ்விங்கைப் பொருத்ததும்தான் பேஸ்-அட்டாக் இருக்கும்!

சுதா: பேட்டிங் என்று வரும்பொழுது இந்தியாவின் பலம் அதிகம்தானே?

சிவ: பேட்டிங், பௌலிங், ஃபீல்டிங் என்று மூன்று டிபார்ட்மெண்ட்களாகப் பிரித்தால் இந்தியாவின் பலம் பேட்டிங்தான்!

மோ: ஆனால் ஆஸ்திரேலியாவின் பேட்டிங் 'லைன்-அப்'பில் எந்தக்

பிராட்மேன்



இந்த கிரிக்கெட் மனிதர். இவருக்கு எதிராகத்தான் 'பாடிலைன்' என்ற பந்து வீச்சு முறையை இங்கிலாந்து அணி கொண்டு வந்தது. அதையும் வெளுத்து வாங்கி இங்கிலாந்துப் பந்து வீச்சாளர்களை நொந்து போக வைத்தவர் இவர்.

இங்கிலாந்துக்கு எதிராக 1948ம் ஆண்டு தாம் ஆடிய கடைசி டெஸ்டில் நான்கு ரன்கள் எடுத்தால் தமது சராசரி நூறு ஆகும் என்ற நிலையில் டக்அவுட் ஆனார் பிராட்மேன்!

மிகவும் கூச்ச சுபாவமுள்ள பிராட்மேன், பொதுவாக யாரையும் சந்திப்பதில்லை. ஆனால் தமது தொண்ணூறாவது பிறந்த நாளில், நமது ஸ்டார் பேட்ஸ்மேன் சச்சினை அழைத்து அவர் கௌரவித்தது சச்சினுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே பெருமை.


''நீங்கள் பேட் செய்யும் போது, நான் ஆடுவது போலவே இருக்கிறது'' என்றாராம் பிராட்மேன். அதனால்தான் ''ஒரு சகாப்தத்தைச் சந்திக்கவேண்டுமென்ற என் கனவு நனவாகிவிட்டது'' என்றிருக்கிறார் இரங்கல் செய்தியில் சச்சின்.

சகாப்தங்களும் வரலாறுகளும் இறப்பதில்லைதானே?

– சலாம்ஜி

ஜெயிக்க முடியும்!

"திருச்சி அருகேயுள்ள மணச்சநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த, மூளைவாதம் பாதித்த குழந்தை கண்ணன். வாயில் எச்சில் வடியும் உணர்வுகூட இல்லாமல், கண்களையும் கால்களையும் அலைய விட்டபடி... மிகவும் ஏழ்மையான குடும்பம் வேறு. அப்போதைய கலெக்டர் சாந்தா ஷீலா நாயரிடம் இந்தக் குழந்தைக்கு என்ன வழி செய்யலாம் என்று கண்ணனின் பெற்றோர் முறையிட, கலெக்டர் இங்கு (ஸ்பாஸ்டிக் சொசைட்டி) அனுப்பி வைத்தார். மருந்து மாத்திரைகளால் குணப்படுத்த முடியாத நிலை மூளை வாதம். பெருமூளையின் மேல் பகுதி பாதிக்கப்பட்டுத் தசைகளில் இறுக்கம் காணப்படுவதால் இக் குழந்தைகள் செயல்திறன் இழந்து விடுகின்றனர். பயிற்சி மூலம் மட்டுமே இவர்களுக்கு உதவ முடியும்.



• திருச்சி ஸ்பாஸ்டிக் சொஸைடியில் பயிற்சி...

கண்ணனுக்கு ஒன்பது ஆண்டுகள் விதவிதமான பயிற்சிகளை அளித்தோம். பலன் கிடைத்தது. பிறகு ஏதாவது பணம் சம்பாதிக்க வழி செய்யுங்கள் என்றான் கண்ணன். உடல் ஊனமுற்றோர் தகுதியைப் பயன்படுத்தி சிறிய பெட்டிக்கடை வைத்துக் கொடுத்தோம். இப்போது கடைக்கு அருகிலேயே டெலிஃபோன் பூத்தும் இருக்கிறது. இரண்டையும் கண்ணன் நிர்வகித்து வருகிறான். இப்போது அவனுக்கு வயது இருபத்தி நான்கு.

ஆரம்பத்தில் அவனைப் பார்த்ததற்கும் இப்போதும் பார்ப்பதற்கும்தான் எத்தனை வித்தியாசம்!"

— *திருச்சி ஸ்பாஸ்டிக் சொஸைட்டி திட்ட மேலாளர் சி. சாந்தகுமார்.*

தொகுப்பு: **திருநாவு**

குறைச்சலும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இன்னும் சொல்லப் போனால் அவர்களுடைய பேட்டிங்கில் ஒரு கூடுதல் விசேஷம் இருக்கிறது. அவர்களுடைய முதல் ஆறு பேட்ஸ் மேன் 'சட், சட்' என்று அவுட்டாகி விட்டால்கூட அவர்களுடைய டெயில் - எண்டர்ஸ், அதாவது கடைசியில் வரும் பேட்ஸ்மேன்கள் அதற்கு ஈடு செய்வது போல் விளையாடி விடுவார்கள். பல சந்தர்ப்பங்களில் ஆஸ்திரேலிய அணிக்கு வெற்றியைத் தேடித் தந்திருப்பவர்கள் இவர்கள்தான்!

சுதா: ஆமாம்! ஆரம்ப பாட்ஸ்மேன் 100 ரன்களுக்குள் அவுட்டாகிவிடும் சந்தர்ப்பத்திலும் கூட ஆஸ்திரேலிய அணி வெற்றி அடைவதை நானும் கவனித்ததுண்டு. இந்த ஸீரீஸிலாவது காட்சுகளைக் கோட்டை விடாமல் இருப்போமா?

மோ: ஜிம்பாப்வேவுக்கு எதிராக விளையாடியபொழுதும் சரி, பங்களா தேஷுக்கு எதிராக விளையாடிய பொழுதும் சரி நம்முடைய ஃபீல்டிங் ரொம்பவே சுமார்! ஆனால் சமீபத்தில் நிறைய பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இவற்றின் உபயத்தால், ஃபீல்டிங் தரம் உயர்ந்திருக்கும் என்று நம்புவோம்!

சிவ: ஒரு நாள் போட்டிகளில் குறிப்பாக நல்ல ஃபீல்டிங் செய்யா விட்டால் 20-30 ரன்களை இழந்து விட வாய்ப்பிருக்கிறது. தோல்விக்குக் காரணமாவது இந்த ரன்கள்தான்!

மோ: எனக்கென்னவோ, ஒருநாள் போட்டிகளில் இரண்டு அணிகளுக்குமே வெற்றி வாய்ப்புச் சமமாக இருப்பதுபோல் தோன்றுகிறது. இரண்டு அணிகளும் சமமாக பேட்டிங் செய்யக் கூடியவைதான். 270-300 ரன்களுக்குக் குறையாமல் எடுப்பார்கள். முடிவு எப்படி இருந்தாலும், விறுவிறுப்பான போட்டிகளை நிச்சயம் எதிர்பார்க்கலாம்!

சுதா: டெஸ்ட் - மாட்சுகளைப் பொறுத்த வரை வெற்றி - தோல்வி நிலைமை எப்படி?

சிவ: 2-1. அதாவது இந்திய அணி இரண்டு மேட்சுகளிலும் ஆஸ்திரேலிய அணி ஒரு மேட்சிலும் ஜெயிப்பார்கள் என்பது என் ஊகம்!

மோ: என்னைக் கேட்டால் 1-1 தான் சொல்லுவேன். ஒரு மாட்ச் டிராவாக முடியும் என்று தோன்றுகிறது!

சந்திப்பு: **சிதம்பரம்**
படங்கள்: **ஸ்ரீஹரி**

இளமை இதோ, இதோ!



சென்னை டு சைனா 9

சாருகேசி

புராதனக் கலைப் பொருட்கள் விற்பனை செய்யும் ஆன்ட்டிக் ஷாப்பில் மாவோவின் சிலையைப் பார்த்தபொழுது எனக்குச் சீன இளைஞர்களைத் தான் நினைக்கத் தோன்றியது.

''சக்தியும், துடிப்பும் எழுச்சியும் கொண்ட இளைஞர்களே, காலை எட்டு

ஒன்பது மணி சூரியனின் ஒளியைப் போன்றது உங்கள் இளமை. உங்கள் மீது தான் நாங்கள் முழு நம்பிக்கை வைத்திருக்கிறோம்!" என்றார் மா சேதுங் 1957ல்.

இன்றைய சீன இளைஞர்களும், இளைஞிகளும் சக்தியும் துடிப்பும் எழுச்சியும் கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால், மாவோ சொன்ன கலாசாரப் புரட்சியை ஏற்படுத்த அல்ல, புதிய பொருளாதார புரட்சியை வரவேற்க!

எல்லோரும் அமெரிக்க யூனிவர்சிடிகளில் சேர்ந்து படிக்கத் துடிக்கிறார்கள். பெய்ஜிங்கின் நியூ ஓரியண்டல் ஸ்கூலில் இங்கிலீஷ் பேசக் கற்றுக் கொடுக்கும் வகுப்புகளில் சேர போட்டியான போட்டி. இந்த வருடம் மட்டும் நியூ ஓரியண்டல் பள்ளியில் சேர விண்ணப்பித்த மாணவ - மாணவிகளின் எண்ணிக்கை 1,50,000. இந்தப் பள்ளியின் நூறு வகுப்புகளும் நிரம்பி வழிகின்றன. இன்றைக்கு அமெரிக்க பல்கலைக் கழகங்களில் படிக்கும் எழுபது சதவிகித சீன மாணவர்கள் இந்தப் பள்ளியில் படித்தவர்கள் தானாம்.

தமிழ் மீடியத்தில்தான் படிக்க வேண்டும் என்று மேடைகளில் முழங்கி விட்டு, தம் குழந்தைகளை மட்டும் புகழ் பெற்ற ஆங்கில மீடியம் பள்ளிகளில் சேர்த்துப் படிக்க வைக்கும் நம்மூர் அரசியல்வாதிகள் இல்லையா? அதுபோல, சீன அரசியல் முக்கியப் புள்ளிகளின் மகன்களும் மகள்களும் அமெரிக்க, கனடா யூனிவர்சிடிகளில் படித்து வருகிறார்கள். (ஆனால் ஒரு வித்தியாசம் : இவர்கள் அதை வெளிப்படையாகவே சொல்லுகிறார்கள், நம்மூர் அரசியல் புள்ளிகள் இதைக் கூடுமான வரை ரகசியமாக வைத்திருக்கப் பார்க்கள்!)

வேலை வாய்ப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ள இவர்கள் சதா மேய்ந்த வண்ணம் இருப்பது இன்டர்நெட்டை. நோக்கியா, மோட்டரோலா, மைக்ரோ சாஃப்ட் முதலிய நிறுவனங்களில் வேலை வாய்ப்பு என்றால் இவர்களுக்கு ஏக குஷி! காரணம், சம்பளம். குறைந்தபட்சம் 200 அமெரிக்க டாலர்கள். அதிகபட்சம் 2500 டாலர்கள். 'பெய்ஜிங் யூத் டெய்லி' இதழில் வெளியாகும் சாதாரண விளம்பரங்களை இவர்கள் லட்சியம் பண்ணுவதில்லை.



வேலைக்குப்போக நினைக்கும் இளைஞர்கள் மட்டும் என்று இல்லை. சொந்தமாகத் தொழில் செய்ய நினைப்பவர்களும் இன்டர்நெட்டில் இரவு பகல் பாராமல் தகவல் திரட்டுகிறார்கள். இவர்களுக்கு உலகளாவிய, வணிகத் துறை பற்றிய விவரங்கள் தெரிந்திருப்பதால், சைனா, WTO எனப்படும் உலக வர்த்தக அமைப்பில் சேர்ந்துவிடும்பொழுது தங்களுக்கு அதிக முக்கியத்துவம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இவர்களுக்கு இருக்கிறது.

சீனாவின் சுமார் இருபது மில்லியன்

இன்டர்நெட் உபயோகிப்பாளர்களில் எண்பது சதவிகிதம் பேர் இந்த 18-30/35 வயது வட்டத்துக்குள் இருப்பவர்கள். வீட்டிலேயே கம்ப்யூட்டர் வைத்திருப்போர் ஒரு பக்கம் இருக்க, சைபர் கஃபேக்களும் நிறையவே இருக்கின்றன.

வேலை மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கு மட்டும்தான் இன்டர்நெட்டா? 'டேட்டிங்'க்கும் தான்.

இன்டர்நெட்டில் ஆன்லைன் டேட்டிங் ஏராளம். (டைம் நிருபர் இசபெல்லா, இன்டர்நெட்டில் தாம் சந்திக்க விரும்பும் இளைஞர்கள் குறித்து ஒரு செய்தி கொடுத்தார். 24 பேர் உடனே பதில் போட்டு விட்டார்களாம்! நாலு பேர் ஓட்டலுக்குக் கூட்டிக்கொண்டு போகத் தயார் என்று பதில் அனுப்பினார்களாம். ஓர் 25 வயது வாலிபர், 'உங்கள் புகைப்படத்தைப் பார்த்தேன். பிரமாதமாக இருக்கிறீர்கள்!' என்று கொஞ்சம் ஜொள்ளு விட்டிருக்கிறார்!')

பெய்ஜிங்கின் நியூ ஓரியண்டல் ஸ்கூலில் இங்கிலீஷ் பேசக் கற்றுக் கொடுக்கும் வகுப்புகளில் சேர போட்டியான போட்டி!

முன்பெல்லாம் ஆன்லைனில் குலாவிக் கொள்ளுவதோடு சரி. ஆனால் இப்பொழுது ஷாங்காய் நகரின் பண்ட் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மத்தியில் இளைஞர்களும் இளைஞிகளும் வெகு சரளமாக கைகோத்துக் கொண்டு 'ஸ்வீட் நத்திங்ஸ்' பேசுவது சகஜமான காட்சி ஆகிவிட்டது.

அதுமட்டும் அல்ல. கையில் மொபைல் ஃபோனுடன் மேற்கத்திய ஸ்டைலில் பார்களில் அனாயசமாக நுழைந்து, மாலை வேளைகளில் ஆட்டம் பாட்டம் என்று உல்லாசமாக இருக்கும் இளைஞர்கள் பலரை ஷாங்காய் போன்ற மெட்ரோ நகர்களில் சர்வ சாதாரணமாகப் பார்க்கலாம்.

போதை மருந்து உண்டு, பாதை தடுமாறிய சில இளைஞர்களும் உண்டு. இவர்களை அரசு மிகக் கடுமையாகக் கண்காணிக்கிறது.

ஷாங்காயின் லியோ டால்ஸ்டாய் என்று வர்ணிக்கப்படும் லூ ஸுவானின் எழுத்துக்களை, புதிய சிந்தனை என்றும் புதிய எழுத்து என்றும் புதிய சீன உருவாக்கம் என்றும் குறிப்பிடுகிறார்கள். இவர் சிறுகதைகள் தவிர, சீன வரலாறு, அரசியல் வாழ்க்கை, அறிவு ஜீவிகளின் உலகம், தாம் நேரில் கண்ட அநீதிகள் இவையெல்லாம் பற்றி எழுதியிருக்கிறார். ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன் மொழிகளில் இவரது படைப்புகள் வெளியாகி இருக்கின்றன. ஷாங்காயில், ஃபுஸோவ் சாலையில் இருக்கும் ஷாங்காய் புக் ஸ்டோரில் இவரது படைப்புகள் கிடைக்கின்றன.

ஆனால் இரண்டு இளம் பெண் எழுத்தாளர்கள் இப்போது போட்டுக் கொள்ளும் இலக்கியச் சண்டைதான் பிரபலமாக இருக்கிறது. மியான் மியான் (வயது 29), வீ ஹுய் (வயது 27) இரண்டு பேருக்கும் இடையில், யார் சீனாவில் கிளுகிளுப்பான நாவல்களைப் படைப்பதில் ராணி என்று போட்டி. (இந்த ஆண்டு நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் சீனர்தான். அவர் பெயர்கூட இத்தனை தூரம் அடிபட்டதா என்று தெரியவில்லை!)

சீன மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் இளைய தலைமுறையினர். 24 வயதுக்கு உட்பட்டவர்கள். சுமார் பதினோரு ஆண்டுகளுக்கு முன் தங்கள் எதிர்ப்பை எல்லாம் டியனான்மன் சதுக்கத்தில் காண்பித்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள். முந்தைய தலைமுறைக்கு மறுக்கப்பட்ட பொருளாதாரச் சுதந்தரங்கள், சிந்தனை - கலாசாரச் சுதந்தரங்கள் தங்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உறுதியோடு இருப்பவர்கள்.

இவர்கள் வாழ்க்கையில் வர்ணங்கள் தெரிகின்றன. மாற்றங்கள் தெரிகின்றன. அவர்கள் எதிர்காணும் புதிய சீனம் அவர்கள் கைவசம் ஆகும் என்றால் அதற்காக அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் உழைக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

(அடுத்த வாரம்)



கெடைச் சோறு

இந்த முறை எப்படியாவது ருசித்து விட வேண்டும் என்பதில் குறியாய் இருந்தேன். இப்படியிருக்குமோ அப்படியிருக்குமோ என்று எப்படியெல்லாமோ கற்பனை செய்தேன். 'அதெல்லாம் இல்லடா, இது வேற மாதிரி' என்று நண்பன் பேப்பர் ராமசாமி சொன்னதும் நாக்கில் எச்சில் சொட்டியது.

எந்த வேலையைச் செய்தாலும் அல்லது சாப்பிடும்போதும் சதா அதன் ஞாபகம். 'என்னாச்சு எனக்கு?' என்று என்னை நானே கேட்டுக் கொள்ள வேண்டி வந்தது பல முறை. இருந்தாலும் அதன் மீதான ஒரு ஈர்ப்புக்கு நெய்வீசை தாத்தாவுக்கும், நம்பியார் தாத்தாவுக்கும் முக்கியப்பங்கு உண்டு.

வேலு டீக்கடையில் ஓசி பேப்பர் படித்துக் கொண்டே பாலில்லா டீயைக் குடித்தபோது ஆரம்பித்தார் நெய்வீசை.

"ஏல சீதை மவனே... இப்படி பாலில்லாத டீயைக் குடிக்கிறியே... ஏதாவது பத்தியமா?

"இல்லை பெரிசு" என்று நான் ஆரம்பிக்க எங்கெங்கோ பேச்சு வளர்ந்து கடைசியில் அதில் வந்து முடிந்தது. கெடைச் சோறு!

"என்னதான் உங்காத்தா சோறு பொங்கி போட்டாலும் அது மாதிரி வராதுல. பானை நெறைய அரிசியைப் போட்டு கன்னுனு கொதிச்சதும், கடுதண்ணியோட சோத்து வாசனை அள்ள, காய்கறியை மொத்தமா போட்ட குழம்போட... அவனுங்க கைப் பக்குவம் சேர அடஅடஅட. அந்த காத்து, மரம் அசையற ஓசை, தாழைகள்ல இருந்து வர்ற தாழம்பூ மணம், பனை ஓலை பட்டையிலிருந்து வர்ற பச்சை வாசத்தோட... வாயில வச்சுக் குடிச்சு, குழம்பைத் தொட்டுகிட்டா... அடபோடா போக்கத்தப் பயலே... உனக்கு என்ன தெரியும்?"

கெடைச் சோறு பற்றி நானும் கேள்விபட்டிருக்கிறேன். எங்கள் முக்குறுணி விதைப் பாட்டுக்கு உரம்போட ஆட்டுக்கெடை வந்திருக்கிறது. எங்கள் வயலின் ஓரத்தில் இருக்கும் தென்னை மரத்தினடியில் கெடைக்

காரர்கள் பொங்கும் சோறு பற்றி எனக்கு அவ்வளவு அபிப் ராயமில்லை. சோற்றைப் பொங்கி வடிக்காமல் பனை ஓலைப் பட்டையில் ஊற்றி ஆட்டுச் சாணங்களுக்கிடையே உட்கார்ந்து அவர்கள் சாப்பிடுவது எனக்கு ஒரு பெரிய விஷயமாகத் தெரியவில்லை. எல்லாவற்றுக்கும் மேல் கெடைக்காரர் களுடனிருந்த கூனையன்! எப்பொழுது பார்த்தாலும் பீடியை இழுத்து இழுத்து புளிச் புளிச்சென்று துப்பிக் கொண்டு- எனக்கு அது ஒரு அருவருப்பைத்தான் தந்திருக்கிறது.

ஆனால் அது அவ்வளவு ருசியானது என்பது பற்றி இந்தப் பெரிசுகளுக்குப் பிறகு கசமுத்து மாமாவும் மாடத்திப் பாட்டியும் சொன்னபோது அதிலேயே லயித்தது மனம். மூன்று பூக்களாய் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு காரணத்தால் எனக்கு அந்தச் சோறு கிடைக்காமலேயே போய்விடுகிறது.

போனமுறை கொடலு வயலில் கெடை போட்டிருப்ப





ஏக்நாத் ராஜ் .செ.

தாக நண்பன் சொன்னதும் ஆசை ஆசையாய்ப் போவதற்குத் திட்டம் போட்டேன். அடுத்த சில மணி நேரத்திலேயே பெரியாச்சி மூச்சுப் பேச்சற்று விழுந்து கிடந்த தாய் தகவல் வந்து, ஆஸ்பத்திரிக்கு ஓடி, ஏதேதோ நோய்களை டாக்டர் சொல்ல ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாய் ஒரு மாதம் அலைந்ததில் கெடைச் சோறு கனவு கலைந்தது.

'எது ஒன்று கிடைக்காமல் போகுமோ அதன் மீதுதான் ஆசை அதிகமாகும்' என்று யாரோ சொன்னது போல அலையாய் அலைந்தேன்.

'வயல்ல கெடை போட்டீங்கன்னா கொஞ்சம் சொல்லுங்க' என்று தெரிந்தவர்களிடம் சொன்னபோது அவர்கள் வேடிக்கையாகத்தான் பார்த்தார்கள். "என்ன இந்தக் கேனப்பய கெடைச் சோறுக்கு இந்த அலை அலையறான்" என்று மனத்துக்குள் நினைத்திருக்கக் கூடும்.

யாரும் எதையும் நினைக்கட்டும். என்னை இவ்வளவு பாடாய்ப்படுத்தும் அந்தச் சோறில் அப்படி என்னதான் இருக்கிறதென்று பார்த்துவிட வேண்டும் என்று முடிவு கட்டினேன்.

இந்த விஷயம் குறித்து நான் ஒரு முடிவோடு இருப்பதால் நண்பர்கள் என்னை ஒரு மாதிரி பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். இந்தப் பார்வை பிறகு 'கெடைச் சோறு' என்ற பட்டப் பெயரையே எனக்குத் தந்துவிட்டது. என் நண்பர்கள் மட்டுமின்றி மாமன் மகள்கள் கூட இந்தப் பெயரைச் சொல்லிக் கூப்பிட ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் இதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை நான்.

நீண்ட நாள் ஏக்கம் இப்போது... இன்னும் சில நிமிடங்களில் நிறைவேறப் போகிறது!

அம்மன் கோயில் வாய்க்காலில் குளித்துக் கொண்டிருந்தபோது பேப்பர் ராமசாமி சொன்னான்- "உன் ஆசை நிறைவேறப் போதுல."

முக்குறுணி விதப்பாட்டில் பத்து கோட்டை நெல் விளைந்த சந்தோஷம் எனக்கு. மூக்கைப் பொத்திக் கொண்டு சந்தோஷமாய் ஒரு முங்கு முங்கி எழுந்தேன் ஆத்மதிருப்தியோடு. வாய்க்காலுக்கு அருகில் இருக்கும் வடக்குவா செல்வி அம்மனுக்குச் சிறப்பு நன்றி சொல்லிவிட்டு, 'ராமசாமி எப்ப போவலாம்?' என்றேன்.

"கண்ட நேரத்துலயெல்லாம் போக முடியாதுல. எங்க சித்தப்பா வயல்லதான் போட்டிருக்காங்க. நான் போய் நமக்கும் சேர்த்து சோறு பொங்கச் சொல்லிட்டு வந்துருதேன். ராத்திரி எட்டு மணிக்கு மேல போவலாம்" என்றான்.

உள்ளம் துள்ளியது. நடந்தோம். ஆற்று ஓர வயலுக்கு அரை மைல். நீண்ட நாள் ஏக்கம் இப்போது... இன்னும் சில நிமிடங்களில் தீரப் போகிறது. ஒவ்வொரு வயலாய் கடந்து செல்ல செல்ல பேப்பர் ராமசாமி, 'கெடைச் சோறு' பற்றித் தன் அனுபவங்களைச் சொல்லிக் கொண்டு வந்தான். பின் பக்கமிருந்து ஏதோ ஒரு குரல் கேட்டுக் கொண்டே வந்தது. சரியாய்க் காதில் விழவில்லை.

வயலுக்குப் போய்ச் சேர்ந்தபோது வியர்த்து விறுவிறுத்திருந்தது. எங்களை எதிர்பார்த்திருந்தவர்கள் வரவேற்றார்கள். நண்பனின் சித்தப்பா, கையில் சோறுடன் 'வாங்க மருமவனே' என்றார் என்னை. நான் சிரித்துக் கொண்டே பக்கத்தில் ஓடிய ஓடையில் கைகால்களைக் கழுவி விட்டு உட்கார்ந்தேன். தூரத்தில் பெரிய கூடுக்குள் அடைபட்டுக் கிடக்கும் ஆடுகளின் 'ம்மே' சப்தம். சின்னதாக ஏதோ ஒரு வாடை மூக்கைச் சுளிக்க வைத்தது. நன்றாகத் தயார் செய்யப்பட்டிருந்த பனை ஓலை பட்டையில் எனக்குச் சோறு ஊற்றிக் கொண்டே, "நான் உங்களுக்குத் தூரத்துச் சொந்தம். கல்லிடைக்குறிச்சியில இருக்கிற..." என்று ஆரம்பித்து பேசிக் கொண்டே இருந்தான் கெடைக்காரர்களில் ஒருவன். அதில் எதுவும் எனக்குக் காதில் விழவில்லை. என் கவனம் முழுவதும் கெடைச் சோறில். வெந்த சோறும் கலவை காய்களும் மணக்க மணக்க.. மூச்சை உள்ளிழுத்தபோது, வாசனை விரல் நுனிகள் வரையிலும் பரவுவதுபோல் தோன்றிற்று. உடல் முழுவதும் ஒருவித கறுகறுப்பு. கைகள் இலேசாக் ஆடின. உதட்டைக் குவித்துச் சோற்றை வாயில் வைக்கப் போனபோது பின்னாலிருந்து மூச்சிரைக்க என் தம்பியின் அழுகுரல்.

"ஏல, சித்தி செத்துட்டா....வா...!" ○

முகுந்தன்



தியாகு வெகு மும்முரமாக ஏதோ எழுதிக் கொண்டிருந்தான்.

''ஆபீசுக்கு நேரமாச்சு... இன்னும் குளிக்கப் போகல்லியா?'' என்று கேட்டாள் சரோஜா.

வாயைத் திறக்காமலே 'பொறு' என்று ஜாடை காட்டினான்.

. மேலும் பத்து நிமிடம் ஓடியது.

''நாழியாகிறதே!... இன்னிக்கு ஆபீஸ் போகிற உத்தேசமில்லையா?''

பக்கத்தில் மனைவி வந்து நின்றதும், எழுதிக் கொண்டிருந்ததை ஆங்கில தினசரியால் மூடி மறைத்தான். நிமிர்ந்தான். அசட்டுச் சிரிப்பு உதிர்த்தான்.

''நானும் நாலைந்து நாளாகப் பார்க்கிறேன். நேரம் கிடைக்கிறபோதெல்லாம் ஏதோ எழுதிக் கொண்டே இருக்கிறீர்களே! அப்படி என்னதான் எழுதியாகிறது? ரொம்ப ரகசியமோ?''

தியாகு அந்தக் காகிதக் கற்றையை மேஜை டிராயரில் போட்டு, உள்ளே தள்ளி, பூட்டினான்.

''சொல்ல மாட்டீர்களாக்கும்! கத்திரிக்காய் முற்றினால் கடைக்கு வந்துதானே ஆகணும்!''

''முற்றுகிற வரை பொறுமையாகத்தான் இரேன் என் சரோஜாவே!'' என்றவாறு எழுந்து குளிக்கப் போனான் தியாகு.

சரோஜாவுக்கு மண்டைக் குடைச்சல், அப்படி என்னதான் எழுதுகிறார்?

சிறுகதை? நாவல்? இருக்காது. கற்பனைக்கும் இவருக்கும் குறைந்த பட்சம் பத்து கிலோ மீட்டர் தூரமாவது இருக்கும்.

சுயசரிதமாக இருக்குமோ? கல்லூரி நாட்களில் சாப்பாட்டுப் போட்டியில் ஒரு

பிரசாதம்

நிமிஷத்தில் இருபத்தேழு இட்லிகளை விழுங்கியது தவிர வேறு ஒரு சாதனையும் இவர் செய்ததில்லையே?

பெண்கள் புத்திசாலிகள். அதிலும் சரோஜா அதிபுத்திசாலி. எனவே தியாகு மேஜைமீது வீசிவிட்டுப் போயிருந்த சாவியைக் கொண்டு டிராயரைத் திறந்து காகிதங்களை எடுத்து அவசரமாகப் புரட்டிப் பார்த்தாள்.

"ஸ்ரீராமஜெயம்."

எல்லா பக்கங்களிலும் இதுவே.

அதன் பின்னர் சரோஜா கணவனிடம் 'எழுத்துப் பணி' பற்றிக் கேட்கவுமில்லை. தனக்குத் தெரிந்து விட்டதாகக் காட்டிக் கொள்ளவுமில்லை.

ஏழு மாதங்களுக்குப் பின்னர் ஒரு நாள் ராத்திரி சரோஜா மெகாசீரியல் பார்த்துக் கொண்டிருந்த போது தியாகுவே அவளிடம் பேசினான்.

"சரோ! ஒரு குட் நியூஸ்... தவம் போல ஒரு முயற்சி எடுத்தேன்... இப்பத்தான் முடித்தேன்..."

"தவமா?"

"ஆமாம். ஒரு லட்சம் 'ஸ்ரீராம ஜெயம்' எழுதுவது...! அப்பாடி.!"

இரண்டு நிமிடங்களில் சீரியல் முடிந்து விடவே, "கங்கிராட்ஸ்!... என்ன திடீர்னு பக்திப் பிரவாகம்?" என்று உண்மையான அக்கறையுடன் விசாரித்தாள்.

பிரபல மடாதிபதி ஒருவர் இது போல ஒரு லட்சம் 'ஸ்ரீராமஜெயம்' எழுதுபவர்களுக்குத் தங்கக் காசு கொடுத்து ஆசீர்வதிப்பாராம். அந்தத் தகவலைத் தெரிவித்தான் தியாகு.

"நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அது குழந்தைகளுக்குத்தான். உங்களைப் போன்ற டாகடுட் மாவுக்கு அல்ல!"

"டாகடுட்மாவா நீ என்ன சொல்றே?"

"எழுத்துக்களை மாற்றிப் போட்டுப் பாருங்க, புரியும்!"

சரோஜா எழுந்து போய் சமையல் அறையில் மாவடு நிறைந்த பீங்கான் ஜாடியை எடுத்துக் குலுக்கத் தொடங்கினாள்.

மூன்று நிமிஷம் மூளையைக் கசக்கிக் கொண்டதில் சரோஜா சொன்னது அவனுக்குப் புரிந்தது. லேசாகக் கோபம் வந்தது. முறைப்பாக ஒரு 'லுக்' விட்டான்.

"முறைக்காதீங்க! இத்



தனை மாசமா வாக்கிங், ஜாகிங் எல்லாத்தையும் விட்டுட்டு உட்கார்ந்து எழுதினீங்க... உடம்பு எப்படி ஊதிப் போயிட்டுதுன்னு கண்ணாடியிலே பார்த்துக்குங்க!"

"பெரிய கண்ணாடிக்கு எங்க போவது? நம்ம கல்யாணத்தின்போது கண்ணாடி வச்ச பீரோ வேணும்னு கேட்டேன். உங்கப்பா சாதாரண ஸ்டீல் பீரோவும் முகம் பார்க்கிற கையகலக் கண்ணாடியும் வாங்கித் தந்து ஏமாத்திட்டார்!"

தன் அப்பாவைப் பற்றிச் சொன்னால் எந்தப் பெண்ணுக்கும் கோபம் வரத்தான் செய்யும். சரோஜாவுக்குக் கோபம் வந்தால் கையில் என்ன பொருள் இருக்கிறதோ அதைத் தரையில் வீசி எறிவதுதான் தொட்டில் பழக்கம்.

இப்போதும் அதையே செய்தாள். பீங்கான் ஜாடி 'ஜிலிங்!' என்ற சப்தத்துடன் கீழே விழுந்து நொறுங்க, மாவடுக்கள் எண்ணெய்ப் பளபளப்புடன் ஸ்பார்டெக் தரையில் பரவி, கோலம் போட்டன.

ஆபீசில் நண்பர்களிடம் தனது 'லட்சம்' சாதனை பற்றிச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டான் தியாகு.

"அடுத்த வாரம் மடத்துக்குப் போய், கொடுத்துவிட்டு வரலாமென்றிருக்கிறேன்..."

"நோட்புக்குலதானே எழுதியிருக்கே?"

"இல்லே... தனித்தனி பேப்பர்கள்லே. கையிலே எந்த சைஸ் பேப்பர் கிடைக்கிறதோ அதிலே எழுதுவேன்... எல்லாத்தையும் ட்வைன் போட்டுக் கட்டி, அப்படியே கொண்டு போய்ப் போட்டுவிட வேண்டியதுதான்!"

"போடா முட்டாள்! லூஸ்-ஷீட்களை எடுத்துக் கொண்டு போனால் உன்னையும் லூஸ் என்று நினைப்பார்கள்!"

"அப்ப என்ன பண்ணணுங்கறே?"

"பைண்ட் பண்ணி எடுத்துண்டு போ, சௌகரியத்துக்குச் சௌகரியம், கௌரவத்துக்குக் கௌரவம்!"

"அவ்வண்ணமே யானும் கோருகிறேன்!" என்று வீட்டில் வழிமொழிந்தாள் சரோஜா.

"பைண்ட் பண்ண ஆளைத் தேடணுமே சரோ!"

"இந்த லேக்வியூ ரோடு கோடியிலே ஒரு அச்சாபீஸ் இருக்கு... அங்கே கேட்டுப் பாருங்க!"

"நம்ம கூட்டணி கட்சிகளுக்கு இஷ்டத்துக்கு தொகுதியைப் பிரிச்சுக் கொடுக்க வேண்டாம்னு சொன்னேனே, கேட்டீங்களா?"

"ஏன்? இப்ப என்னாச்சு?"

"கூட்டிப் பார்த்தா ஐநூற்றி நாற்பது தொகுதி வருது!"

– கொங்கணாபுரம் வே. செந்தில்

அத்தனை காகிதங்களையும் கட்டுக் கட்டாக்கி ஒரு சைக்கிள்-ரிக்ஷாவில் வைத்து அங்கே கொண்டு போனான்.

"பழைய பேப்பர் கடை நாலு கடை தள்ளி இருக்குதுங்கோ!" என்றார் நீல முண்டா பனியன் அணிந்திருந்த அச்சக உரிமையாளர்.

"ஹிஹி... இது பழைய பேப்பர் இல்லே... பைண்ட் செய்யணும்!"

ஒவ்வொரு கட்டாக எடுத்துப் பார்த்தார். "ஒவ்வொண்ணும் ஒரு சைஸ்லே இருக்குதுங்களே!"

"எல்லாத்தையும் சேர்த்துப் பைண்ட் பண்ணணும்!"

அந்த ஆள் உதட்டைப் பிதுக்கினார்.

"செய்யலாம்ங்க... ஆனா இப்ப நமக்கு வேலை அதிகம்... ரெண்டு மாசமாகும். பரவாயில்லையா?"

"நோ நோ... ரெண்டு மூணு நாள்லே வேணும்... ஞாயிற்றுக்கிழமை மடத்துக்கு எடுத்துட்டுப் போகணும்..."

"அப்ப ஒண்ணு செய்யுங்க.. கோடம்பாக்கத்துலே என் சகலை பிரஸ் வச்சிருக்கார். அவர் என்னைவிட நல்லா பண்ணித் தருவார்..."

அந்த விலாசத்தை வாங்கிக் கொண்டு விரைந்தான்.

ஒரு சின்னத் தெருவிலிருந்து கிளைத்த படு சிறிய சந்தில்(பொந்தில்?) சின்னஞ்சிறு வாசலுடன் கூடிய 'கேடி பிரிண்டர்ஸ்' வாசலில் போய் நின்றான் தியாகு.

வெள்ளை வேட்டியும் வெற்று மார்புமாக இருந்த ஒரு கொத்தவரங்காய்ப் பேர்வழி, "என்னங்க வேணும்?" என்று கேட்டார்.

"உங்க சகலை அனுப்பினார்..."

"அந்த சோம்பேரியா? அவனுக்கும் எனக்கும் ஆறு வருசமா பேச்சுவார்த்தை இல்லை... காரணம் இன்னான்னா..."

'இன்னா'தென்று தெரிந்து கொள்ள



ஆசை இருந்தாலும் நேரமில்லை தியாகுவுக்கு.

எனவே விஷயத்தைச் சுருக்-விளக்.

"இப்ப ஸ்கூல்-புக்ஸ் நிறைய வந்திருக்குது... அதுங்களை ஓரங்கட்டிட்டு இதைச் செய்யோணும்!"

"ஆமாம். செய்யோணும். எத்தினி நாள் வோணும்?" என்று அவரது அலைவரிசைக்கு மாறினான்.

"மூணே நாள்!"

"துட்டு எவ்வளவு வோணும்?"

"குடேன்... முந்நூறு ரூபா!"

"அம்மாடியோவ்!"

"அல்லாத்தையும் சைஸ்-வாரியா பிரிக்கோணும்... தையல் போடோணும்... கலிக்கோ ஒட்டோணும்... மார்பிள்-பேப்பர் பதிக்கோணும்!"

"எனக்கு நல்லா வோணும்!"

பிசுகிப் பிசுகி நூற்றெண்பது ரூபாய்க்கு ஒப்புக் கொள்ள வைத்து, நூறு ரூபாயை அட்வான்ஸாக அவன் கொடுத்ததும், அச்சக உரிமையாளரே அந்தக் கட்டுகளைத் தூக்கி 'பொதேர், பொதேர்!' என்று அழுக்குத் தரையில் வீசினார்.

"பார்த்து! பார்த்து! ஏதாவது பேப்பர் மிஸ்ஸாயிடப் போகுது!"

"உனக்கு அந்தக் கவலையே வோணாம்... நம்ம பைண்டிங்ல ஒரு காயிதம் அதிகமாக வச்சாலும் வப்போமே கண்டி, தூக்கிக் கடாசிர மாட்டோம்!"

குறிப்பிட்ட தினத்தன்று ஆபீசுக்குப் போகும்போது கோடம்பாக்கம் சென்றான் தியாகு. பிரஸ் பூட்டியிருந்தது. பக்கத்து சைக்கிள் கடைக்காரர், "அந்தாளு பதினோரு மணி வரைக்கும் மப்புலே இருப்பாரு. நீங்க சாயந்தரமா வந்து பாருங்க... ஓனர் இருப்பாரு!" என்று தகவல் கொடுத்தார்.

சாயந்தரமும் பூட்டுதான் அவனைப் பார்த்துச் சிரித்தது. இப்படியே இரண்டு நாள் அலைக்கழிக்கப்பட்டதும் தியாகுவைக் கவலை பிடித்துக் கொண்டது.

மூன்றாம் நாள் மாலை அச்சகம் திறந்திருக்க, திறந்த மார்புடன் டப்பாக்கட்டு தாரியாகப் பீடி 'வலித்து'க் கொண்டிருந்தார் பிரஸ்காரர்.

"என்னாங்க! பைண்ட் பண்ணிட்டீங்களா?"

"அது எப்பவோ ஆயிடுச்சுங்க... அவனோ களவாணிப் பய ராத்திரிலே நுழைஞ்சு கேஸ்லே இருந்த டைப்பெல்லாம் அள்ளிகினு பூட்டான்... அதான் போலீஸ் டேசனுக்கும் வூட்டுக்குமா அல்லாடினு கிறேன்..."

"கேஸா? என்ன கேஸ்? என்ன டைப்?" என்று கேட்டான் அச்சக அகராதி அறிந்திராத தியாகு.

"கிரிமினல் கேஸ்தான். எப்.ஐ.ஆர். போட்டாச்சு. எனக்கென்னவோ, இந்தப் பேட்டையிலே ராஜாபாதர்னு ஒரு ரவுடி கிறான்; அவன் மேலதான் சந்தேகம்..."

"அப்படியா?"- இது அநாவசியக் கேள்வி.

"அவன் தங்கச்சிக்கு மஞ்சள் நீராட்டு விழான்னு நூறு நோட்டீஸ் அடிக்கணும்னு வந்தான். துட்டு கேட்டா கத்தியைக் காட்ற கஸ்மாலம் அவன். 'முடியாதுடா நாயே!'ன்னு வெரட்டிப்புட்டேன்... அதான் பளி வாங்கிட்டான்... நீ இன்னா நினைக்கிறே?"

அவன் முகத்தில் அவர் விட்ட புகையையும் 'நீ' போட்டுப் பேசியதையும் ரசிக்காத தியாகு மீதிப் பணம் எண்பது ரூபாயை எண்ணிக் கொடுத்து, 'பைண்ட்' செய்யப்பட்டவற்றைப் பெற்றுக் கொண்டான்.

ஆவலுடன் புரட்டியவன் அலறினான்: "அச்சச்சோ! என்னங்க இது நடுநடுவிலே கலர் கலரா ஏதோ காகிதம்?"

"அதுவா? நம்ம பிரஸ்லே அடிச்ச பிட்நோட்டீஸ்ங்க... கயிதைங்க அ(த்)தையும் சேர்த்து வச்சு பைண்ட் பண்ணிட்டாங்களாங்காட்டியும்! நான்தான் சொன்னேனே அதிகப்படியா இருக்குமே கண்டி..."

"அதுக்காக ஆண்மைக் குறைவு லேகியம், சொறி-சிரங்கு, படை மருந்து-இந்தக் கண்ணராவி சமாசாரங்களையா வைப்பது..."

"வச்ச மூதேவிங்களை நான் கண்டிக்கிறேன்.... நீ போ நைனா!"

"ஐயையோ! ஐயையோ! ஐய்...."

"என்னாங்க... வௌக்கு வக்கிற நேரத்திலே அபசகுணமா கூவுறீங்களே!"

"அநியாயம் பண்ணிட்டீங்களே!"

" த பாரு.. இன்னா எழவு விஷயம்னு சொல்லோணும்... எனக்குப் புரியோணு மில்லே...?"


"பேப்பருங்க நான் அடுக்கிக் கொடுத்த வரிசைப்படி இல்லே... நம்பரெல்லாம் முன்னே பின்னே மாறியிருக்கு..."

''சைஸ்வாரியா அடுக்கினால் அப்படித்தான் ஆவும்...''

'' 'ஸ்ரீராமஜெயம்'கிறதுலே நிறையத் தாள்கள்லே 'ஸ்ரீ ராமஜ', 'மஜயம்'னு இருக்கு...''

"முதல்லே சொன்னியே-அது கட்டிங்லே போயிருக்கும். அப்பாலே சொன்னது முகுதுலே மறைஞ்சிருக்கும்."

'கட்டிங்' புரிந்தது. 'முதுகு' பற்றி விசாரிப்பதற்குள் அச்சாபீஸ் கத வைப் பூட்டி, பக்கத்து சைக்கிள் கடைக்காரரிடம் ''அந் தோணி வந்தா தேவகி ஒயின்ஸ்"க்கு வரச் சொல்லு தம்பி!" என்று கூறி சைக்கிளில் தாவி ஏறி, போயே போய் விட்டார் 'கே.டி.' என்கிற கே. துரைசாமி.



ஆசாரியர் எப் போதும் போல ஆனந்த மயமாக, சிரித்த முகத்துடன் எல்லாருக்கும் ஆசி வழங்கிக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்தாலே பசி, தாகம் எல்லாம் பறந்து போய் விடும் என்று தோன்றியது தியாகுவுக்கு.

பைண்ட் செய்யப்பட்டவற்றை அவர் முன் வைத்து விழுந்து வணங்கினான். தன்னைப் பற்றிய விவரம் சொன்னான்.

"நாராயணா!" என்றவர், "என்னது இது?" என்று கேட்டார்.

" 'ஸ்ரீராமஜெயம்' எழுதியிருக்கேன்... ஒரு லட்சம் தரம்!"

"உத்தமமான விஷயம்!"

மீண்டும் புன்சிரிப்பு. பிரசாதத்துடன் குண்டு ஆப்பிள் ஒன்றையும் தட்டில் வைத்து அவன் பக்கம் தள்ள, எடுத்துக் கொண்டான்.

ஆப்பிள் மட்டும்தானா! தங்கக் காசு? கேட்கக் கூச்சமாக இருந்தது.

அருகிலிருந்த காரியஸ்தரிடம் ஆசாரியரே பேசினார். "இவாளுக்கு ஒரு காசு கொடுத்தனுப்பு!"

மனசு நிறைந்....

"தங்கக் காசு தீர்ந்து போச்சு.. ஆசாரி கிட்ட சொல்லியிருக்கு..." என்றார் காரியஸ்தர் கைகட்டி, வாய்புதைத்து.

"அடுத்த வாரம் வந்துடுமோல்லியோ?"

"வந்துடும்!"

''அப்படீன்னா அடுத்த வாரம் நீ வாயேன்... இன்னொரு தரம் ஸ்வாமியைத் தரிசனம் பண்ற புண்யமும் கிடைக்கும்...''

ஏமாற்றத்தை விழுங்கிக் கொண்டு புறப் பட்டான் தியாகு. 'அடுத்த வாரம் நிச்சய மாகக் காசு கிடைக்குமா? நம்மை அந்தக் காரியஸ்தர் நினைவு வைத்திருப்பாரா?' என ஏகப்பட்ட மனப் பிராண்டல்கள்.

சரோஜா வேறு, வழியெல்லாம் கிண்டல் பண்ணி எரிச்சல் மூட்டினாள். "காசு காசுன்னு பறக்கக் கூடாது... உங்க கடமையை நீங்க செய் யணும்; பலனை எதிர் பார்க்கக் கூடாது..."

''சரி கிருஷ்ண சரோச்சா!"- பற்களை நற நறத்தான்.

அடுத்த வாரம் சென்றபோது மடத்தில் ஏதோ விசேஷம். பக்தர் கள் கூட்டம் அலை மோதியது. எப்படியோ முண்டியடித்து, ஆசாரியரைத் தரிசித்து, வணங்கி எழுந்தான்.

''நீ ஒரு லட்சம் ராமநாமா எழுதினவன் இல்லையோ?'' என்றார் ஞாபகம் வைத்துக் கொண்டு. "யாரங்கே?... இவருக்கு ஒரு தங்கக் காசு கொடுத்து அனுப்பு!"

அடுத்த ஐந்தாவது நிமிடம் சிவப்பு வண்ண வெங்காயச் சருகுத் தாளில் பள பளக்கும் தங்கக் காசைக் கையில் வாங்கிக் கொண்ட பிறகுதான் 'அப்பாடா!' என்றிருந்தது.

"ஒரு நிமிஷம்..."

பகீரென்றது தியாகுவுக்கு. புலவர் தருமியைத் தடுத்த நக்கீரர் போல இவர் ஏன் அழைக்கிறார்?

காரியஸ்தர் பேசினார்.

"நன்னா, அழகா பைண்ட் பண்ணிக் கொடுத்திருக்கேள். சந்தோஷம். பைண்ட் பண்ணாமல் ஷீட் ஷீட்டாகக் கொடுத்திருந் தால் பிரசாதம் மடித்துக் கொடுக்க வசதி யாக இருந்திருக்கும்!..."

நடக்குமென்பார்

பிப்ரவரி 7 முதல் 13 வரை

மேஷம்

இந்த வாரம் ஜமாய்க்கப் போறீங்க. உங்க மதிப்பு, அந்தஸ்து உயரப் போகுது. புதிய பதவி, பொறுப்புகள் தேடி வரும். வியாபாரம் பண்றவங்களுக்கெல்லாம் இது செழிப்பான வாரம். கலைத் துறையைச் சேர்ந்தவங்க பாராட்டு மழைல நனையப் போறீங்க. குடும்பத்துல மனசுக்கு இனிமையான சந்தர்ப்பம் ஏற்படப் போகுது. பணப் பிரச்னை இருக்காது. பல இடங்கள்லயிருந்து வந்து பையை நிரப்பும்.

ரிஷபம்

உங்களோட புத்திசாலித்தனம், திறமையெல்லாம் வெளிப்படப்போகுது. உங்களால நண்பர்களும், குடும்பத்துல உள்ளவங்களும் பயனடையப் போறாங்க. புதிய பதவி ஒண்ணு உங்களுக்காகக் காத்திட்டிருக்கு. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்கெல்லாம் தங்கள் எண்ணம் நிறைவேறும். மாணவர்கள், பெண்களுக்கு இது உற்சாகமான வாரம். எதிர்ப்புகள் குறையும். எதிரிகள் ஓடி ஒளிவாங்க. புதுசானவங்க கிட்ட பழகும்போது எச்சரிக்கையா இருங்க. ஜாக்கிரதை!

மிதுனம்

வெளிநாட்டுலயிருந்து நல்ல செய்தி வந்து கதவைத் தட்டப் போகுது. மாணவர்கள் தங்கள் திறமைக்கு ஏற்ப முன்னேறுவாங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு இது அனுகூலமான வாரம். பண விஷயம் கொஞ்சம் இழுபறியில இருக்கும். எதிர்பாராம திடீர் செலவுகள் வரலாம். ஜாக்கிரதை! ஆடம்பர செலவுகளைத் தவிர்த்திடறது நல்லது. யார்ட்டயும் கடுமையா நடந்துக்காதீங்க. புதிய முயற்சிகளைக் கொஞ்சம் தள்ளிப் போடறது நல்லது. கணவன் மனைவி உறவில் சின்னச் சின்ன சலசலப்பு வரும். விட்டுக் கொடுத்துப் போறது நல்லது. எதிலயும் பதற்றப் படாதீங்க.

கடகம்

நீங்க நினைத்த விஷயங்கள் இப்ப நடக்கப் போகுது. பண விஷயத்துல பஞ்சமில்லை. சிலர் வெளிநாட்டுக்குப் பயணம் போவாங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு இது செழிப்பான வாரம். எதிரிகள் ஓடிப் போயிடுவாங்க. வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமா திருப்பம் வரும். வேலை இல்லாதவங்களுக்கு இப்ப வேலை கிடைக்க வாய்ப்பிருக்கு. உடல் நலன்ல கவனம் வையுங்க. அரசியல்வாதிகள் பொறுப்போட அறிக்கை விட்டால்/பேசினால் பிரச்னைகள்ல இருந்து தப்பிக்கலாம்.

சிம்மம்

குடும்பத்துல மகிழ்ச்சிக்குப் பஞ்சம் இருக்காது. புதியவங்களை நம்பி எதிலயும் ஈடுபட வேண்டாம். அலைச்சல் அதிகமாகும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள்ள இருந்த சின்னச் சின்னப் பிரச்னைகள் இப்போ போயிடும். ஏற்றுமதி இறக்குமதி பண்றவங்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். மனசுல குழப்பம், சஞ்சலம் இருந்துட்டே இருக்கும். கவலைப்படாதீங்க.

கன்னி

உங்கள் எண்ணங்கள் ஆசைகள் நிறைவேறப் போகுது. எடுத்த காரியத்தைத் திறமையா செய்து வெற்றி காண்பீங்க. எதிரிகள் விலகிப் போவாங்க. போட்டி, பந்தயம், கோர்ட் விவகாரங்கள்ல வெற்றி தேடி வரும். வியாபாரிகள் வளர்ச்சியடைவாங்க. சிலருக்குப் பதவி, சம்பள உயர்வு இருக்கும். திருமணமாகாதவங்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் வரப் போகுது. வெளிநாட்டுலயிருந்து நல்ல செய்தி வரும். பண நடமாட்டம் திருப்தியா இருக்கும். அலைச்சலைத் தவிர்த்திடுங்க.

நடக்கும்

துலாம்

எதிலயும் பதற்றப்படாதீங்க. நிதானம் அவசியம். குடும்ப நலன்ல கவனம் வையுங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பாராட்டு மழை பொழியும். திடீர்னு பக்தி மார்க்கததுக்கு மனசு திரும்பும். புதிய முயற்சிகள், முதலீடுகள் இப்ப வேண்டாம். உடல் நலன்ல கவனம் வையுங்க. பொருளாதார நிலை சுமாராகத்தான் இருக்கும். சிக்கனத்தைக் கடைபிடிங்க. எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்குப் பல முறை சிந்திச்சு செயல்படறது நல்லது.

தனுசு

இந்த வாரம் திடீர்னு அழகா தெரிவீங்க. உங்களோட புத்திசாலித்தனம் திறமையெல்லாம் வெளிப்படப் போகுது. விளையாட்டு, ஜாலி பார்ட்டினு மனம் அலையும். அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்கு உயரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு வெற்றிதான். பெயர், புகழ் மதிப்பு உயரும். பெண்கள் புதுசா உடைகள், நகைகள் வாங்க வாய்ப்பிருக்கு. எந்தக் காரியத்திலயும் முழு ஈடுபாட்டோடு இறங்கினால் வெற்றியடையலாம். கொடுக்கல் வாங்கல் விஷயங்கள்ல எச்சரிக்கையா இருங்க. உடல் நலன்ல கவனம் தேவை.

கும்பம்

எதிர்ப்புகளைச் சமாளிச்சு வெற்றி நடைபோடப் போறீங்க. போட்டி பந்தயங்கள்ல நல்ல திருப்பம் ஏற்படும். துணிச்சலான காரியங்கள்ல ஈடுபட்டு பெயர் வாங்கப் போறீங்க. மத்தவங்க மூக்கில் விரல் வைக்கும்படியா சில செயல்களைச் செய்வீங்க. இதனால விருது, பரிசு கிடைக்கப் போகுது. குடும்பத்துல மகிழ்ச்சி பிறக்கும். பார்ட்டி, ஊர் சுற்றல்னு ஜாலி பண்ணப் போறீங்க. வெளியில அலையாதீங்க. உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வர வாய்ப்பிருக்கு. கொடுக்கல் வாங்கல்ல கவனமா இருங்க.

விருச்சிகம்

உங்கள் மதிப்பு, செல்வாக்கு உயரப் போகுது. நீங்க நினைத்து வைத்திருந்த முக்கியமான திட்டங்கள் இப்ப நிறைவேற சான்ஸ் இருக்கு. பணநடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். சிலர் புதுசா வாகனம் வாங்கலாம். பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் எண்ணம் நிறைவேறும். எதிர்ப்புகள் குறையும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு இது சுகமான வாரம். வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரும். மனசுக்கினிய சம்பவம் ஒண்ணு நடக்கப் போகுது.

மகரம்

வீட்ல சுபகாரியம் நடக்க வாய்ப்பிருக்கு. வெளியூர் பயணத்தால சில நன்மைகள் நடக்கும். வெளிநாட்டுல இருந்து உற்சாகமான செய்தி வரப் போகுது. அரசியல்வாதிகள் கொஞ்சம் அடக்கி வாசிக்கறது இப்போதைக்கு நலம். சின்னச் சின்னப் பிரச்னைகள் வந்து தொந்தரவு பண்ணும். கவலையவிடுங்க. வம்பு தும்புல தலைகாட்டாதீங்க. பண நடமாட்டம் தாராளமா இருக்கும். அதுக்காக கண்டபடி செலவழிக்காதீங்க. சில திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கும் வழி இருக்கு.

மீனம்

உள்ளம் கொள்ளை போற மாதிரியான சம்பவங்கள் நடக்கப் போகுது. புதிய பொருள்கள் வாங்கப் போறீங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்க வெற்றி நடை போடுவாங்க. கணவன் மனைவி உறவு சீரா இருக்கும். சின்னச் சின்னப் பிரச்னைகள் வர வாய்ப்பிருக்கு. கொடுக்கல் வாங்கல்ல கவனமா இருங்க. செலவு எகிறும். சிக்கனம் அவசியம். பெற்றோர் உடல் நலன்ல கொஞ்சம் கவனம் செலுத்துங்க.

அக்னி சர்மா பக்கம்

பிரியாத வரம் வேண்டும்



குல்ஃபி ஐஸ் என்றால் கூட காக்காய் கடி கடித்துச் சாப்பிடும் சைல்ட்ஹுட் ஃபிரெண்ட்ஸ் பிரசாந்த் - ஷாலினி. பிரிவை உணர் கிறபோதுதான், அடியாழ மனசுக்குள், அவர்களையும் அறியாமல் உறைந்து கிடக்கும் காதல் வெளிப்படுகிறது.

எங்கே தன் நட்பின் 'கற்பை' சந்தேகப்பட்டுவிடுவாளோ என்று பிரசாந்த் பல்லைக் கடித்துக் காதலை மறைக்க, இதைப் புரிந்து கொள்ளும் ஷாலினி "அடப்பாவி... நீ சொன்னேன்னு தானே இன்னொருத்தனுக்கு ஐ லவ் யூ சொன்னேன்" என்று அதே காதலோடு கதற.. அதற்குள் நிச்சயதார்த்தம் வரை போய் விடுகிறது ஷாலுவின் திருமண ஏற்பாடு.

ஜுஜுபி...! காதலுக்கு முன்னால் நிச்சயதார்த்தமாவது ஒன்றாவது என்று ரயில்வே ஜங்ஷனில் (இனி ரயில் நிலையங்களுக்கு தாஜ்மஹால் அந்தஸ்து தரும்படி காதலர்கள் மம்தா பானர்ஜியிடம் மனு போட்டாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை) இருவரையும் இணைத்து வைத்து விடுகிறார் இயக்குனர்.

படத்தில் தனிப்பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி நடத்துபவர் ஷாலினி. பிரசாந்துடன் கூட்டணி அமைத்து வீட்டிலும், கல்லூரியிலும் அடிக்கும் அரட்டையும், அடாவடித் தனமும் அசத்தல் என்றால், தம்மீது பிரசாந்துக்குக் காதல் இருப்பதை அறிந்து, துடியாய்த் துடித்துக் கதறுகிற போது தியேட்டரையே கலங்க வைத்து விடுகிறார்.

'நான் மட்டும் இளப்பமா?' என்று ஷாலினியின் வேகத்திற்கு ஈடு கொடுத்திருக்கிறார் பிரசாந்த்.

மனசு நிறைய தன்னம்பிக்கையோடு, பிரசாந்திடம் சென்று அவரது காதலை யாசிக்கும் சினேகா பாத்திரம் ஒரு ஹைகூ கவிதை.

நட்பின் நெருக்கத்தை முதல் பாதியிலும், காதலின் ஆழத்தை இரண்டாவது பாதியிலும் சொல்ல நினைத்து திரைக் கதையைக் கொஞ்சம் இழுத்து விட்டது முதல் மைனஸ். எல்லா பாத்திரங்களுமே கொஞ்சம் நீட்டி முழக்கிப் பேசுவது கூடுதல் மைனஸ். தவிர கொஞ்சமும் சுகப்படாத இசை.

இந்தக் குறைகளை உடைத்துத் தவிடு பொடியாக்குவது, தமிழ் சினிமாவில் இதற்கு முன் பார்த்திராத புதிய, யதார்த்தம் நிறைந்த, உளவியல் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள காட்சிகள்.

கமல் போன்ற கலாரசனையுள்ள மலையாள இயக்குனர்கள் தமிழில் தொடர்ந்து புழங்கினால் புண்ணியமாய்ப் போகும்.

- விஷுவல்தாசன்

○ ஃபெயில் ○ ஜஸ்ட் பாஸ் ○ ஆவரெஜ்
● அபவ் ஆவரெஜ் ○ டிஸ்டிங்ஷன்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



ஸ்ரீ லக்ஷ்மி ஹயவதன பெருமாள்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka



''உஜாலாவின் உன்னத வெண்மை விஞ்ஞான ரீதியிலான சாதனை.''

INSTA-WHITENING SYSTEM

ஜோதி லேபின் ஆய்வுக் கூடத்தில் தொடர்ந்து நன்கு சோதிக்கப்பட்டு வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்ட உஜாலாவின் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம் (I.W.S.)™ இது தண்ணீரில் உடனடியாகக் கரைவதோடு, துணிகளின் நுட்பமான நூலிழைகளினுள் ஆழ்ந்து ஊடுருவிவெண்மையின் வெளிச்சத்தை துணிகளில் உடனடியாய் வெளிக்கொணர்கிறது. துணிகள் மீண்டும் துவைக்கும்போது, அழுக்குடன் முழுவதும் வெளியே தள்ளப்பட்டு விடுகிறது. நாட்கள் பல ஆனாலும் துணிகளின் இயல்பான வண்ணம் மாறாமல் புதிது போலவே பாதுகாக்கிறது. ஸ்கின் இரிட்டேஷன்-ஓரல் டாக்சிசிடி சோதனைகளில் பாதுகாப்பானது என ஆதாரபூர்வமாக கண்டறியப்பட்ட தயாரிப்பு உஜாலா ஒன்றே.

1983 முதல் அநேக கோடி உள்நாடு-வெளிநாடு வாடிக்கையாளர்களுக்கு முழுதிருப்தியை உஜாலா வழங்கிக் கொண்டிருக்கிறது. பாரத நாடெங்கும் பல மாநிலங்களில் உள்ள ஜோதி லேபின் விஞ்ஞான தொழில் நுட்ப மேன்மை மூலம் கடும் தரக்கட்டுப்பாடு முறைகளால் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு உஜாலாவும் உங்களை அடைகிறது.

விஞ்ஞான ஆதாரமற்ற முறையில், இரசாயன நிறுவனங்கள் தயாரிக்கும், நூலிழைகளை பலவீனப்படுத்தும், வண்ணம் குறைக்கும் மூலப்பொருட்கள் ஏதும் இதில் இல்லை. தரங்குறைந்த, கலப்பட இரசாயனக் கலவைகள் உங்களின் துணிகளுக்கு சேதம் ஏற்படுத்த இடம் அளிக்காதீர்கள்.

உஜாலா என கேட்டு வாங்கும் போது விஞ்ஞானபூர்வமற்ற ஏதேனும் ஒரு போலி தயாரிப்பை நீங்கள் பெறவில்லை என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.



வெண்மையின் புதிய நிறம்

A product of Jyothy Laboratories Ltd.